பக்கங்கள்: 16

விலை ரூபா 10. 00

பொதுசன நூலகம்
10
23 SEP 1998
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
கல்லூர் ஒளநூலகம்

# சங்கமம்
# SANGAMAM

[கூட்டுறவுக் குரல் Voice Of Co.op]

''அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு''

ஆறு 1 | திருவள்ளுவர் ஆண்டு 2029 | கூட்டுறவு தின சிறப்பிதழ் | யூலை 1998 | அருவி 11

## கிளி- மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில்

# எழுச்சிபூர்வ கூட்டுறவு தின விழா!

# பரிசளிப்பு! முத்தமிழ் நிகழ்வுகள்!

உலக கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு எழுச்சி பூர்வமான கூட்டுறவாளர் விழா ஏற்பாடுகள் கூட்டுறவுச் சங்கங்களின் இணைவில் கிளிமாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களாக பல்வேறு வகையான தொழில் சார் மற்றும் விளையாட்டுத்துறை சார்ந்த போட்டிகள் கூட்டுறவாளர்களிடையேயும், பணியாளரிடையேயும், பொது மக்களிடையேயும், பாடசாலை மாணவர்களிடையேயும் இடம் பெற்று முடிவடைந்துள்ளன.

கடந்த சனிக்கிழமை நடைபெற்று முடிந்த அரங்கியல் வெளிப்பாடான நாடகப் போட்டிகளில் இடம்பெற்ற நாடகங்கள் மக்களிடையேயும், நாடக ஆர்வலர் மற்றும் நாடக விற்பன்னர்களிடையேயும் பலத்த பாராட்டையும் ஆதரவையும் பெற்றுள்ளது.

திரு. சொலமன் சூ. சிறில் அவர்கள் தலைமையில் இடம் பெறவுள்ள இறுதி நாள் நிகழ்வுகளில் சங்கமம் சிறப்புமலர் வெளியீடு. மற்றும் இயல், இசை, நாடக அரங்க வெளிப்பாடு நிகழ்வுகளும் இடம்பெறும். சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு நடத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 'கொலரா' விடுதி அமைக்க கூட்டுறவு ஒன்றியம் உதவி!

கிளி-மாவட்டத்தில் இயங்கும் அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் ஆட்கொல்லி 'கொலரா' நோய்க்கு சிகிச்சை அளிக்கும் நோக்கத்துடன் 'கொலரா' விடுதி ஒன்று அமைக்கப்படுவதாக வைத்திய கலாநிதி திரு.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இவ் விடுதி அமைப்புக்கு கரைச்சி பிரதேச பிரிவில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்து ஒன்றியத்தின் ஊடாக ஒரு தொகை நிதி வழங்கியுள்ளார்கள் என அக்கராயன் ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. அ. கிருஸ்ணபிள்ளை தெரிவித்தார்.

## முல்லை தயாராகிறது

முல்லை மாவட்டத்தில் 76 வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முல்லை மா. கூ. ச. ஒன்றியமும், முல்லை மா. கூ. சபையும் இணைந்து கொண்டாட உள்ளன. இதன் முன் அரங்க நிகழ்வாக பாடசாலை மட்டத்தில் கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளும், பணியாளர். அங்கத்தவர்களுக்கான போட்டிகளும் கடற்றொழில் அங்கத்தவர்களுக்கான நீச்சல், தண்டு வலித்தல், படகு ஓட்டம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவி!

கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பதவிக்கான விண்ணப்பங்கள் வடகிழக்கு மாகாண சபையால் கோரப்பட்டுள்ளன.

க. பொ. த. (உயர்தரப்) நான்கு பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்தும் கூட்டுறவு உயர்தரப் பயிற்சி சித்தியடைந்தவர்களிடமிருந்தும் கோரப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான மேலதிக விபரங்களுக்கு கிளி/ மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் திரு சிவகுமாருடன் தொடர்பு கொள்ளவும்.

## பாரஊர்தி உரிமையாளர் போராட்டம் நடத்த முடிவு!

அத்தியாவசிய சேவைத் தொடரணி வாகனங்கள் இராணுவத்தால் மட்டுப்படுத்தப்படுவதைக் கண்டித்து ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டு, கிளிநொச்சி, முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தமது கோரிக்கைகளை ஏற்க அரசு மறுக்கும் பட்சத்தில் உணவுத் தொடரணிச் சேவையையும் இடைநிறுத்தும் போராட்டம் ஒன்றையும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் நடாத்தும்

## 76வது அனைத்துலக கூட்டுறவாளர் தினம் - 1998

இடம்:- இல. 01 .அ.த.க. பாடசாலை, ஸ்கந்தபுரம்.
காலம்:- 09-08-1998 ஞாயிற்றுக்கிழமை.
நேரம்:- காலை 10.00 மணி தொடக்கம்

— தலைமை —

திரு. சொலமன். சூ. சிறில் அவர்கள்
(தலைவர், கிளி- மாவட்ட கூ. சங்கங்களின் ஒன்றியம்)
(தலைவர், கிளி- யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்)

— பிரதம விருந்தினர் —

திரு. தி. இராசநாயகம் அவர்கள்.
(அரசாங்க அதிபர், கிளிநொச்சி மாவட்டம்)
(தலைவர், கிளி- மாவட்ட கூட்டுறவுச் சபை)

— சிறப்பு விருந்தினர்கள் —

திரு. ச. கிருஸ்ணபிள்ளை அவர்கள்
(தலைவர், அக்கராயன் ப.நோ. கூ. சங்கம்)
திரு. நா. முருகேசு அவர்கள்
(உதவி ஆணையாளர் கூ. அ. தி. கிளி/மாவட்டம்)
வைத்திய கலாநிதி ச. விக்கினேஸ்வரன் அவர்கள்
(மாவட்ட வைத்திய அதிகாரி, கிளி/மாவட்டம்)
திரு. ப. அரியரத்தினம் அவர்கள்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர் கிளி/மாவட்டம்
திரு. இ. ஐயாத்துரை அவர்கள்
(பிரதேச செயலர், கரைச்சி)
திரு. இ இரவீந்திரன் அவர்கள்
(பிரதேச செயலர், பூநகரி)
திரு. கா. மத்தியாஸ் அவர்கள்
(பிரதேசசெயலர், கண்டாவளை)

—நிகழ்ச்சி நிரல்—

- மங்களவிளக்கேற்றல்
- தேசியக்கொடியேற்றல்
- அவை வணக்கம்
- கூட்டுறவுக்கொடிகள் ஏற்றல் (கூட்டுறவின் கௌரவ விருந்தினர்கள்)
- கூட்டுறவுத் தீபங்கள் ஏற்றல்
- வரவேற்புரை-வரவேற்புக்கீதம்
- தலைமையுரை
- சிறப்புரைகள்
- ''சங்கமம்'' சிறப்பு மலர் வெளியீடு
- போட்டிகளுக்கான பரிசளிப்பு

முத்தமிழின் முத்தான நிகழ்ச்சிகள்
இயல், இசை, நாடகங்கள்

வெளியீட்டுக்கான ஆதரவு: கிளி. மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் வளமாக வளர்ந்திட்ட கிளி. கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்!

வன்னிப் பெருநிலப்பரப்பில் கூட்டுறவுத்துறையின் வரலாற்றில் கிளி-மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் வளர்ச்சி சர்வதேச ரீதியாகப் பேசப்பட்டுவரும் விடயமாகிவிட்டது. வட தமிழீழத்தில் ஏற்படுக்தப்பட்ட பாரிய இடப்பெயர்வு நடவடிக்கையால் சொல்லொணாத் துன்ப துயரங்களுடன் இடம்பெயர்ந்த மக்களுடன் கூட்டுறவுச் சங்கங்களும் இடம்பெயர்ந்தன. மக்களின் இடர்போக்கும் பணியில் நிரந்தர சங்கங்களும், இடம்பெயர்ந்த சங்கங்களும் ஈடுபட்டிருந்தவேளை மீண்டும் சத்ஜெய நடவடிக்கையால் இடம்பெயர்வு, காடுகளிலும், குடியிருக்க உவப்பற்ற சுகாதார சீர்கேடான இடங்களிலும் குடியேறவேண்டிய நிலை ஏற்பட்டது. மர நிழலிலும் தற்காலிக கொட்டகைகள் அமைத்தும் கூட்டுறவுச் சங்கங்கள் தம் பணியைத் தொடர்ந்தன.

மக்களின் இடர்போக்கும் பணியில் நிவாரணம் வழங்கல், அத்தியாவசிய பங்கீட்டுப்பொருள் வழங்கல் ஆகியவற்றில் கருத்து வேற்றுமைகளும் ஒற்றுமையீனமான தன்மையும் அவதானிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் மாதாந்த மகாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்களிடையே பொருளாதார ரீதியான உச்ச அமைப்பு ஒன்று தேவையென உணரப்பட்டு 1997-04-29ல் அதற்கான ஆரம்ப கூட்டம் கூட்டப்பட்டு 1997-07-12ல் பதிவுசெய்யப்பட்டது.

கூட்டுறவுச் சங்கங்களுக்கான ஒன்றித்த கொள்வனவுக் கொள்கை, இதன்மூலம் கொள்வனவுப் போட்டிகள், விலைத் தளம்பல்கள், மிதமிஞ்சிய கொள்வனவுத் துணைச் செலவுகளைக் குறைத்தல், மாவட்டத்தில் ஒருசீரான விலைக் கொள்கையைப் பேணுதல், மற்றும் சமூகநல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளுதல், கூட்டுறவுச் சங்கங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல் போன்றன இதன் பிரதான நோக்கங்களாகும்.

முதலில் மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் ரூபா 10000 ஐ (பத்தாயிரம்) பங்குப் பணமாகவும், ப. நோ. கூ. சங்கங்கள் கொள்வனவு வைப்புப்பணமாக ரூபா 500000ஐ (ஐந்து லட்சம்) செலுத்தி ஆரம்ப நிதியை ஏற்படுத்தின. இந் நிதியையும் ஒன்றியத்தின் பலத்தால் கடன் கொள்வனவையும் மேற்கொள்ள முடிந்தது. முதலில் ஒருசில அத்தியாவசியப் பொருட்கள் கேள்விகோரி, தொகையாகப்பெற்று அங்கத்துவ சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டது. குறைந்த விலையில் வழங்கும் பணியில் 0.05 வீதத்தை ஒன்றியம் லாபமாக அறவிடும திட்டத்தின் மூலம் திரட்டும் பணமும் சமூகநல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் ஏனைய நிர்வாகச் செலவுகளுக்கும் பயன்படுகின்றது. பலவித தடைகளைத் தாண்டி குறுகிய இக் காலத்தில் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்குமான கொள்வனவுத் தேவையை நிறைவேற்றும் அளவுக்கு வளர்ந்துவிட்டோம். இத் தேவைகளை நிறைவேற்ற வேண்டிய ஆளணி முதலில் சங்கங்களினால் சேவை அடிப்படையில் விடுவிக்கப்பட்டது. இன்று காரியாலயப் பணிநிலைக்குத் தேவையான பணியாளர்களையும், வர்த்தக முகாமையாளர் ஒருவரும் சங்கங்களின் சேவை அடிப்படையில மர்ந்த கொள்வனவு உத்தியோகத்தர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

75 வது கூட்டுறவாளர் தின விழாவினை கூட்டுறவு ஒன்றியம் நடாத்தி அதில் அடையாளப்படுத்தப்பட்ட சமூகநல அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தியும், செயற்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது. குறிப்பாக கூட்டுறவாளர் தின விழா நடந்த 1997-09-12ம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலைச் சிறார்களுக்கு இலைக்கஞ்சி வழங்கும் திட்டத்தில் இன்று மாவட்டத்தில் 22 பாடசாலைகளைச் சேர்ந்த 27000 மாணவர்களுக்கு மேல் பயன்பெறுகின்றார்கள். இதன் மூலம பாடசாலைகளில் வரவு கூடியதுடன் கல்வியிலும் அபிவிருத்தி காணக்கூடியதாகவுள்ளது, வன்னியில் மக்களை வாட்டும் கொடிய மலேரியாவைக் கண்டறியவும், சிகிச்சை அளிக்கவும் முழங்காவிலில் பரிசோதனை ஆய்வு கூட வசதி. வசதி குறைந்த மக்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கும் திட்டம், கிளி- முல்லை மாவட்ட பிரதான இணைப்பு, இரணைமடு குளவீதித்திருத்தம், முதியோர் இல்லபராமரிப்புப்பணி, கூட்டுறவுப் பணியாளர் நலவுரிமை பேணுகைத் திட்டம் போன்றன நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் உறுதுணையாக இருந்த கூட்டுறவு வங்கிமுறை 1963ம் ஆண்டுடன் மக்கள் வங்கி உருவாக்கல் சட்டத்துடன் செயலிழந்தது. கூட்டுறவு மாகாண வங்கியை மீண்டும் அமைப்பதற்கான செயற்பாடுகளை கூட்டுறவுத்திணைக்களத்துடன் சேர்ந்து முனைப்புடன் செய்துவருகின்றது.

இத்துடன் யுத்த அனர்த்தங்கள், மருந்துத் தடை, நிவாரணவெட்டு, மேலதிக வரிச்சுமை ஆகியவற்றுக்கெதிராக உரிய நேரங்களில் வெகுஜன அமைப்புப் போராட்டங்களை நடாத்தி சர்வதேச அரங்கில் தெளிவுபடுத்தி வெற்றிகளும் காணப்பட்டுள்ளது. கூட்டுறவு ஒன்றியத்தின் செயற்பாடுகளையும் ஏனைய கூட்டுறவுச்சங்கங்களின் அபிவிருத்திகளையும், கூட்டுறவுக்கல்வியையும் வெளிக்கொணரும பணியில் பிரதான இடம் வகிப்பது ''சங்கமம்'' திங்கள் இதழ். 75ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழாவில் மலர்ந்த இமமலர் இன்று 76ஆவது கூட்டுறவாளர் தின விழாவுடன் தனது பதினொராவது இதழை பல மலர் தொடுத்த மாலையாக வெளியிட இருக்கின்றது. சங்கமம் பத்திரிகை தமிழீழப் பிரதேசத்தில் மட்டுமல்ல சர்வதேசரீதியாகவே தமிழர் வாழ்விடங்களெங்கும் சென்றுசேர எமது பத்திரிகைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் வளர்ச்சியில் பலவித தடைகள் ஏற்பட்டன. ஒன்றியம் இயங்க முடியாமல் போய்விடுமோ என்ற அச்சம் எமக்கிருந்தது எமது மாவட்டத்திலே பிறந்து இளமையிலே தன்னைக் கூட்டுறவுத்துறையில் இணைத்து ஒரு சர்வதேச கூட்டுறவாளர் வரிசையில் வந்த எமது மாவட்டத்தின் அரசாங்க அதிபராக இருக்கும் உயர்திரு. தி. இராசநாயகம்அவர்கள் இத்தடைகளை சாதுரியமாக நீக்கியுள்ளார் இவருக்கும் இக் கூட்டுறவு ஒன்றியத்தின்.உருவாக்கம், வளர்ச்சி ஆகியவற்றில் பெரும்பங்கு உண்டு. கிளி. மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகஇருந்தஉயர்திரு தி.சபாரத்தினம் அவர்களுக்கும் அப்போதைய மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த உயர்திரு எஸ். தில்லைநடராசா அவர்களுக்கும் தற்போது இதனை வளர்த்தெடுப்பதில் பெரும்பங்கு வகிக்கும் கிளி.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் உயர்திரு நா. முருகேசு அவர்களுக்கும் நன்றியறிதலை தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியில் பிரதான இடம் வகிப்பது பணிப்பாளர்களும், பணியாளர்களும். இந்த வகையில் களராத ஊக்கத்துடனான பணிப்பாளர்களின் விடாமுயற்சியும், தலைமைத்துவ பண்புள்ள தலைமையும வினைத்திறனுடனான ஆளணித் தொகுதிகளும், பத்திரிகைக் குழுவும் இவ் ஒன்றியத்தை வளர்த்தெடுத்ததுடன் எம் முயற்சியையும் கூட்டுறவால் சாதித்து விடுவோம் என்ற உண்மையையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

''கூட்டுறவே நாட்டுயர்வு''

நன்றி.

**சி. புவனேஸ்வரன்**

செயலாளர்,

கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்,

ஸ்கந்தபுரம்.

## அறிவுக்கு அமுதூட்டும் சங்கமமே நீ வாழி!

சங்கடமான காலகட்டத்தில் மக்கள் மனங்கள் துயரமேகத்தால் மூடியுள்ள இவ்வேளையில் கூட்டுறவின் அவசியம், கூட்டுறவின் மகத்துவம், கூட்டுறவின் நோக்கங்கள் என்பவற்றை அறிந்து வாசகர்கள் பயன்பெறவும் மற்றும் எந்தெந்தத் துறைகள் அவசியமோ அந்தந்தத் துறைகளையெல்லாம தன்னகத்தே கொண்டதாக பண்டைக்காலம் முதல் யதார்த்தம் வரை கால மாறுபாடுகள் இன்றி பல்சுவை நிறைந்த அறிவுக்கு அமுதூட்டும் படைப்புக்களை சங்கமம் தொகுத்து வெளியிடுவது கண்டு மன மகிழ்வடைகிறோம்.

தொடர்ந்தும் இளமை குன்றா புதுப் பொலிவுடன்இவ் இதழ் வெளிவரஆசித்து நிற்கிறது விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச்சங்கம்.

இவ்வண்ணம்
பணியாளர்கள், பணிப்பாளர்கள்
விநாயகபுரம் விவசாயிகள் கூட்டுறவுச் சங்கம்
முழங்காவில்

## பாராட்டு

கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதில் கிளி/ கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியதாகும்.

க. கணேஷ்
அரச அதிபர்
வவுனியா

## விதந்துரை!

1 மாவட்ட நுகர்வோரின் நலன் கருதி பொதுவான கொள்வனவு நடைமுறை ஒன்றை மேற்கொள்ளல்.
2 கொள்வனவு நடைமுறையில் ஏற்படும் மனிதவலு மற்றும்பண விரயங்களைத் தடுத்தல்,
3. பொதுவான விலைக்கொள்கையை எல்லாச் சங்கங்களுக்கிடையேயும் பேணுதலுடன், போட்டி மற்றும் முறைகேடுகளைத் தவிர்த்தல்

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் இடம் பெயர்ந்த மற்றும் நிரந்தர மக்களின் நலன் கருதி கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே மேற்குறித்த செயற்பாடுகளையுடைய அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என கிளிநொச்சி செயலக அத்தியாவசிய குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ள அமைப்பாகவே கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

எஸ். தில்லைநடராஜா,
முன்னாள் அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## வாழ்த்து!

எமது ஒன்றிய அங்கத்தவர்களது நிதி அடிப்படையிலான கஸ்டங்களை இனங்கண்டு உரிய நேரத்தில் எமக்கு உதவ முன்வந்துள்ளமை எம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அத்துடன் கல்விக் குழுவின் உருவாக்கத்தையும் எமது ஒன்றியம் வரவேற்கிறது. தங்களது சேவை தொடர்ந்தும் பெருகவேண்டுமெனஎமது ஒன்றியம் இச் சந்தர்ப்பத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றது.

யாழ். பல்லைக்கழகம்
கிளி/மாவட்ட மாணவர் ஒன்றியம்.

## வாழ்வியலை உயர்த்த பணிபுரியும் கூட்டுறவு!

வளம் உள்ள வன்னி மண்ணில் வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பணியைத் தாங்கிச் செல்லும் நிறுவனங்களாக கூட்டுறவு நிறுவனங்கள் பணிபுரிகின்றன. கூட்டுழைப்பு என்பது எமது இன்றைய எம் மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் இப்பணி தொடர கிளி-மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இணைந்த ஒன்றியத்தில் செயற்பாடு போற்றக்கூடியது.
இன்று நாம் கொண்டாடும் 76வது சர்வதேச கூட்டுறவாளர் தின விழாவை வாழ்த்திகூட்டுறவாளர்களாகிய நாம் பலப்படுவோம்.

தலைவர்
பூநகரி ம. தெ. வ. கூ. சங்கம்
முழங்காவில்

## சர்வதேச தரத்துக்கு வளர்ந்துள்ள சங்கமம்!

76 ஆவது சர்வதேச கூட்டுறவாளர்கள் தினவிழாவினைச் சிறப்பிக்க கூட்டுறவுத் திங்கள் இதழாம் ''சங்கமம்'' விசேட பதிப்பாக வருவத கண்டு அகமிகமகிழ்கின்றோம். வளர்ந்து வரும் எமது சங்கத்தை போன்ற சங்கங்களை உற்சாகப்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு தமிழீழப் பிரதேசத்தில் மட்டுமல்ல சர்வதேசரீதியாக செல்லுமளவுக்கு வளர்ந்துவிட்ட சங்கமம் பத்திரிகை சேவை தொடர எமது சங்க சார்பான நல்லாசிகளை கூறுகின்றேன்.

\- நன்றி -

கூட்டுறவு சேவையிலுள்ள
கி. தில்லைநாதன்
தலைவர்
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்திகள்

## அவதியுறும் மக்களுக்கு கைகொடுக்கும் கூட்டுறவு!



கிளிநொச்சி மாவட்ட ப. நோ: கூ. சங்கங்கள் இணைந்து கொண்டாடும் சர்வதேச கூட்டுறவுத் தின விழாவில், ''சங்கமம்'' பத்திரிகை பல அரிய கலை, கட்டுரை அம்சங்களைக் கொண்ட மலராக மலர்வதனையிட்டு மிகவும் மகிழ்வுடன் பெருமையடைகின்றேன்.

தற்போது போர்ச் சூழ்நிலைகளின் பாதிப்பினால் உயிரிழந்து, உடைமைகளிழந்து, அல்லற்பட்டு அவதியுறும் மக்களுக்கு, கூட்டுறவொன்றே கைகொடுத்து உதவும் 'ஒரேயொரு மார்க்கமாகும். வீட்டிலிருந்து சமூகம் வரையும் கூட்டுறவுக் கொள்கை போதிக்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டும். இவ் இயக்க சிந்தனைகளைக் கற்றுத் தெளிந்து பின்பற்றினாலேயே தற்போதைய சமூகம் தலை நிமிர்ந்து வாழும் பலத்தினைப் பெறும்

இவ்வாறே, கூட்டுறவுச் சங்கங்களும் தங்கள் சிந்தனைகளை மாற்றி, மக்களியக்கமாக, மக்களுக்குச் சேவையாற்றும் நிறுவனங்களாக இயக்கம்பெற வேண்டும். எமது மக்களை - அல்லலுறும் மக்களை, வாழவைக்கும் திறனுடைய ஒரே ஒரு அமைப்பு கூட்டுறவு அமைப்பொன்றேயாகும்.

பல பாதகமான அழுத்தங்களுக்கீடுகொடுத்து சங்கமம் - தளரா நடையுடன் வெளிவருவதனையிட்டுப் பெருமையடைகின்றேன். சங்கமத்துக்கு சமூகக் கடமைகள் நிறையவுண்டு. அதனை நிறைவேற்றுவது மிகவும் அவசியம்.

' சங்கமம் ' ஆல்போல் தழைத்து, அறுகுபோல் வேரூன்றி வளர என் ஆசிகள்

''கூட்டுறவே நாட்டுயர்வு''

**தி. இராசநாயகம்,**
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## உறவுக்கு கை கொடுப்போம்! உரிமைக்குக் குரல் கொடுப்போம்!!



அனைத்துலக கூட்டுறவுத் தின விழா உலகளாவிய முறையிலே நினைவு கூரப்படும் இவ் வேளை தமிழீழத்திலே குறிப்பாக வன்னிப் பெருநிலப் பரப்பின் கிளி/மாவட்டம் நன்றியுடன் விழாக்கோலம் பூணுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

கூட்டுறவு அமைப்பு இன்று உலகெல்லாம் பரவி மக்களது சமூகப் பொருளாதார, கல்வி, பண்பாட்டின் அபிவிருத்திக்குப் பாரிய பங்களிப்பினை அளித்து வருகின்றது இது மிகவும் நெகிழ்ச்சியானதுந் தனித்துவத்தையும் கருத்திற்கொண்டு மக்கள் தேவைகளையும் சேவைகளையும் அங்கத்தவர்கள் கூட்டு முயற்சியில் பொதுவாகத் திட்டமிட்டு இயங்கும் சமத்துவமும். ஜனநாயக ஆளுமை கொண்ட ஒரு சமூக நீதிக்கான நிறுவனம், இதனால் தான் மக்கள் மத்தியில் பேசும் பொருளாகக் கூட்டுறவு நடவடிக்கைகள் உயர்ந்திருக்கிறது.

ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் என்ற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு 19 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்து தேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்பு முறையானது, உலகளாவிய ரீதியில் பல்கிப் பெருகி ஸ்ரீலங்காவில் 1911 ஆம் ஆண்டு காலடி பதித்து ஒரு நோக்கப் பார்வையில் சேவைகளை ஆற்றிவந்த போதிலும். ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட அரசியல் சமூகப் பொருளாதார மாற்றங்களின் காரணிகளால், கூட்டுறவில் பல மாற்றங்கள் வடிவமைக்கப்பட்டு, மாறி வருகின்ற உலகப் பொருளாதாரப் போக்குக்கு ஏற்ப நாட்டினதும், நாட்டின் அச்சாணிகளாக விளங்குகின்ற கிராமங்களின் அபிவிருத்தியில், கூட்டுறவு பலநோக்குக் கொண்ட நிறுவன வடிவமைப்புக் கொண்டுள்ளமை உண்மையில் பாராட்டுக்குரியது. இந்த வகையில் இந்தப் பெருமையில் ' தமிழீழம்'' தனித்துவம் பெற்றுள்ளது.

போர் நடவடிக்கைகள், பொருண்மிய நெருக்கடிகள் மத்தியில் கூட்டுறவின் சமகாலப் பங்களிப்பு அதன் இலட்சியப் பயணத்தின் மைல்கற்கள். ஆனால் நுகர்வுப் பொருள் வியாபாரத்துடனும், நிவாரணப்பொருள் விநியோகத்திலும் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்தாது, மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப வள நிலைக்குத்தக்க உற்பத்திசார் தொழில் நடவடிக்கைகளில் முதலீடு செய்வது நீண்டகாலப் பயன்பாட்டுக்கு வழி வகுக்கும்

''ஒற்றுமையே பலம்'' என்ற அமுதவாக்குக்கு களம் அமைத்து நிற்கும் கிளி. மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம். பொதுப்பணியில் இன்று உலகின் கவனத்தைத் தொட்டுநிற்கின்றது. இந்தவகையில் கூட்டுறவின் குரலான சங்கமத்தின் சேவையும் அதன் கல்விசார் நடவடிக்கையும் பாராட்டுக்குரியது.

நான் எனக்கு என்ற (கூ) வாழ்வு நீங்கி, எங்கள் சமுதாயம் என்ற புதிய (கூ) வாழ்வு உதயமாக, சிந்தனையால் செயற்பட்டு கூட்டுறவுக்கு புதிய செயல்வடிவம் கொடுப்போம். கரங்கள் உயர துயரம் விலகும். கரங்களை உயர்த்தி எழுவோம் எமது எழுச்சி நாளினிதே

வாழ்க கூட்டுறவு. வளர்க கூட்டுறவு.
எங்கும் கூட்டுறவு. எல்லாம் கூட்டுறவு.

**சொலமன் - சூ. சிறில்**
கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்.
தலைவர். கிளி/யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்.

## மக்கள் மனதில் அழியா இடம் பெற்று வாழ்க!



நாளைநடப்பதை என்னவென்று அறியாத வன்னிப் பெருநிலப்பரப்பு மக்களின் மனதில் இடம்பிடித்துள்ள கூட்டுறவு இயக்கம், ஆனந்தத்திலும் துக்கத்திலும் மக்களின் பசி போக்கும் இயக்கமாக தன்சேவையை உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடின்றி தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

படிப்படியாக சகல துறைகளிலும் பங்கெடுத்துக் கொள்ளும் கூட்டுறவுஇயக்கம் பாடசாலைகள் தோறும் இலைக்கஞ்சித் திட்டத்தைச் செயற்படுத்தி கல்வி வளர்ச்சியிலும் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது.

அதிக வேலைப்பழுவை சுமந்துகொண்டு பகல்முழுவதும் கடமையில் ஈடுபடும் கூட்டுறவு சேவையாளர்களது பற்று மிக்க சேவையால் எமது மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்புக்கள் சிறப்பாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சகல முன்னோடிச் செயற்பாடுகளுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டியாகவும். பாதுகாவலாகவும் செயல்பட்டு கூட்டுறவு அமைப்புக்களின் செயற்பாடுகளை மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளது.

இத்தகைய கூட்டுறவாளர்களால்வருடாந்தம் கொண்டாடப்படும் கூட்டுறவு தின விழா சகல சிறப்புக்களையும் பெற்று மக்கள் மனதில் அழியா இடம் பெற வாழ்த்துகின்றேன்.

**நா. முருகேசு,**
கூ. அ. உ. ஆணையாளர்,
கிளிநொச்சி.

## ''சங்கமம்'' நெறிப்படுத்தி வழிப்படுத்தும் பத்திரிகை!



விரிந்து பரந்துள்ள வன்னிப் பெருநிலப்பரப்பில் போரின் அனர்த்தங்களினால் உண்டான துன்ப துயரங்கள் நிறைந்த மக்கள் வாழ்வியல் துயரங்களை நீக்குவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பங்காற்றி வருகின்றன. இந்த வகையில் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் துயர் துடைப்புப் பணியில் கணிசமான பங்காற்றி வருவது எம்மை மகிழ்விக்கின்றது

கிளி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் சிறப்பான பணிகளில் ஒன்று சங்கமம் பத்திரிகை வெளியீடாகும். நெருக்கடியான காலகட்டத்தில் பல இடர்களுக்கு மத்தியிலும் கடந்த ஓராண்டு காலம் இப் பத்திரிகை மாதாமாதம் மலர்ந்து கொண்டிருக்கின்றது. கூட்டுறவுக் கொள்கைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதும், கூட்டுறவு நிறுவனங்களின் சேவையினை மக்கள் அறியச் செய்தலும் மக்களுக்கு ஏற்படும் இடர்களை உலகறியச் செய்தலும், கூட்டுறவாளர்களது ஆக்கங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதும் நீதி தவறாமல் கூட்டுறவு நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளையும் சுட்டிச் காட்டி நெறிப்படுத்தி வழிப்படுத்துவதுமாக இப்பத்திரிகை சிறப்பான சேவையாற்றி வருகின்றது.

இப்பத்திரிகை ஒரு வயதினைப் பூர்த்தி செய்யும் இக் காலகட்டத்தில் இதன் சேவையை பாராட்டி மேலும் பல்லாண்டுகள் இப்பத்திரிகையின் சேவை மிளிர வேண்டுமென எமது நல்லாசிகளை கூறிக் கொள்கின்றேன்.

**சி. பொன்னம்பலம்,**
தலைவர் முல்லை மாவட்ட
கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், புதுக்குடியிருப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது பார்வையில்...

# கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் வளர்ச்சி!

கிளிநொச்சி மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள நிரந்தர ப.நோ.கூ. சங்கங்களுக்கு மேலான எண்ணிக்கையில் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த ப.நோ.கூ. சங்கங்கள் தமது அமைவிடங்களை அமைத்து செயற்பட்டு வந்தவேளை செயற்பாட்டு ரீதியிலும் நிர்வகிப்பு ரீதியிலும் முரண்பாடுகள் அத்தகைய இருபகுதி நிறுவனங்கள் மத்தியிலும் தோன்றப் பெறவுரத் தொடங்கின. இந்நிலையில் அவர்கள் மத்தியில ஒற்றுமையையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்தி நிரந்தர மக்களுக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் தடையற்ற சேவைகளை வழங்குவதற்கு ஒருங்கிணைப்பு ஒன்று அவசியமாக்கப்பட்டது. இதன காரணத்தினால் மாவட்டத்திலுள்ள சகல ஆரம்ப இரண்டாம படிச் சங்கங்களை அழைத்து ஒன்றியம் ஒன்று ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்தகைய நிறுவனம் ஒன்று ஆரம்பித்ததினால் எதிர்பார்த்ததைவிட பின்னரும் கூடுதல் பயன்கள் இம் மாவட்டத்துக்கும் பாவனையாளர்களுக்கும் சங்கங்களுக்கும் கிடைத்தது. இந் நிறுவனத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்த தினத்தில எனது கருத்தில் இத்தகைய ஒரு தாய நிறுவனம் ஒன்று வடக்குக கிழக்கு மட்டத்தில் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் அதன் மூலமாக கூட்டுறவு நிறுவனங்கள் மத்தியில் ஒற்றுமையையும், தமது தேவைகளை ஒருங்கிணைப்படுத்தி ஓங்கி ஒலிக்கும் குரலொன்றை தாமதமாக்கிக்கொள்ளும் வசதிகள் ஏற்படுமென்று கூறியதுடன் பக் கருத்துக்கள குறிப்புக்களிலும் இடம்பெற்றுள்ளது.

இதுநாள்வரை தனித்தனிச் சங்கங்கள் மாவட்டத்துக்கு வெளியே தனித்தனி கொள்வனவு உத்தியோகத்தர்களை அமர்த்தி வேறுபட்ட விலைகளில் பொருட்களைத் தருவித்து வந்ததினால் விரயங்கள அதிகரித்ததுடன் மாவட்டத்தில் விலைத் தளம்பல்கள் ஏற்பட்டு வந்தது. தற்போது ஒன்றியம் மூலமாகவே ஒருமுகப்படுத்திய கொள்வனவுகளை மாவட்டம் முழுவதற்கும் கூறு விலைகளைப் பெற்று வவுனியாவுக்கும் அதற்கப்பாலுள்ள பிரதேசங்களிலிருந்தும் பொருட்கள தருவிக்கப்பட்டு அங்கத்துவ சங்கங்கள் ஊடாக பங்கீடு செய்வதினால் வழங்கல்களையும், ஒரு கொள்கைத் திட்டத்தின் கீழ் கொண்டுவந்து ஒரே விலையில மாவட்டம் முழுவதற்கும் பொருட்களைத் தருவிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன் விளைவாக ஒப்பு நோக்கக்கூடிய அளவில் கொள்வனவு விலைகளின் வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டு அங்கத்துவ சங்கங்களுக்கும் பாவனையாளர்களுக்கும் அதன் பயன்கள் மீளளிக்கப்பட்டுவருகின்றது

நிதி வசதி குறைந்த சங்கங்கள் கூட ஒன்றியம் மூலமாக ஏற்பாடுசெய்யப்பட்டு வரும் கடன் கொள்வனவுகள் மூலம் பொருட்களைக் கடன் அடிப்படையில் பெற்று ஒன்றியத்தினூடாக விற்பனை தொகைகளைச் செலுத்தி தமது வியாபார சக்திகளை அதிகரித்து வருகின்றனர்.

பல கொள்வனவு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பிரயாணக் கொடுப்பனவுகள். அயலக் கொடுப்பனவுகள் என்பன கணிசமான அளவில் குறைக்கப்பட்டதுடன் இதர கையாளுப் செலவுகளும் குறைக்கப்பட்டு வந்துள்ளன.

ஒன்றியம் அங்கத்துவ சங்கங்களுக்கு ஏற்கனவே இருந்த சர்தை விலையிலும் குறைவாகப் பெறும் பொருள்விலைகளில் 0.5 வீதத்தை தனது பங்களிப்பாகப் பெற்று அத் திரட்டிய நிதியிலிருந்து மாவட்டத்தின் பல பொது நல சேவைகளை நிறைவேற்ற வாய்ப்பும் பெற்றுள்ளது. வறுமையின் காரணமாக உணவின்றி பாடசாலைக்குச் செல்லாதிருந்த இடம்பெயர்ந்த நிலையில் இம் மாவட்டத்தில் கணக்கிடப்பட்ட 30 ஆயிரத்துக்கும்மேற்பட்டவர்களுக்குப் பாடசாலைகள் மூலமாக ஆரம்பிக்கப்பட்ட போசாக்கு ஆலைக்கஞ்சித் திட்டத்தின் கீழ் 22 பாடசாலைகளுக்கு அவ் ஒருங்கிணைந்த நிதிமூலம் போசாக்குணவை வழங்கி மாவட்டத்தின் சமூகப்பொறுப்பில் கணிசமான பகுதியை வேறு அரச சார்பு நிறுவனங்களுடன் இணைந்து நிறைவேற்றிவைக்கின்றது. அதன் பேறாக அரச செயலகத்தில் நடைபெறும் அத்தியாவசிய சேவைக்குழுக் கூட்டத்தில் மேற்கொண்ட மீளாய்வின்படி சிறார்களின் பாடசாலை வரவு 75 வீதத்துக்கு மேல் அதிகரித்தது வெளிக்கொணரப்பட்டது. இத்தகைய செயற்பாடுகளினால் கூட்டுறவு நிறுவனங்களின் மதிப்பு சமூகத்தில் உயர்த்தப்பட்டதுடன் பல்வேறுபட்ட ஒத்துழைப்புகளும் கூட்டுறவுச் சங்கங்கள்பால் அதிகரித்து வருகின்றது.

கூட்டுறவு நிறுவனங்களின் ஒலிக்கும் குரலாக 'சங்கமம்' என்ற பெயரில் இவ் ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டு வரும் மாதாந்த கூட்டுறவுச் சஞ்சிகைமூலமாக இம்மாவட்டத்தினது மாத்திரமின்றி வன்னிப் பிரதேசத்தில் சகல கூட்டுறவு அமைப்புக்களினதும் கூட்டுறவின் குரலாக இதுவளர்ந்துவருவது ஆரோக்கியமான நிலையைக் காட்டி நிற்கின்றது.

இம் மாவட்டத்தின் பல தரப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டுறவுச் சங்கங்கள் தொடர்பான தேவைகள் தொடர்புகள் சகலதும் இவ் ஒன்றியம்மூலமாக இலகுபடுத்தப்பட்டது.

இம் மாவட்டத்தின் இவ்வொன்றியம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு போர்ச் சூழல் காரணமாக அரசின் பொருளாதாரக் கட்டுப்பாட்டின கீழ் பூர்த்தியாக்கப்படாத சமூக சேவைகளான சுகாதாரம். கல்வி, பாதைசீரமைப்பு, குடியிருப்பு வசதி என்பவற்றுக்கு தொடர்ச்சியான தனித்தனி கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அத்தியாவசிய குழுக் கூட்டங்கள் மூலமாக ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நிதிப் பங்களிப்புக்களைச் செய்து நிறைவேற்றிவந்தபோதிலும் அவை கூட்டுறவுச் சங்கத்தின் தனித்துவமான பங்களிப்பைக்காட்டும் வகையில் ஏனையோர் பார்த்து உணரக்கூடிய வகையில் வெளிக்கொணரப்படாது மாவட்டத்தின் பொதுப் பங்களிப்பாகவே மறைந்து வந்துள்ள நிலை மறி இவ் ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டதன் பின் தனித்தனி நலத் திட்டங்கள் ஒன்றியத்தினூடாக நிறைவேற்றப்பட்டு அவை கூட்டுறவு நிறுவனங்களின் பெயரில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களாக உருவம்பெற்றுள்ளது மாவட்டக் குறிப்புக்களில் இடம்பெற்றுள்ளது.

ஒன்றியத்தின் தொழிற்பாடுகள் ஏற்கனவே முன்கூறப்பட்ட விடயங்களை அடக்கியுள்ளதுடன் எதிர் காலத்தில் இவ்வொன்றியம் மாவட்ட ரீதியாக உப அலுவலகங்களைக் கொண்டு வடமாகாணம் முழுவதற்கும் தனித்துவமான தாய் நிறுவனமாக ஏற்கனவே சொன்ன நடவடிக்கைகளின் பயன்களை மையப்படுத்திய அளவில் ஏனைய மாவட்டங்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதுடன் நாளடைவில் இதன் தனித்துவ தன்மையை வடகிழக்கு ரீதியாக விஸ்தரிப்பதும் சம்பந்தப்பட்ட பகுதிக் கூட்டுறவாளர்களது இணக்கத்துடன் சாத்தியமானதாக இருக்கும். இது தொடர்பில் 03.04.1998 அன்று கிளிநொச்சி மாவட்ட ஒன்றியப் பணிப்பாளர் சபை முல்லை மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் நெறியாளர் சகலரையும் சந்தித்த கூட்டமொன்றில் வன்னிப்பெரு நிலப்பரப்பிலுள்ள சகல மாவட்டங்களிலும் ஒன்றிய நடவடிக்கைகளை மையப்படுத்தும் வகையில் கருத்துப் பரிமாற்றம் செய்து ஏனைய வன்னி மாவட்டங்களிலும் ஒன்றியத் துணை அலுவலகங்களைத் திறப்பதற்கும் ஒன்றிய செயற்பாடுகளை அறிமுகப்படுத்தும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்ய துணைக் குழுக்களையும் தெரிவு செய்து சென்றது.

இந் நிறுவனம் ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழிகாட்டுவதற்கும் தொழிற்பாடுகளை இலகுபடுத்துவதற்கும், ஒருங்கிணைப்புக்களைச் செய்து வருவதால் தனித்தனி சங்கங்களுடன் முரண்பாடுகள் தோன்றும் சந்தர்ப்பங்கள் எழவில்லை.

இந் நிறுவனத்தில் மாவட்டத்திலுள்ள சகல ஆரம்ப, இரண்டாம்படிச் சங்கங்களும் அங்கத்தவர்களாக இணைந்து செயற்படுகின்றனர்.

மாவட்ட கூட்டுறவுச் சபையினது தொழிற்பாடுகள் கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகளுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் வர்த்தக நடவடிக்கை தொடர்பானதும், ஏனைய சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பானதும் தொழில் நுட்ப நிபுணத்துவ நடவடிக்கைகளை வளர்ப்பதற்கு வாய்ப்புக்களைப் பெற்றிருக்கவில்லை. இதனால் ஒன்றியத்தின் ஊடாக இவைகளை நகர்த்துவதும் இலகுவாக்கப்பட்டுள்ளது. மேலும் கூட்டுறவின் குரல் சர்வதேச மட்டத்தின் பார்வையையும், கூட்டுறவின் சேவைகள் சர்வதேச மட்டத்தின் வரவேற்பையும் பெற்றமை மிகவும் மகிழ்ச்சியானதே. இவை யாவும் கூட்டுறவின் வளர்ச்சியின் குறிகாட்டிகளாகும். மேலும் கூட்டுறவாளர்களின் சர்வதேச தினமான இன்றைய நாளில் உங்களுடன் இணைந்து மகிழ்வை பகிர்ந்து கொள்ளுகிறேன்.

**தி. சபாரத்தினம்,**
உதவி ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
முல்லை மாவட்டம்.

## இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் கூட்டுறவே!

இன்றைய நாள் உலக கூட்டுறவாளர் நாள். நலிவடைந்த மக்களின் சேவைகளாக விளங்கும் கூட்டுறவாளர்கள் தமது 76 ஆவது கூட்டுறவு தினத்தைக் கொண்டாடும் இவ்வேளையில் கூட்டுறவின் சேவைகள் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் வேரூன்றி உள்ளது என்பது ஐயப்பாடான விடயமாகவே உள்ளது. இங்கிலாந்தில் ஏற்பட்டகைத்தொழிற் புரட்சி கூட்டுறவு இயக்கம் பிறப்பதற்கு வழிகோலியது. இவ் இயக்கமானது இன்று பல்வேறு நாடுகளிலும் தனது சிறந்த சேவையை செய்துவருகின்றது. குறிப்பாக இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதியில் சொல்லொணாத் துயரத்துக்குள் அகப்பட்டுள்ள மக்களுக்கு காலமறிந்துசேவை செய்கின்றது. காலமறிந்து உணவளித்துக்காக்கின்றது. அச்சேவையில் தற்போது ''சங்கமம்'' பத்திரிகை அளப்பரிய தொண்டினை மேற்கொள்வதும் இதனால் இதயம் துடிக்கும் ஒவ்வொரு தடவையும் கூட்டுறவு கூட்டுறவு என்ற துடிப்பும் இருக்கின்றது இதுவேகூட்டுறவ; இதுவே நாட்டுறவு. வளர்க கூட்டுறவு.

சி. சிவஞானம்,
தலைவர்,
கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம்.

## தேசியத்தைப் பலப்படுத்த உறுதி கொள்வோம்!

வன்னிப்பெரு நிலப்பரப்பில் கூட்டுறவு இயக்கம் சமூக வாழ்வியலைத் தொட்டு ஆழக்கால் பதித்து தனது இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டு வருகிறது. இன்று மரண அவலங்கள் நிறைந்த வாழ்க்கை முறையில் இருக்கும் நாம் தன்னிறைவுப் பொருளாதார தேசிய வலுவை நோக்கி செல்கின்றோம். இன்று அகிலம் கொண்டாடும் 76ஆவது கூட்டுறவாளர் தின விழாவை 'வாழ்த்தி கிளி/மாவட்டத்தின் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் கரத்தைப் பலப்படுத்தி, 'சங்கமத்தின்'' இதழ் பரப்பி எளிமையான வாழ்வுமுறையும், தன்னடக்கமும் பணிவும், தூரநோக்கும் மனித உணர்வை பகிர்ந்து கொள்ளும் சத்திய வாழ்வும், தூய்மையான தெளிந்த முற்போக்குச் சிந்தனையும் மன உறுதியுள்ள வழிகாட்டலும் கொண்ட கூட்டுறவாளனாக இருந்து எம் தேசியத்தைப் பலப்படுத்துவோம் என இந் நாளில் உறுதி கொள்வோம்.

– நன்றி –

கூ. சேவையிலுள்ள,
ம. ஜெகநாதன்,
தலைவர்,
கிளி/ அள - மல். ப.நோ. கூ சங்கம், ஸ்கந்தபுரம்.

## சத்தியம் சார்ந்த தர்மம் கூட்டுறவு!

கூட்டுறவு சத்தியம் சார்ந்த ஒரு தர்மம். சத்தியத்துக்குச் சோதனை வரும் ஆனால் சத்தியமே ஜெயிக்கும் என்பதை நம் காலத்தில் கண்ணெதிரே கண்டோம், காண்போம். ஜனநாயகம் இல்லாத கூட்டுறவு தோற்றுப்போகும். இது நாள் வரை கூட்டுறவு அடைந்த தோல்விக்கு காரணம் அவற்றின் ஜனநாயக மறுப்புப் போக்கே ஆகும். குடி மக்கள் சொன்னபடி குடி வாழ்வு மேன்மையுற குடிமை நீதி தழைக்கும் ஒரு நெறியாக புதிய தலைமையில் கூட்டுறவு புதிய பரிமாணம் பெற்று வர கூட்டுறவுக் குரல் 'சங்கமம்'' ஆற்றி வரும் பெரும்பணி வரவேற்கத்தக்கது. சங்கமத்தின் 11 ஆவது இதழ் 76 ஆவது சர்வதேசக் கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு சிறப்பு மலராக வெளிவருவது கண்டு பூரிப்படைந்து, கூட்டுறவும், சங்கமமும் சிறப்பு வாழ வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.
வேலணை ப நோ. கூ.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு சில நிமிடங்கள்

# - கூட்டுறவு -

குடும்பத்தில் கூட்டுறவு, குடும்பங்கள் உள்ளடக்கிய கிராமத்தில் கூட்டுறவு, கிராமங்கள் உள்ளடக்கிய பிரதேசத்தில் கூட்டுறவு, பிரதேசங்கள் உள்ளடக்கிய நாட்டில் கூட்டுறவு நாடுகள் ஒவ்வொன்றும் பொதுத் தேவைகளின் அடிப்படையில் கூட்டுறவு, இந்த வகையில் எங்கும் எதிலும் கூட்டுறவு வியாபித்து இருக்கின்றது. இந்தக் கூட்டுறவின் தன்மைகள் ஒருமித்த கருத்தை எட்ட வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டன.

இந் நிலையில் தனிமனித கூட்டுறவை நாம் பார்த்தால், ஒரு மனிதனின் சமூகப்பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஒருவர் பலருக்காகவும் பலர் ஒருவருக்காகவும் என்ற நிலையில் உருவாக்கப்பட்டது. ஆனால் இதன் அடிப்படை நோக்கமாக சுயபொருளாதாரத்தை மேம்படுத்தி உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்து தனி மனிதனின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக இருக்கவேண்டிய நிலையில் நாம் சந்தைவாய்ப்பை ஏற்படுத்தும் வியாபார நிலையமாக மாற்றம் பெறச் செய்து அதை செயற்படுத்தும் நிறுவனமாக மாற்றி உள்ளோம் இதன் காரணமாக தனிமனிதனின் உற்பத்தித் திறன் பாதிப்படைந்து அவனின் பொருளாதார நிலை நலிவுற்றதால் கூட்டுறவில் இருந்து அன்னியப்படும் நிலைக்கு ஒவ்வொரு மனிதனும் தள்ளப்பட்டுள்ளான். இந்நிலை மாறவேண்டும். உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யவேண்டும். அதற்கேற்ற வகையில் எமது செயற்பாட்டை மாற்றமடையச் செய்யவேண்டும்.

இதற்கு மேலாக ஒரு விடயத்தின் ஒத்த கருத்தை அடையச் செய்து அதன் மூலம் கூட்டுறவின் செயற்பாட்டை செயற்படுத்த வேண்டியவர்கள் நாம். ஒத்தகருத்தை எட்டுவதற்கு நாம் எத்தனை முறை விவாதிக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். தேவைதான், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தின் அடிப்படையில் வருகின்றார்கள் என்பதும் உண்மை. ஆனால் நாம் கூட்டுறவாளர்கள் அதன் அடிப்படையில் எமது கருத்து இருக்கவேண்டும். புரிந்துணர்வுடனும் பொது நோக்குடனும் எமது கருத்தை முன்வைக்க வேண்டும். எமது கருத்து என்று இருக்காமல் எங்கள் கருத்து என்று இருக்கவேண்டும். ஒரு விடயத்தின் சாதக பாதக நிலையை, பொதுக்கருத்தின் அடிப்படையில் ஆராயவேண்டும். நிர்ப்பந்தங்களின் அடிப்படையிலோ அழுத்தங்களின் அடிப்படையிலோ ஒத்தகருத்தை எட்டக்கூடாது. அதை கூட்டுறவு என்று சொல்லவும் முடியாது, அந்த நிலையை உருவாக்கக்கூடியவர்களாக நாம் இருக்கக்கூடாது. ஒத்த கருத்தை எட்டியபின் அக்கருத்து எமது கருத்தாகக்கொண்டு செல்லப்பட வேண்டும். எடுக்கப்பட்ட விடயத்துக்கான சாதக பாதகங்களைத் தெரிந்தும் அதை வெளிக்காட்டாமல் ஒத்த கருத்து எட்டிய பின் கருத்துக்கூற முற்படக்கூடாது. அது கூட்டுறவாளர் என்ற பதத்திற்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்"

இன்று உலக வர்த்தகமையங்களாக விளங்கும் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில் தங்களுக்கிடையே கூட்டு உற்பத்தி வியாபார நடவடிக்கைகளைச் செய்கின்றன. இந்தமாதிரி பல நாடுகள் மேற்கொள்ளுகின்றார்கள் என்றால் கூட்டுறவாளர்கள் என்ற பதத்துடன் இருக்கும் நாம் எமது செயற்பாட்டை கூட்டுறவு மனப்பான்மையுடன் செயற்படுத்த முடியாதா. எங்களிடையே அந்தத் தன்மை உருவாகவேண்டும்.

தி. சுந்தரலிங்கம்
தலைவர்,
கிளி/ஊர்காவற்துறை ப. நோ. கூ. சங்கம்.

நாம் முன்வைக்கின்ற கருத்தை முன்வைக்கக் கூடாது என்பதல்ல பொருள். நாம் வைக்கின்ற கருத்து பொதுக் கருத்தின் அடிப்படையில் அதற்கான காரண காரியங்களுடனான விளக்கங்களுடன் முன்வைக்கப்பட வேண்டும். தனி மனித விருப்பு வெறுப்பு பார்க்காத நிலையில் ஒருமித்த பொதுநோக்கின் அடிப்படையில் ஒத்த கருத்தை எட்டக்கூடியதாக முன்வைத்து ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும். நாம் முன்வைக்கின்ற விடயங்கள் அனைத்தும் ஒத்தகருத்தை எட்டவேண்டும் என்றோ, எட்டும் என்ற எண்ணத்துடனே முன்வைக்கக்கூடாது. முன்வைக்கின்ற கருத்து நியாயமானதாக இருப்பதுடன் அது தொடர்பான சரியாக விளங்கிக்கொண்ட பின் முன்வைக்கவேண்டும். பொதுக் கருத்தை எட்டியபின் அது முன்வைத்தவருடைய விடயம் என்ற நிலையில் இருந்து பொதுக்கருத்தை எடுத்தவர்கள் என்ற நிலையில் எமது கருத்தாகக் கருதவேண்டும். அப்பொழுது தான் அந்த விடயம் முழுமை அடைவதுடன் செயற்படுத்தவும் முடியும்.

அது என்னால் முன்வைக்கப்படவில்லை. ஒத்த கருத்தை எட்டவேண்டும் என்பதற்காக உடன்பட்டது என்ற மனநிலையில் நாம் இருக்கக் கூடாது. இந்த மனநிலை மாறவேண்டும். அதை வளர்த்துக்கொள்ள வேண்டும். கூட்டுறவுக்குள் கூட்டுறவு வளரவேண்டும். கூட்டுறவாளர்களாகிய நாம் இந்த சர்வதேச கூட்டுறவாளர் தினத்திலே இதை மனதில் நிலைநிறுத்திச் செயற்படத் திடசங்கற்பம் எடுத்துக்கொள்வோம்.

''கூட்டுறவே நாட்டுயர்வு
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஒரு மனிதனிடம் திறமை இருக்கலாம் அதை சமுதாயத்திற்கு பயன்படுத்தாமல் விடுவானானால் அவன் வெறும் மனிதன்.

எம் மனதில் இருக்கும் எண்ணங்களை - நாம் வேண்டியவர்களுக்கு சொல்ல வேண்டும் அப்பொழுதுதான் அதற்கான விடை கிடைப்பதுடன் மனப்பாரமும் குறையும்,

## ஒரு காலத்தில் நீ ஒலிம்பிக் வீரனாவாய்!

ஆறு ஒன்று என்றும்,
அருவி பதின் ஒன்று என்றும்
எழுபத்தாறாவது
கூட்டுறவு விழாவின் வயதினிலே
எழுந்து நிற்கின்ற கூட்டுறவின் சங்கமமே
ஒரு வயதினிலே நீ எழுந்து ஓடுகின்றாய்
ஒரு காலத்தில் நீ ஒலிம்பிக் வீரனாவாய்
இது நிட்சயம்
சாதனைகள் படைக்கும் நீ
பக்கம் சாராது நின்றால்,
சோதனைகள் எதுவும்
தடையாக அமையாது
''சங்கமமே நீடூழி வாழ்க''

க. கிருஷ்ணபிள்ளை
தலைவர்
அக்கராயன் ப. நோ. கூ. சங்கம்.
அக்கராயன்குளம்.

## கூட்டுறவின் தோழரே கோடி வந்தனங்கள்!

கூட்டுறவின் தந்தையே
றொபேட் ஓவனே உனக்கு
கோடானுகோடி வந்தனம்
உன் வழியில் வந்தவர்கள்
உண்மையிலே உயர்ந்தவர்கள்
உயர்வாயும் இருக்கின்றார்கள்

மக்களின் சேவைக்காய்
மனமார உழைக்கின்றார்கள்
நாட்டின் தேவை உணர்ந்து
நல்ல பல பணிகள்
நாளுமே செய்கின்றார்கள்
மண்ணின் தேவை உணர்ந்து
மக்களின் தேவை தெரிந்து
கண்ணின் இமை போல
காலமெல்லாம் உழைக்கின்றார்கள்

என்ன விந்தை! இப்படியும் சேவைகளா?
ஏங்கிவிட்டார் எதிரில் உள்ளவர்
வன்னியிலே இதன் சேவை
வனப்பாக வளர்ந்திருக்கு
நல்ல பல உள்ளங்கள்
நாலுமே கூடிப்பேசி
சொல்லும் பல சேவைகள்
அரிதமாய் செய்கின்றார்கள்

அடுத்த தலைமுறையும்
ஆரோக்கியமாய் உருவாக
எடுத்தியற்றும் பணிகள்
எத்தனை எத்தனை,
எண்ணரிய சேவைகளை
எடுத்தியற்றும்
கூட்டுறவின் தோழர்களே – உமக்கு
கோடி வந்தனங்கள்.

வித்தகபுரத்தான்

## புதியதன் திறல் என சங்கமம் உதித்தது!

கூடி இருந்த கூடு கலைத்தனர்
தொப்புள்க்கொடி உறவைத்
தொலைத்தனர்
மாது கற்புடை மங்கையைக் கெடுத்தனர்
மலருமுன்னே மொட்டைப் பறித்தனர்
தமிழர் எப்பீதேறி தர்பார் நடத்தினர்
இருந்தும் என்ன
யானைக் காலின் கோரைப் புல்லென
மீண்டும் எழுந்தோம்
சாம்பல் மேட்டின் பீனிக்ஸ் பறவையாய்
மீண்டும் உயிர்த்தோம்
விழுதுகள் வேரைத்தாங்க
புதியதாய் நடந்தோம்

புதியதோர் உலகம் செய்வோம் - ஆம்
புதியதோர் உலகம் செய்வோம்.
தாயின் தலையில் மணிமுடி தரிப்போம்
இப்படி எங்கள் வாழ்வு நகர்கையில்
கூட்டுறவாளரும் திடமென நிமிர்ந்தனர்
ஆச்சி குட்டியும் அப்பு முத்துவும்
இவர்களைப்போலவே இன்னும் பலரும்
சரிந்த செங்கோலாச்சியிருந்தனர்

முதலிடம் தொடங்கி முடிவுடன் வரையும்
ஊழல் எல்லாம் உழைப்பைத் தின்றன
முறைகேட்டோடு அதிகாரமுடையோர்
சிறுகச் சிறுக சேர்ந்து அழிந்தனர்
அதிகாரத்தில் இருந்தோர் ஊழல் என்னும்
புற்றுநோய் கிருமிகளாய்
அமைப்பை அழித்தனர்
ஆற்றல் உடையோர்
அடங்கியே இருந்தனர்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது வெல்லவும்
தர்மம் மறுபடியும் வெல்லும் என்பது
எவ்விடம் போலவே
இவ்விடம் பொருந்தி
ஆணிவேரை அசைத்து வீழ்த்தி
புதியது புகவே பழையன கழிந்தன
எங்குமேயில்லாத கூட்டுறவு என்பது
பெயரில் மட்டுமே முன்பு இருந்தது
அந்த நிலைமை மெல்லென மாறி
வல்லன இணைந்து புதியன செய்தன
புதியதன் திறல் என சங்கமம் உதித்தது.
சங்கமம் உதித்தது.

நாரையூரான்

## மாற்றம் வரும்!

பச்சைப் பரப்புக்கள்
பழுத்து, பதம்மாறி
பசுமை இனி மிச்சமில்லை
என்றாயிற்று.
நீர்மூலங்களில் இருந்து
ஆவிப்பரப்புக்கள் நெய்யப்பட்டன
வறட்சியின் முற்றுகை வட்டத்துக்குள்,

மழை என்கிற 'பீனிக்ஸ்' களை
பிரசவிக்க
வானம், மேகக் கருக்கட்டி
நிறைமாதமாகியது,
சுழற்காற்று சுழன்றடித்து
ஆரவார போர்ப் பிரகடனம்
ஒன்றை
அவசரமாய் அறிவித்தது.

சூரியக்கதிர்களின் மூர்க்கத்திற்கு
முற்றுப்புள்ளியிடும் முடிவுடன்
நீர்த்துளிகள், மண்ணை
வாஞ்சையோடு முத்தமிட்டு சிதறின
வேகமாக, ஒரு வெறியோடு.

திருநகரூர் ஜெகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்க பணியாளருக்கான ஒழுக்காற்று நடவடிக்கையும் கூட்டுறவுச் சட்ட ஏற்பாடுகளும்!

ஓர் கூட்டுறவுச் சங்கப் பணியாளரின் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் போது பாரபட்சமின்றியும், பழிவாங்கல் நடவடிக்கைக்கு பணியாளர் உட்படாமல் இருக்கும் வகையிலும் 1972 ஆம் ஆண்டு 12ம் இலக்க கூட்டுறவு வேலையாள் ஆணைக் குழுச் சட்டம் உருவாக்கப்பட்டு உள்ளது. இதற்கு மேலதிகமான விளக்கம் வழங்கும் வகையில் கூட்டுறவு வேலை ஆணைக் குழு சட்ட விதி உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வேலையாள் ஆணைக் குழுவானது கூட்டுறவு அமைச்சரால் நியமிக்கப்பட்ட மூன்று பேர் கொண்ட குழுவாக அமைந்திருக்கும்.

ஓர் கூட்டுறவுச் சங்க பணியாளர் ஒருவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டி இருப்பின் அவர் புரிந்த குற்றம் பின்னிணைப்பு 3ன் கீழ் வரும் சிறு குற்றமா? அல்லது பின்னிணைப்பு 4ன் கீழ்வரும் பாரிய குற்றமா? என வகைப்படுத்தி குற்றம் புரிந்த பணியாளர் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அதிகாரம் அச் சங்க நெறியாளர் குழுவுக்கே உண்டு. ஓர் பணியாளர் புரிந்த குற்றம் அவரை சேவையில் இருந்துநீக்கப்படக்கூடிய அளவுக்கு பாரிய குற்றமாக நெறியாளர் குழு கருதுமாயின் அப் பணியாளரை சேவை இடை நிறுத்தம் செய்யப்பட வேண்டும். ஏனைய சந்தர்ப்பங்களில் கடமை புரிந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்தோ அல்லது அப் பதவியில் வைத்தோ ஒழுக்காற்று விசாரணை செய்யலாம்

இருப்பினும் அப் பணியாளர் கடமைக்கு சமூகம் கொடுப்பதால் ஒழுக்காற்று விசாரணையில் குந்தகம் ஏற்படும் என நெறியாளர் குழு கருதுமாயின் அப் பணியாளரை கட்டாய லீவில் விடுத்தல் வேண்டும். அவ்வாறு கட்டாய லீவில் அனுப்பிய காலத்துக்குரிய லீவு அப் பணியாளர் லீவில் கழிக்கப்படக் கூடாது. அவரது லீவுக்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஒரு பணியாளர் மீது ஒழுக்காற்று தொடர்பான விசாரணையை மேற்கொள்ளும் முன்பு அவர் புரிந்த குற்றங்களை வகைப்படுத்தவும் அவற்றுக்கான சாட்சியங்களையும் ஆதாரங்களையும் கண்டறியும் முகமாக நெறியாளர் குழு தேவை என கருதுமாயின் ஆரம்ப விசாரணை ஒன்றை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு ஆரம்ப விசாரணை ஒன்று நடாத்தும் போது விசாரணை உத்தியோகத்தரால் சாட்சிகள் நெறிப்படுத்தும் போது குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் அங்கு இருத்தல் அனுமதிக்கப்படலாகாது. அத்துடன் ஓர் ஆரம்ப விசாரணையில் ஈடுபட்ட விசாரணை உத்தியோகத்தர் எக்காரணம் கொண்டும் விசாரணை உத்தியோகத்தராக நியமிக்கப்படலாகாது.

ஓர் பணியாளர் மீது காணப்பட்ட குற்றங்களை தனித்தனியாக வகைப்படுத்தி அவை நெறியாளர் குழுவின் அபிப்பிராயப்படி பாரிய குற்றமா? சிறு குற்றமா? என குறிப்பிட்டு ஆகக்கூடியது ஆறு வார கால எல்லைக்கு மேற்படாது விளக்கமளிக்குமாறு கோருதல் வேண்டும். இவ்வாறு பணியாளர்களுக்கு குற்றப் பத்திரம் கிடைக்கப் பெற்றதும் அப் பணியாளர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களின் தெளிவான ஆவணங்கள் ஏதும் பார்வையிடக் கோரும் போது சங்கம் அதற்கான ஏற்பாட்டைச் செய்துகொடுத்தல் வேண்டும். குற்றப் பத்திரத்துக்கான பதில் வழங்கும் போது ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கள் தொடர்பிலும் தனித்தனியாக விளக்கமாக பதில் அளித்தல் வேண்டும் ஒட்டு மொத்தமாக தான் குற்றவாளி இல்லை என அதை நிரூபிக்க ஓர் விசாரணை நடாத்துமாறு கோருவதற்கு அப் பணியாளருக்கு உரிமை கிடையாது.

குற்றப் பத்திரத்துக்கான பதிலை அனுப்பாதுவிடின் அல்லது விளக்கத்தால் தான் சுற்றவாளி என தன்னை நிரூபிக்கவில்லை என நெறியாளர் குழு கருதுமாயின் பதில் கிடைத்ததிலிருந்து ஓர் முப்பது நாட்களுக்குள் ஓர் விசாரணை உத்தியோகத்தரை நியமித்து விசாரணையை நடாத்துதல் வேண்டும்.

ஒழுக்காற்று விசாரணை ஒன்றை நடாத்த நெறியாளர் குழுவானது விசாரணை உத்தியோகத்தராக ஒருவருக்கு மேற்பட்ட குழு ஒன்றையோ அல்லது ஒருவரையோ நியமிக்கலாம் குழு நியமனம் ஒன்று செய்யப்படின் அதில் ஒருவரை தலைவராக நியமித்தல் வேண்டும். இவ்வாறு நியமனம் செய்யப்பட்டவர் சேவையிலுள்ள அரச கூட்டுத்தாபன ஊழியராகவோ அல்லது ஒய்வுபெற்ற அரச கூட்டுத்தாபன ஊழியர்களாகவோ அல்லது சேவையிலுள்ள கூட்டுறவுச் சங்கப் பணியாளராகவோ அல்லது கூட்டுறவு வேலையாள் ஆணைக் குழுவில் உள்ள விசாரணை உத்தியோகத்தராகவோ அமைதல் வேண்டும். விசாரணை உத்தியோகத்தர் சங்கத்தரப்பில் வழக்கை நெறிப்படுத்த ஒருவரை அனுமதிப்பாராயின் பணியாளரும் தனது தரப்பில் பிரதிநிதி ஒருவரை நியமிக்க இடமளிக்க வேண்டும். இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் சேவையில் உள்ள ஒய்வு பெற்ற கூட்டுறவுச் சங்க பணியாளராகவோ அல்லது ஒய்வுபெற்ற அரச கூட்டுத்தாபன ஊழியராகவோ அமைதல் வேண்டும். எத்தரப்பினரும் சட்டவாதி ஒருவரை சட்ட பிரதிநிதியாக நியமித்தல் ஆகாது. சங்கமானது தனது தரப்பில் சட்ட பிரதிநிதியை நியமிக்கும் போது சட்ட பிரதிநிதி அதே சங்கபணியாளராகவிருப்பின் குற்றம் சாட்டப்பட்ட பணியாளரை விட இயன்றளவு சிரேஷ்டராக இருத்தல் வேண்டும்.

இரு தரப்பினரும் எச் சந்தர்ப்பத்திலும் முன் அறிவித்தலுடன் தமது பிரதிநிதியை மாற்றம் செய்யலாம். விசாரணை உத்தியோகத்தரானவர் இயன்றளவு மூன்று மாத கால எல்லைக்குள் விசாரணை நடாத்தி முடிக்க முயற்சி எடுத்தல் வேண்டும். அவ்வாறு செய்ய இயலாத போது நெறியாளர் குழு அங்கீகாரத்தைப் பெற்று செயற்பட வேண்டும்.

ஒழுக்காற்று விசாரணைக்காக விசாரணை உத்தியோகத்தரால் திகதி அனுப்பப்பட்டும் பணியாளர் விசாரணைக்கு சமூகம் தராதுவிடின் விசாரணை உத்தியோகத்தர் பணியாளருக்கு எச்சரிக்கைக்கடிதம் வழங்குவதுடன் விசாரணையை ஒத்தி வைத்து மறு தவணையிலும் சமூகமளிக்காதுவிடில் பணியாளரின் சமூகம் இன்றியே விசாரணை நடைபெறும்என அறிவுறுத்தல் வேண்டும். தொடர்ந்தும் பணியாளர் சமூகமளிக்காதுவிடின் அவரின் சமூகம் இன்றி விசாரணை மேற்கொள்ளல் வேண்டும்.

விசாரணை உத்தியோகத்தர் விசாரணையை ஒரு சாட்சியம் மூலம் நெறிப்படுத்தும் போது வேறு சாட்சியங்களை அனுமதித்தலாகாது. அளிக்கப்படும் சாட்சியம் எதிர்த்தரப்பால் குறுக்குவிசாரணை செய்யலாம். குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் தான் சாட்சியமாக முன்வரலாம் விசாரணை முடிவில் குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் வாக்கு மூலம் ஒன்றை அளிப்பதற்கு முன்வரலாம். அவ்வேளை அவர் குறுக்கு விசாரணைசெய்யப்படல் ஆகாது. விசாரணை முடிவுற்று 14 நாட்களுக்குள் இரு தரப்பினரும் எழுத்து மூலமான சமர்ப்பணங்களை விசாரணை உத்தியோகத்தருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விசாரணை முடிவடைந்ததும் விசாரணை உத்தியோகத்தர் இயன்றளவு விரைவில் குற்றங்களின் வகையினையும் (அவற்றுக்குரிய தண்டனைகளையும்) அவை எவ்வாறு ஆதாரப்படுத்தப்படுகின்றன என்பதையும் அறிக்கையாக சங்க நெறியாளர் குழுவுக்கு மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும். குழுவானது விசாரணை உத்தியோகத்தரின் சிபார்சுகளையோ அல்லது முழுவதையுமோ நிராகரிக்கலாம். அல்லது மேலதிக விளக்கம் தேவை என கருதின் அழைத்து கோரலாம்.

நெறியாளர் குழுவானது தண்டனை வழங்கும் போது ஒவ்வொரு குற்றம் தொடர்பாகவும் அது சிறு குற்றமா அல்லது பாரிய குற்றமா என்பது பற்றியும் குற்றச் சாட்டுக்களில் இருந்து அவரை குற்றவாளியாகவோ அல்லது சுற்றவாளியாகவோ கருதுகின்றது என்பது பற்றி தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு நெறியாளர் குழுவின் தீர்ப்பில் இன்னலுறும் பணியாளர் தீர்ப்பு கிடைத்த 60 நாட்களில் கூட்டுறவு வேலையாள் ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடு செய்யலாம். அப்பணியாளர் ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் போது அதன் ஒரு பிரதியை நெறியாளர் குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மேன் முறையீடு கிடைத்து 14 நாட்களுக்குள் அதில் குறிப்பிட்ட விடயம் தொடர்பான ஆவணங்களை சங்கம் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். வேலை நீக்கம், சேவை முடிவுறுத்தல், கட்டாய ஒய்வு போன்ற சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவானது மேன்முறையீட்டு விசாரணை உத்தியோகத்தரை நியமித்து முடிவுக்கு வரும் ஏனைய சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து ஆணைக்குழுமுடிவுக்கு வரும். ஆணைக்குழுவின் தீர்ப்பே முடிவானதாகும்.

தொகுப்பு:

புனிதன்

அக்கராயன் ப. நோ. கூ. சங்கம்

## வீடும் கிணறும் காவிச்செல்லும் வரம் தரவேண்டும் பராசக்தி!

காணி நிலம் வேண்டும்
பராசக்தி
நல்லவீடும், கிணறும்
வேண்டும்.
இவை
காவிச்செல்லும்
வசதி வேண்டும்

செல்விழுந்து
ஓடிப்போகையிலே
எடுத்துச் செல்லும்
வசதி வேண்டும்.

விரட்டும் பகைவரால்
விட்டு வந்த
சொத்துக்களை
தேடிச் சென்ற
பல பேர்
எலும்புக் கூடாய்
மாறிவிட்ட நிலைநின்று
எழுந்து வரும்
வர வேண்டும்

அரைக்கொரு
துண்டு
அகதியுலர் உணவு
ஒழுகும் கூரைக்கொரு
சிறு தறப்பாள் துண்டு
பராசக்தி
தடையின்றி
கிடைக்க வேண்டும்.

உருக்குலைந்து
வற்றிய என் எலும்பும்,
தோலும் விட்டு,
உயிர்பிரிந்து
போகுமுன்னே
ஊர் போகும்
வரம் வேண்டும்
அருள்வாய் அம்மா
என் - அன்னைபராசக்தியே!

- ஊற்றூர் இரு -

## :- தவிப்பு -:

அடிபடுகிறோம்
அலைகிறோம்
உணவுக்கு
ஏங்குகின்றோம்
தெருத்தெருவாய்
மரணிக்கின்றோம்
வாலாட்டிப்
பிழைப்பு நடத்துகின்றோம்
ஓம்
ஒழுக்க வரைவறையின்றி
கலவி கொள்கின்றோம்
பிறகென்ன!
நாமும்
ஒரு பேசத்தெரியாத
மனிதர் தானே!
இது
ஒரு நாய்
சொல்லத் தவிக்கின்ற
கவிதை

பொன். காந்தன்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# கல்வியும் இளைஞரின் சமூகப் பெறுபேறும்!

சமுதாய விருப்புடைய சமூகம் ஒன்றை உருவாக்குவது என்ற சமூகவியல் ஆக்கச் செயற்பாடு எப்போதுமே இளைஞர்களின் கைகளில் தங்கி இருப்பதாகவே கருதப்படுகிறது. எனினும் மனவியல் கோலங்களில் வீச்சுக்கொண்ட திறனை வெளிப்படுத்தும் இளைஞர்களின் உலகம் எல்லோரும் எண்ணுவது போல இலகுவானதும் எளிமையானதுமாக இருந்து விடுவது இல்லை என்பதனால் தான் இளைஞர்களும் அவர்களது பிரச்சினைகளும் ஒரு விஞ்ஞான பூர்வ தளத்தில் இருந்து ஆய்வுக்குட்பட்டு அக்கறைப்படுத்தப்படவேண்டியது அவசியமாகின்றது. இளைஞர்களுக்கிடையிலான பிரச்சினைகள் எப்போதுமே மௌனப் பிரச்சினைகளாக வெளிக்கிளம்பி பின்னர் சமூகப்பிரச்சினைகளாக உருவெடுத்துவிடுகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பில் ஆக்கக்கூறாக கல்விச் செயற்பாடுகளே முதன்மைப்படுத்தப்படுகிறது. சமுதாய விருப்புக்கேற்ற அறிவுத்திறன் மனப்பாங்கை உருவாக்கும் உயரியகல்வி இலட்சியங்கள் எப்போதெல்லாம் தோல்வி அடைகின்றதோ அப்போதே அது சமூகப்பிரச்சினையாக இளைஞர் உலகத்தில் இருந்து வெளிப்படுகின்றது. இதனுடன் இணைந்தவகையில் சமூகரீதியான அம்சங்களினாலும் பிரச்சினைகள் எழுகின்றன. எனினும் கல்வி உலகில் ஏற்படும் தொடர்புறலுடன் ஏற்படும்பிரச்சினைகள் சம்பந்தமாக சில கூறுகளை மட்டும் நாம் இவ் பகுதியில் பகிர்ந்து கொள்வோம்.

இளைஞர்கள் என்ற வரையறையில் 15 தொடக்கம் 35 வயதினை கொண்டவரையே குறித்து நிற்கிறது. எனினும்ஐக்கிய நாடுகள சிறுவர் நிதியத்தின் சிறுவர்களுக்கான உரிமைப்பட்டயம் (CHILD-REN CHARTTER) 5—18 வயது வரை உடையோரை சிறுவர்கள் என்றே வரை விலக்கணப்படுத்துகிறது. இந்த வகையில் இளைஞர்களுக்கிடையிலான பிரச்சினைகளை பண்பியல் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்திக் கொண்டு மேலும் கலந்துரையாடுவோம்.

1) தனியாள் தொடர்பான பிரச்சினைகள்
2) வீட்டுச் சூழலுடன் தொடர்பான பிரச்சினைகள்
3) சமூகத்துடன் சார்ந்த பிரச்சினைகள்

இந்தப் பிரச்சனைகளின் உருவாக்கப்புலமாக கலைத்திட்டத்தை பெருமளவில் பொறுப்பளிக்க முடியும்குறிப்பாக

1) மாற்றங்களை உள்ளடக்கிய சூழலில் தனி மனிதன் தன்னை இணைத்துக் கொள்வது தொடர்பானவை.
2) பெற்றோருடனான தொடர்பு குறைவடைதல்.
3) வேலை உலகு தொடர்பானவை.
(4 இடை விலகலும் கல்விச் சந்தர்ப்ப மறுப்பும் தொடர்பானவை.

இதில் மாற்றங்களுக்குள் மனிதன் தன்னை இணைத்துக்கொள்வது தொடர்பான விடயத்தை ஆராயும் போது சமகால உலகு நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கு உட்பட்டது. தொடர்பு ஊடகத்தினால் ஒன்றிணைக்கப்பட்டது. விரைவான மாற்றங்கள் நிகழக் கூடியது என்பதற்கு ஏற்ப தம்மை ஒன்றிணைத்துக் கொள்வது தொடர்பில் இளைஞர்களது நடத்தை, பழக்கவழக்கம் என்பன ஒன்றிணைய மறுக்கும் போது பிரச்சினைகள் எழுகின்றன.

மாற்றங்களை அதிதசுதந்திரமாக கருதுகின்ற போதும் பிரச்சினைகள் எழுகின்றன இதுகண்டதே காட்சிகொண்டதே கோலம் என்றநிலைக்கு இளைஞர்களை இழுத்துச் செல்லுகின்றது. இவ்விடத்தில் மாற்றங்களுக்கு உள்ளாகாத எதுவும் அழிவுக்கு உள்ளாகும் என்ற பரிணாமவாதிகளின் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தி வியாக்கியானம் பண்ணப்படுவதும் நினைவிடத்தக்கது. இந்த மாற்றங்களின் தீவிரம் மேலைத்தேயக் கலையை, சிந்தனையை தொழில் நுட்பத்தை எல்லாம் எவ்வித விசாரிப்புக்கும் உட்படுத்தாது ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு எடுத்துச் செல்கின்றது.

மாற்றங்களை கிரகித்துக் கொள்ளும் மனப்பாங்கு என்பது தேசத்தின் அபிலாசைகளுடன் ஒட்டிக்கொள்ளும் போதே மெய்மை நிகழ்ச்சியாக தோற்றம்பெறும். தவறும்போது பிரச்சனையாகவே வெளிப்படும்.

> மாற்றங்களைக்கிரகித்துக் கொள்ளும் மனப்பாங்கு என்பது தேசத்தின் அபிலாஷைகளுடன் மெய்மை நிகழ்ச்சியாக தோற்றம் பெறும். தவறும்போது பிரச்சினையாகவே வெளிப்படும்.

பெற்றோருடனான தொடர்பு பற்றிய சிந்தனையில் இளைஞர் சமூகத்தினைப்பொறுத்து பின்வரும் சந்தர்ப்பங்கள் குறிப்பிடத்தக்கவை

1) வேலை நோக்கம் கருதி வெளிநாடுகளுக்கும் வேற்று நகர்களுக்கும் இடம் பெயரல்.
2) நீண்டநேர வேலைகளில் ஈடுபடல்.
3) வருமான நோக்கோடு பகுதித் தொழிலில் ஈடுபடுதல்.
4) இராணுவ அச்சுறுத்தல் காரணமாக குடும்பங்களை விட்டுப் பிரிதல்

பெற்றோரிடம் இருந்தே அன்புணர்வு, ஆதரவு, குடும்ப ஒழுக்கம், பழக்கவழக்கங்கள், மனித விழுமியங்கள் என்பனவற்றை பிள்ளைகள் பெற்றுக்கொள்கின்றனர். இந்தத் தொடர்பு பிரிக்கப்படும்போது விரக்தி, ஆளுமை வளர்ச்சிதடை, மன எழுச்சித்தடை என்பன ஏற்படுவதாக கருதப்படுகின்றன தந்தையிடம் இருந்தான உறவு மூலம் ஒரு பிள்ளை துணிவு, ஒழுக்கம், கருத்து வெளிப்பாடு, தலைமைத்துவம் என்பனவற்றையும், தாயிடம் இருந்து குடும்ப ஒழுக்கம், சமூக ஒழுக்கம், குடும்பக்கடமை, சமூகக்கடமை என்பனவற்றையும் பெற்றுக்கொள்கின்றது.

> கல்வி மீதான நம்பிக்கை வேலை உலகு சார்ந்த நம்பிக்கையாக வளர்த்தெடுக்கையில் கல்வி இலக்குகளில் ஏற்படும் தோல்வி இளைஞரை பெரிதும்பாதிக்கின்றது.

வேலை உலகு தொடர்பான விடயங்களை நோக்கும் போது எதிர்காலம் பற்றி இளைஞர்களே அதிகம் சிந்திக்கின்றனர். இதில் எதிர்கால இலக்கு என்பது வேலை உலகுடன் நெருக்கமாக தொடர்புபட்டிருக்கின்றது. கல்வி மீதான நம்பிக்கையை குறைத்துக் கொள்வதன் மூலம் வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற போது பாடசாலையை விட்டு இடையில் விலகிச் செல்லுவதும் அதிகரித்துக் கொள்ளுகிறது. இத்துடன் கல்வி மீதான நம்பிக்கை வேலை உலகு சார்ந்த நம்பிக்கையாக வளர்த்தெடுக்கும் போது கல்வி இலக்குகளில் ஏற்படும் தோல்வி. இளைஞர்களை வெகுவாகபாதிக்கின்றது இன்றைய கல்வியும்வேலை உலகு பற்றிய தகவல்கள், தொழில் அறிவு, தொழில் தகைமை, தொழில்களுக்கு விண்ணப்பிக்கும் முறைமை, தொழில் சார் பயிற்சி, தொழில் சார் அனுபவம் என்பனவற்றுக்கு அப்பாற்பட்ட கலைத்திட்டத்தையே கொண்டிருக்கின்றது. எமது கல்வி தொடர்பில் கல்விக்கும் வேலை உலகுக்குமான தொடர்பு தொழில் கௌரவ மறுப்பும், கல்விச் சமநிலை இன்மையும் கொண்டதாகும் என விமர்சிக்கப்படுகிறது என்பதனால் கலைத்திட்ட ஆக்கமும் அதன் செயற்திறனும் சமூகவியல் தளத்தில் இருந்து நோக்கும்போது புதிய பார்வைக்குட்பட வேண்டிய கட்டத்தை எட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

- அ. கேதீஸ்வரன் -
விரிவுரையாளர்
மாவட்ட கூட்டுறவு
கற்கைகள் கல்லூரி

## நமக்கு ஒளி தருகின்ற கூட்டுறவே நீ வாழியவே!

வானவில்லின் வடிவுடனே வகைசார் ஏழு வர்ணங்கள்
ஒன்றுக்கொன்று ஒவ்வாத ஒழுங்கின் வர்ணக் கொடிதானும்
வேற்றுமைக்குள்ளே ஒற்றுமையில் விரிந்த உலகை கூட்டுறவுள்
பல இனமக்கள் ஒன்றென்றும் பாரில் சமூக முரணகற்றி
சமரச வாழ்வைக் காட்டி நிற்கும் கூட்டுறவே நீ வாழியவே!

பலபேர் சேர்ந்து ஒருவர்க்கும் ஒருவர் தன்னால் பலருக்கும்
உதவும் தன்மை கூட்டுறவின் கொள்கை ஆறால் தான் நடந்து
உலகின் இருளை ஓட்டுகின்ற கூட்டுறவே நீ வாழியவே!

உலகில் மக்கள் ஒன்றென்றும் ஒரு தாய் மக்கள் நாமென்றும்
தடையில்லாத உறுப்புரிமை சனநாயகத்தின் ஆளுமையில்
பங்கில் மட்டாம் வட்டியுடன் பயன்பட்டோர்க்குத் தள்ளுபடி
கல்விக் கொள்கை தன்னுடனே கூட்டுறவுக்குள் கூட்டுறவு
கூடி ஒன்றாய் வாழவைக்கும் கூட்டுறவே நீ வாழியவே!

காய்ந்த மரந்தான் கூட்டுறவு கல்லெறிபடுவதை நாமறிவோம்
புத்தன் யேசு காந்தியையும் குற்றம்செல்லக் கேட்கின்றோம்
எத்தனை துன்ப துயரினையும் துடைத்தே நமக்கொளி தருகின்ற
கூட்டுறவே நீ வாழியவே!

நாற்றமெடுத்த சமூதாயம் நறுமண வாசனை வீசிடவே
ஏற்றம் மிகுந்த கொள்கைகளால் ஏழை பெரியோர் என்றில்லை
சாதி சமய இருளகற்றி சமரச வாழ்க்கைப் பாதைதனைத்
தடையறுத்தெம்மை வழிநடத்தி பொருளாதாரத் தன்னிறைவால்
பஞ்சம் பசிப்பிணி எனுமிருளைப் பறக்க வைக்கும் பலமுடைய
கூட்டுறவே நீ வாழியவே!

விண்ணில் இருந்து குண்டெறியும் வெறிசேர் அரக்கர் அழித்தாலும்
வடக்குக் கிழக்கு மாகாணம் வாழ்ந்தே உள்ளது கூட்டுறவால்
பஞ்சம் பசிப்பிணிதனை அகற்றி சுதந்திரக் காற்றை
சுவாசிக்க கைகொடுக்கும்
கூட்டுறவே நீ வாழியவே!

தூற்றித் திரிவோர் தூற்றட்டும், போற்றிக் கொள்வோர் போற்றட்டும்
திரும்பிப் பார்த்தால் கூட்டுறவில் தெரியும் அதனது சாதனைகள்
உலகில் சண்டை மூண்டாலும், உள்ளூரில்தான் மூண்டாலும்
கூட்டுறவாலே கைகொடுக்கும் கூட்டுறவே நீ வாழியவே!

ஆறு கொள்கை விளக்கத்தால் ஏழு வர்ணக் கொடி மூலம்
பட்டொளி வீச வைக்கின்ற கூட்டுறவாளே நீ வாழ்க
வளர்க உனது செயலாற்றல் வாழிய நீயும் பல்லாண்டு.

- த. கிருபானந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தமது பொருளாதார கலை கலாச்சாரம், அரசியல் விருத்தி கருதி தாமாகவே முன் வந்து ஒன்று கூடுகின்ற அமைப்பாக கூட்டுறவு இயக்கம் காணப்படுவதனால், சமூகத்தின் உரிமைகள் மறுக்கப்படும் இடங்களிலும் பொருளாதாரப் பலவீனங்கள் நிலவும், சமூகங்களிலும் கூட்டுறவின் தோற்றமும் வளர்ச்சியும் துரிதப்படுத்தப்பட்ட ஒன்றாகவே உள்ளது. எனவே மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் சமூகப் பொறுப்பும் இன்று கூட்டுறவுச் சங்கங்களிடம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது:

நீண்ட காலமாக பல்வேறு வகையாலும் ஒதுக்கப்பட்டு வந்த மக்கள் பொருளாதார ரீதியாகவும் பல தடைகளையும் அனுபவித்து வருகின்றார்கள். இதனால் எமது பகுதிகளில் இருக்கக்கூடிய வணிகக் கைத்தொழில் நிறுவனங்கள் பல ''தரப்படுத்தல்'' நடவடிக்கைகள் மூலமும் திடீர் இடமாற் அமைப்பின் ஊடாக செயற்படுத்த வேண்டியுள்ளதுடன், இதற்கான சேவைக்கட்டணமாகவும் பெருமளவு பணம் செலுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் பெருமளவு கூட்டுறவு நிதி எமக்குப் பயன்படாமலும் உள்ளது என்பதனையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

கிராமியத்துறையில் வங்கிப் பழக்கத்தினை ஏற்படுத்துவதற்கும் விவசாயக்கடன்களை வழங்குவதற்கும் கூட்டுறவுத்துறையை மறுசீரமைப்பதற்கும் என 1949இல் தாபிக்கப்பட்ட கூட்டுறவுச் சமஸ்டி வங்கியை ஒருங்கிணைத்தே, 1961 இல் மக்கள் வங்கியாகத் தோற்றம் பெற்றது. இதனால் கிராமிய வங்கிகளை வழி நடத்துதல், மேற்பார்வை செய்தல், பயிற்சிகள் வழங்குதல், கட்டுப்படுத்துதல் என்பன மக்கள் வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் இன்று போட்டி மிக்க வர்த்தக உலகில் கிராமிய வங்கிகளின் அனைத்துச் செயற்பாடுகளையும் மக்கள்

# மாவட்ட கூட்டுறவு வங்கி!

ம்ற, திடீரென முடிவிடும் உத்தரவு போன்ற நடவடிக்கைகள் மூலமும் செயல் இழக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக இன்று குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில், எந் நிறுவனமும் இயங்க முடியாத நிலைமை தோன்றி உள்ளது. இன்று அரச நிறுவனங்கள் பலவும் ''தனியார் மயப்படுத்தல்'' ''மக்கள் மயப்படுத்தல்'' என்னும் நடவடிக்கைகள் மூலம் மாறிக் கொண்டு இருப்பதன் காரணமாகவும், ஏனைய தனியார் அமைப்புக்கள் கூட திட்டமிட்ட நிலையில் இயங்க முடியாத நிலையில், நாட்டு நிலைமை சீரற்று இருப்பதனால் இன்று கூட்டுறவின் முக்கியத்துவம் எல்லோராலும் நன்கு உணரப்பட்டுள்ளது.

இன்று கூட்டுறவுச் சங்கங்களின் பெரு வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக இருப்பது கூட்டுறவு நிதி ஆகும். இதனை நாம் வென்று எடுப்போமாயின் பொருளாதார ரீதியாகவும் உரிமையைப் பெறவும் பாதுகாக்கவும் பலமான ஓர் மக்கள் இயக்கமாக கூட்டுறவே காணப்படும். என்பதனை மறுக்க முடியாது. இதனால் கூட்டுறவு நிதியினை சிறப்பாக முகாமை செய்தல் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

கூட்டுறவின் ஆரம்ப காலங்களிலும் மரபு ரீதியான முகாமைத்துவக் கொள்கைகளிலும் நிதி முகாமைத்துவம் என்பது அதிகளவு முக்கியத்துவத்தினைப் பெறவில்லையாயினும், குறிப்பாக 1950 ஆம் ஆண்டுகளுக்குப் பின்புதான் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டு நவீன முகாமைத்துவத்தில் புதிய எண்ணக்கருக்களுடன் நடைமுறைக்கு வந்ததாயினும், எமது நாட்டில் 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பின்பே கூட்டுறவில் இதன் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது எனலாம்.

கி. விக்கினராஜா
(தொழில் நிர்வாக மாணி)
(B. B. Ad)
பொதுமுகாமையாளர்
கிளி/மாவட்ட
கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

கூட்டுறவு நிதியில் கணிசமான அளவு பங்கை வகிக்கும் கூட்டுறவுச் சங்கங்களினால் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள வைப்புக்களும், கூட்டுறவுக்கிராமிய வங்கிகளினால் வங்கிகளில் வைக்கப்பட்ட வைப்புக்களும் தொடர்பான ஆய்வினை மேற்கொள்வோமாயின் எமது கூட்டுறவு நிதி எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என்பதனையும், எமது வளங்கள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகின்றது என்பதனையும், எமது வளங்கள் எவ்வாறு சுரண்டப்பட்டு வருகின்றன என்பதனையும் நன்கு அறியலாம்.

முதலீடு என்பது உற்பத்தியாளனாலேயே இடப்படும். ஆனால் இதற்கு மாறாக கூட்டுறவு நிதி என்பது நுகர்வோரையே முதலீடு செய்யப்படுவதாகும். இதனால் தான் எமக்குத் தேவையான பொருட்கள், சேவைகளை இடைத் தரகர்கள் இன்றி நாமே பெற்றுக் கொள்வதனால், குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இதே போல் நிதி முகாமை என்பது கூட்டுறவில் வளர்க்கப்படாததனால், இன்று அச்சேவையைப் பெறுவதற்கு நாம் இடைத்தரகர் என்ற வங்கி வங்கி ஆற்றவேண்டிய நிலைமை உருவாகியதனால், கிராமிய மக்களை நாடி இன்று மக்கள்வங்கிகளும் செல்கின்றன. இவ்வேளைகிராம மட்டத்தில் ஓர் பலமான அமைப்பாக கட்டி எழுப்பப்பட்டு இருக்கும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் வழிநடாத்தல்களும், மேற்பார்வைகளும், பயிற்சிகளும் கட்டுப்பாடுகளும் இன்று கேள்விக்குறியாகவே உள்ளது.

இதன் காரணமாக கூட்டுறவில் சிறப்பான நிதி முகாமைத்துவத்தினை மேற்கொள்வதற்கு, கூட்டுறவு நிதி ஊற்றெடுக்கும் இடமாக கூட்டுறவுக் கிராமிய வங்கிகளை மாவட்ட ரீதியாக ஒருங்கிணைத்து. மாவட்டக் கூட்டுறவுக் கிராமியவங்கி ஒன்றினைத்தாபிப்பதன் மூலம் நிதி முகாமைத்துவத்தினை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இது போன்ற வங்கி அமைப்புக்களை நான்கு ஐந்து வருடங்களுக்கு முன்பே தென்னிலங்கையில் ஆரம்பிக்கப்பட்டு இன்று பெரு வெற்றியும் கண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான மாவட்ட கூட்டுறவுக் கிராமிய வங்கியினை தாபிப்பதற்கு சகல மட்டங்களிலும் நம்பிக்கைத் தன்மையையும் இணைப்பினையும் சிறந்த நிர்வாகத்தினையும் ஏற்படுத்துவது அவசியமானதாகும். இவ்வாறான தாபனம் ஒன்றினைத் தாபிப்பதன் மூலம் பின்வரும் நன்மைகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. கூட்டுறவு நிதி முழுவதும் எமது பிரதேசங்களுக்கே பயன்பட வழி செய்தல். இதனால் எமது நிதி வளங்கள் சுரண்டப்படுவதனையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.
2. கூட்டுறவுச் சங்கங்களின் வைப்புக்களுக்கு ஏனைய வங்கிகள் வழங்கும் வட்டிவீதத்தினையும் விட உயர்வாக வழங்குவது.
3. கிராமிய மக்களிடையே சிக்கனம், சேமிப்பு பழக்கங்களை ஊக்குவிப்பதற்கான கருத்தரங்குகளையும் பயிற்சிகளையும் நடைமுறைப்படுத்தல்.
4. கூட்டுறவு நிதியை மைய நிறுவனம் ஒன்றில் ஒன்று திரட்டுவதன் மூலம், அவ்வாறான நிதிக்கு போட்டிச் சந்தையில் கிடைக்கக்கூடிய அதி உயர்ந்த வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்ளல்.
5. இலகுவான நிபந்தனைகளிலும் நடைமுறைகளிலும் சூழல் நிலைகளைக் கருத்தில் கொண்டு குறைந்த வட்டி வீதத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்தல்.
6. கிராமிய வங்கிகளில் இன்று ஏற்பட்டுள்ள மந்த நிலையை போக்கி வளர்ச்சியை துரிதப்படுத்துவதுடன் பணியாளர்களுக்கு போதியளவு பயிற்சிகளை வழங்குதல்.
7. புதிய கவர்ச்சிகரமான திட்டங்களை கிராமிய வங்கி ஊடாக அறிமுகப்படுத்துவதன் மூலம் கூட்டுறவு நிதியை வளர்த்துக் கொள்ளல்.
8. கூட்டுறவுப் பணியாளரின் நலன்புரி அமைப்புக்களைஏற்படுத்துவதுடன் அவர்களிடையே பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல்.
9. கிராமிய மக்களிடையே அபிவிருத்திக் குறிகாட்டியினை வங்கிப் பழக்கத்தினை ஏற்படுத்துதல்.
10. கிராமிய கூட்டுறவு வங்கி கிராமிய மக்களின் முக்கிய நிதி நிறுவனம் என்றும் நோக்கை அடையக் கூடியவாறு, அதற்கான வழி வகைகளையும் வேலைத் திட்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவுத் தாயின் <——— ———> வரலாற்றுக் குழந்தை!

திங்கள் ஒருமுறை எங்கள் கரங்களில் தவழும் 'சங்கமம்' இதழுக்கு வாழ்த்துச் செய்தியை வரைவதில் பட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். வன்னி பெருநிலப்பரப்பில் கன்னித் தமிழுடன் சடந்த ஆண்டு கூட்டுறவாளர் தின விழாவில் கூட்டுறவாளரின் ஒன்று கூடிய உழைப்பினால் உருவாகி வெளி வந்த 'சங்கமம்' இதழ் மக்கள் மனங்களில் சங்கமமாகியுள்ள நிலையை எண்ணிப் பார்க்காது இருக்க முடியவில்லை.

கூட்டுறவுத் தாயின் வரலாற்றுக் குழந்தையாக பிறப்பெடுத்து பல்வேறு துறைகளிலும் இளை பரப்பும் 'சங்கமம்' கூட்டுறவில் ஒரு மாற்றத்தை வேண்டி நிற்கும் ஒரு இதழாக வாராந்த மலராக பத்திரிகா தர்மத்துடன் செழித்து வளர என்றென்றும் எமது வாழ்த்துக்கள்.

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
திரு. சி. தவராசசிங்கம்
தலைவர்
பூநகரி ப. நோ. கூ. சங்கம்

## சுதந்திர தேசத்தின் சுவாசக்காற்றே!

அரிய கூட்டுறவின் அணையா நினைவாய்
அனைத்து மக்களின் ஆற்றல் பொருளாய்
உலகே வியக்கும் ஒளிவிளக்காய்
ஊழியர் தங்கள் உண்மை விளம்பியாய்
படைப்புகள் மிளிரும் ஒளிர் ரூபமாய்
பார்வை யாவும் மக்கள் பக்கமாய்
சுதந்திர தேசத்தின் சுவாசக் காற்றாய்
சரித்திர புதல்வரின் சக்தி ஊற்றாய்
ஆற்றல் யாவும் மிளிரும் மடராய்
மாணவர் தங்கள் மட்டற்ற பொக்கிசமாய்
மழலை சிறுவரின் மந்திரப் பொருளாய்
வன்னி மண்ணின் உயிர் நாடித் துடிப்பாய்
வளரும் உனது செயல்கள் யாவும்
வருகை எல்லாம் நல்லதே ஆகும்
வாழ்க என்றும் கூட்டுறவே
வளர்க சங்கமம் உன் புகழே
வாழி வாழி நீடூழி வாழி.
நன்றி

திரு. [redacted]கண்ணன்-
தலைவர்
திருவையாறு வாலிப திட்ட
விவசாயக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்.

## கூட்டுறவில் கூட்டுறவு!

' கூடி வாழ்ந்தால் கோடி நன்மை
கூட்டுறவே நாட்டுயர்வு''
எனக் கூடிக் கோஷமிட்டு
கோபுரம் போல் வளர்ந்த கூட்டுறவே,
உன் கூட்டுறவுக் கொள்கையிலே
குறை கூறித் திரிதலையும்,
கூடிப் பிழை காண்பதையும்
புதுக் கொள்கையாக - நீ
கொண்டு வந்து சேர்த்ததெப்போ?

கூட்டுறவில் கூட்டுறவாம்
இதை
உன் கொள்கையாக மட்டும்
கொண்டிருந்தால் போதுமா?
உள்ளத்துள் ஒரு நினைப்பு
உதட்டில் ஒரு வார்த்தை
செயலகயோ வெவ்வேறு
ஏனிந்த வேறுபாடு?

போட்டிகள் உனக்குள்
பொங்கிப் பரவட்டும்
பொறாமை கொண்டு வாழ்வதனால்
வரப் போகும் பயனென்ன?
அயலின் சங்கத்தை நீ
அவதூறாய்ப் பேசுவதால்
உன் மதிப்பு என்ன
உயரப் போய் விடுமா?

தெரு நாயை விடக் கேவலமாய்
தெறித்து விழும் உன் வார்த்தை
கேரேறி ஊரெங்கும்
ஊர்வலமாய்ப் போகிறது
உன்னுள்ளே உள்ள குப்பை
ஒருவருக்கும் தெரியாதென்றா
அடுத்தவன் குப்பைகளை
கிண்டிக் கிளறிப் பார்க்கின்றாய்?

சங்கமே,
பிறர் பிழை காண்பதனால்
நீ காணும் பயன் என்ன?
பிறர் குறை
காணும் உன் செய்கையினை
கூண்டோடு ஒழித்து விடு

இல்லையேல்
''கூட்டுறவில் கூட்டுறவு''
என்னும் சொற்பதத்தை
உனது கொள்கையிலிருந்து
நீக்கி விடு

ஆக்கம்: பொ. சிவபாலன்
வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவும் சமஷ்டித் தன்மையும்

நீண்ட நெடுநாளாக மௌனமாக உலக அரங்கில் அழியாக் கோலமாக விளங்கி வரும் கூட்டுறவானது சமுதாயத்தின் உயிர்நாடியாக தொடர்ந்து செயற்பட்டுவரும் ஒரு உயிர்த்துடிப்புள்ள நிறுவனமாகும். இதன் நிலையான தொடரான செயற்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் பல்வேறு காரணிகளுள் அதன் அமைப்பும் ஓர் இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது என்பது நோக்கத்தக்கது.

கூட்டுறவின் ஆரம்பம் ஓர் ஒற்றையாட்சி அமைப்புக் கொண்ட பிரித்தானியாவில் இருந்து தொடங்கிய போதிலும், அதன் அமைப்பு சமஷ்டித் தன்மையாக உருவாவதற்கு வாய்ப்பாக அமைந்த சூழலே உண்மையில் இன்றளவும் கூட்டுறவின் நிலைபேற்றுக்கு அடித்தளமாகிறது என்பது நோக்கற்பாலது. அதாவது நீண்ட பார்வையில் கூட்டுறவு சோசலிசப் புரட்சிகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு; ஆயினும் சோசலிசம் வீழ்ச்சி கண்டு செல்லும்போதும் கூட்டுறவு அதன் பழமைத் தன்மையைத்தானும் அடிப்படையாகக் கொண்டுகூட வீழ்ச்சிப் பாதைக்குச் செல்லவில்லை மாறாக மேலும் மேலும் வீறுகொண்டு செல்கிறது. இங்கு ஓர் உண்மையும் இல்லாமல் இல்லை என்ன வனில்போர்ச்சூழலினால் ஏற்படும் தளம்பல் பொருளாதாரத்துக்கு முகம்கொடுக்க முடியாமல் தம்மைப் பாதுகாக்க மக்களால் உருவான இவ் அமைப்பு போர்ச்சூழல் பகுதிகளில் சிறப்பாக இயங்குகின்றது என்பது உண்மை ஆயினும் ஏனைய பகுதிகளில் இவை சிதைந்து விடவில்லை என்பதும் நோக்கப்படவேண்டியது.

சமஷ்டி என்பதைப் பொதுவாக பல பகுதித் தலதாபனங்கள் தமது நலன்களால் பேணவும், ஒன்றுபட்டு உறுதித் தன்மையை நிலைநாட்டவும் தாம் ஒன்று சேர்ந்து உருவாக்கிக் கொள்ளும் ஒரு கூட்டு அமைப்பே சமஷ்டியாகும். இங்கு சமஷ்டியில் இணைவதற்குரிய விருப்பமும் அவ்வாறே விரும்பிய நேரம் பிரிவதற்குரிய உரிமையும் இருக்க வேண்டியது சமஷ்டியின் இன்றியமையாத பண்பாகும். அவ்வாறே கூட்டுறவும் இந்தப்பண்புகளை தன்னகத்தே நிறைவாகக் கொண்டுள்ளமை வெளிப்படை.

கூட்டுறவும் கிளைரீதியாக வேறுபட்ட தொழில் முயற்சியாக இயங்குபவர்களையும் அல்லது - ஒரு முகப்பட்ட முயற்சியுடையவர்களையும் இணைத்த மத்தியில் ஒரு தலைமைக் கூட்டுறவு சங்கத்தை அமைத்து அதனூடு தமது பொருளாதார நலனை பேணுகின்றன. பெருமளவிலான சுழற்சித் தன்மையினூடு ஒன்றிணைந்து சிறிய பகுதிகள் தங்கள் நலனைப்பேணி தம்மை அபிவிருத்தி செய்கின்றதோடு கிளைகள் தாமும் நேரடியாக தமது பிரதிநிதிகளை தலைமைச் செயலகத்துக்கு அனுப்பி தமது அங்கத்துவத்தையும் நிலை நிறுத்திக் கொள்கின்றன. இவை ஒரு நோக்குக் கூட்டுறவுச் சங்கமாகவும், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கமாகவும் மிளிர்கின்றன

1911ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட துறையாக கூட்டுறவு இலங்கையில் உருவாகியது. ஆயினும் அதன் ஜனநாயகத் தன்மையிலமைந்த சமஷ்டிப் பண்பு மக்களால் உணர்ந்து கொள்ளப்பட்டபோது அது மக்கள் நிறுவனமாக பிரகாசித்தது அதன்படி சிறுசிறு பிரிவுகளிலிருந்து உருவான தனியன்களின் பொது அமைப்பு அது சிறு பகுதிகளின் ஒருமித்த குரலாக ஒலிக்கும்படி உருவானது.

காலச் சுழற்சியில் இன்று உலகின் பெரும்பாலான பாரிய நிறுவனங்கள் வர்த்தக ரீதியில் இலாப நோக்குடன் இயங்குகின்ற சூழ்நிலையில் கூட கூட்டுறவும் அதனுடன் போட்டியிடும் தன்மையானது ஒருபகுதியின் மிகை ஒரு பகுதியின் குறையை நிரப்பி சமநிலையைப் பேணி தொடர்ந்தும் வர்த்தகக் கம்பனிகளுடனும் போட்டியிட்டு வருவதற்கு காரணமும் அதன் சமஷ்டிப் பண்புத் தன்மையேயாகும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நட்டத்தில் இயங்கும் பகுதி வேறு ஒரு காலத்தில்பெரும் மிகைஏற்படுத்தக்கூடியகிளைகளாகவோ அல்லது பிரிவுகளாகவோ உருவாக வாய்ப்புண்டு. எனவே நட்டத்தில் இயங்கிய காலப்பகுதியில் மிகையாக இயங்கிய பகுதிகளின் நலனில் ஒரு பகுதியைக் கொண்டு தொடர்ந்து இயங்கியது போல மிகையினால் ஏனைய பகுதிகளின் குறையை அல்லது நட்டத்தை நிறைவு செய்யும் தன்மையைப் பெறும், இந்நிலைதான் சமஷ்டியின் உயர்ந்த பண்பாகும்.

கூட்டுறவில் இணைந்தால் தமது நலனைப் பேணலாம் என்று நம்பி கூட்டுறவில் இணைந்தவர்கள் அந் நோக்கம் தாம் இணைந்த கூட்டுறவில் நிறைவேற்றப்படாத விடின் அல்லது தாம் தனித்து இயங்கினால் முன்பு பெற்ற பொருளாதார நலன்களைவிட கூடுதலான நலன் கிடைக்கும் என எண்ணினால் ஒரு குறிப்பிட்ட பகுதிகள் ஒன்றாகச் சேர்ந்து தம்மை தனித்த ஜனநாயக ஆளுகை கொண்ட கூட்டுறவு நிறுவனமாக உருவாக்கலாம். இச் செயற்பாடு சமஷ்டிக் கோட்பாட்டின்படி தாம் விரும்பிய நேரத்தில் பிரிந்து செல்லலாம் என்கின்ற உயர்ந்த கொள்கைக்கமைவாக அமைந்து கூட்டுறவின் ஆன்மாவுக்கு ஒரு நம்பிக்கையையும், பலத்தையும் தொடர்ந்து பேணி வருகின்றது.

இங்கு சர்வதேச ரீதியில் பெரிய அரசுகள் பல தாம் தொடர்ந்து நிலைப்பதற்கும் உள்நாட்டில் இணக்கமாகச் செயற்படுவதற்கும் அவை சமஷ்டி அமைப்பாக மாறவேண்டிய சூழ்நிலை உள்ளமை தவிர்க்க முடியாதது போல கூட்டுறவானது ஆரம்பம் முதலே ஒரு சமஷ்டிப் பண்பு கொண்ட ஒரு நிறுவனமாக உருவாகியமைக்கான வாய்ப்புகளாலேயே அது பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் இன்றுவரை நிலைப்பதற்கும் கூட்டுறவு கொண்டமைந்த அதன் உன்னதக் கொள்கைகளோடு சமஷ்டிப் பண்புகளும் ஒன்றியமையாதவையாகும்.

இன்று சர்வதேசத்தின் பொலிசுக்காரனாகத் தன்னை இனம் காட்டும் அமெரிக்கா கூட உள் நாட்டில் வைத்து அரசியல் சுதந்திரத்தன்மையைப் பேணுதற்குக் கையாளும் மிகப் பெரிய தந்திரமாக சமஷ்டிப் பண்பைப் பேணுகிறது அதனாலேயேஅதன் பெரிய நிலப்பரப்பும் தனித்துவமாகவும் ஒன்றாகவும் இயங்குகின்றன இவ்வுயர் கோட்பாடு மறைமுகமாக கூட்டுறவில் இணைந்திருப்பதனாலேயே அதுவும் தொடர்ந்தும் இயங்குகின்றன, சர்வதேச ரீதியிலான சமஷ்டிப் பண்புகளோடு கூடிய நாடுகள் தம்மை தனித்தனி அலகாக பிரிந்து ஆள விருப்பம் கொண்டு முனைவது போல கூட்டுறவும் தாமும் சிறு பகுதிகளின் கூட்டாக இணைய விரும்புகின்ற நிலையும் தவிர்க்க முடியாதபடி உருவாகின்றது. (உ-ம்;- சோவியத் ரஷ்யா)

எனவே கூட்டுறவு நிறுவனமானது வெளிப்படையாக அதன் ஆறு கொள்கைகளுக்கமைவாக செயற்படுவதனால் தொடர்ந்தும் இயங்குகின்றன என்பதற்கு மேலாக சில கூட்டுறவுக் கொள்கைகளுடனும் அமைப்பு ரீதியிலான அதன் சமஷ்டிப் பண்புமே அதன் தொடரியக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றது என்பது வெளிப்படையான அம்சமாகும். எப்போதும் சிந்தனை ஆற்றலுடைய மனிதன் தனது சுதந்திரத்தையும் ஆற்றலையும் எவருக்கும் அறுதியாக சாசனம் பண்ணிக் கொடுக்க விரும்பமாட்டான். சில கூட்டுக்களால் அவை வளம் பெறும் எனக் கண்டால் மட்டுமே அவன் சில நிபந்தனைகளின் கீழ் சில கட்டுப்பாட்டுக்குள் வர விரும்புவான். ஆனால் அவை தனது இயல்பையும் தனித்துவத்தையும் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு மேலாக கட்டுப்படுத்த முயலுமாயின் அவன் கட்டுப்பாட்டை உடைத்தெறிந்து விட உடனடியாக முயலுவான். இது உலக வரலாற்றில் காலம் காலமாக கண்டுணரப்பட்ட உண்மை. ஆனால் கூட்டுறவுக்கட்டுப்பாடு, கட்டுப்பாடின்மை என்பவற்றிற்கிடையில் நாசூக்காகச் செயற்படும் ஓர் சமஷ்டி வழி அமைப்பாகும் என்று கூறுவது பொருத்தமானதாகும்.

தி. கிருபாகரன் B. A (Cey)
பொதுமுகாமையாளர்
கரைச்சி தெற்கு ப.நோ.கூ. சங்கம் (வ-து)

# நிதித் திட்டமிடலும் நிதிப் பயன்பாடும்!

பெருமளவு வணிகம் செய்யும் நிறுவனங்களின் நிதி நிர்வாகம் ஒரு முக்கிய தொழிற்பாடாக இருந்து வருகின்றது. பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் தமது நிதி முறையாக நிர்வாகம் செய்யப்படுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நிதி திட்டமிடப்படாத பல நிறுவனங்கள் ஆரம்பித்த வேகத்திலேயே முறிவடைந்து விடுகின்றன

நிறுவனத்தின் பிரதான நிதி தொழிற்பாடுகளாக நிதியை திட்டமிடல், நிதியைப் பெற்றுக்கொள்ளல், பெற்றுக் கொண்ட நிதியை நிறுவனத்தின் பெறுமதியை உச்சப்படுத்தக்கூடியவாறு பயன்படுத்தல், மதிப்பாய்வு செய்தல் என்பன காணப்படுகின்றன.

1. நிதி திட்டமிடல் -
   இங்கு பாதீடுகளை தயாரிப்பதும், பிரதான நிதித் திட்டமிடலும்
2. நிதியைப் பெறல்;-
   விற்பனை, பெற வேண்டிய கணக்குகள், கடன்கள், பங்கு முதல்கள் போன்றவற்றை மேற்பார்வை செய்து திட்டமிடலும் பயன்படுத்தலும்.
3. நிதி பயன்படுத்தல்:-
   பல்வேறு செயற்பாடுகளில் அக்கறையுடையோர் மத்தியில் காசோட்டத்தை ஒழுங்கமைத்தல்.

சோ.ஜெயபாலன்
இலக்கம் 5
கிளி.ப தெ.வள.அ.கூ. சங்கம்

4. நிதி மதிப்பாய்வு:-
   நிறுவன சொத்துக்களின் பயன்பாடு பற்றி மதிப்பாய்வு செய்தல்.

## நிதியை ஒதுக்குதல்

நிதியானது கூடிய பயன்பாட்டினை தரக்கூடியவாறு ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை இரண்டு வகைப்படுத்தலாம்.

1. மூலதனச் செலவுகள்
2. வருமானச் செலவுகள்

மூலதனச் செலவுகள் என்பவை நீண்ட காலத்துடன் தொடர்புடையவையாகும். இவை தொடர்பான தீர்மானங்களும் நீண்டகால அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. எனினும் இவற்றின் விளைவுகள் நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகளை பாதிப்பனவாக அமைகின்றன. அதே வேளையில் வருமான செலவுகள் என்பன நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கையுடன் தொடர்புடையவையாகும். இரு செலவுகளும் நாளாந்த நடவடிக்கைகளை பாதிக்கின்ற போதிலும் அடிப்படையில் இவற்றின் தன்மைகள் வேறுபட்டு காணப்படுகின்றது. இவற்றினை கருத்தில் கொண்டு சரியான முறையில் ஒதுக்கீட்டை மேற்கொள்ளல் வேண்டும்.

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சரியான முறையில் தொழிற்படுதல்

நிறுவனமானது நிதியை செலவு செய்வதற்கு முன் சில அம்சங்களை கருத்தில் கொள்ள வேண்டும். நிறுவனத்தின் நிதித் தேவைகளை மதிப்பீடு செய்தல் மட்டுமன்றி சரியான நேரத்திலும் சரியான முறையிலும் அவற்றை பயன்படுத்துவதும் அவசியமாகும். என்பதனை கூறுவதே இதுவாகும்.

உதாரணம்;- இருப்பைப விற்பனை செய்தல் என்பது விலை உயர்ந்த நிலையிலும் நிதித்தேவையை ஈடு செய்ய கடன் பெறல் என்பது வட்டி குறைந்த நிலையிலும் மேற்கொள்ளப்படவேண்டியவையாகும். இதன் அடிப்படையில் பொருளின் விலை வட்டி வீதம் என்பவை தொடர்பான முன் நடவடிக்கையே இச் செயற்பாடு சரியான முறையில் மேற்கொள்ளுவதற்கு ஆதாரமாக அமைகின்றது

## நிதியை முகாமை செய்வதன் நோக்கம்

நிதியை முகாமை செய்வதன் அடிப்படைத் தத்துவம் எல்லா நிதித் தீர்மானங்களும் நிறுவனத்தின் பெறுமதியை உச்சப்படுத்துவதற்காக அமைய வேண்டும் என்பதாகும். சொத்துக்களை கொள்வனவு செய்யும் போது அவற்றின் பயன்பாடு நிறுவன பெறுமதியை உச்சப்படுத்தக் கூடியதாகவும் நிதியிடலானது குறைந்த செலவை கருத்தில் கொள்வதாகவும் அமைதல் வேண்டும். இவற்றின் அடிப்படையில் நிறுவன நோக்கங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I) செலவை இழிவு படுத்துதல்.
II) இலாபத்தை உச்சப்படுத்தல்
III) நிறுவனத்தின் பெறுமதியை நிர்வகித்தல்
IV) நிறுவனப் பெறுமதியை உச்சப்படுத்தல்.

நிறுவனநோக்கங்கள் தனித்தனியாக பகுத்து நோக்குகின்ற போதும் இவை ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவையாகவே காணப்படுகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த ஒரு செயற்பாட்டை எடுத்துக் கொண்டாலும் தனி மனிதனாயினும், நிறுவனமாயினும் திட்டமிடல் முக்கியமாகின்றது. இந்த வகையில் தற்போதைய கால கட்டத்தில் பொருளாதார ரீதியில் மட்டுமின்றி கலை, சமூக, பண்பாடு, கலாச்சார விடயங்களையும் வழி நடாத்திச் செல்லும் அமைப்பாக கூட்டுறவு நிறுவனங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

# கூட்டுறவு அமைப்பில்

இவை தமது செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு திட்டமிடல் முக்கியமாவதை அவதானிக்கலாம். இதுவே கூட்டுறவு திட்டமிடல் என நாம் கருத இடமுண்டு. கூட்டுறவு அமைப்பு ஒன்று தனது எதிர்கால நோக்கை நிர்ணயித்து அந்நோக்கத்தை அடையக்கூடிய வகையில் இயல்பான செயற்பாடுகளை விருத்தி செய்தல் கூட்டுறவுத் திட்டமிடல் எனப்படும். அங்கத்தவரை இலக்காகக் கொண்டு பொருளாதார, சமூக, கலை, கலாச்சார, பண்பாட்டு விருத்தி கருதி செயற்படல் கூட்டுறவின் நோக்காக அமையும். கூட்டுறவு ஒன்றின் நீண்டகாலத்துக்கான நோக்கு கூட்டுறவின் குறிக்கோளாக அமையும். இந்த வகையில் அங்கத்தவருக்கும், சமுதாயத்துக்கும் சேவை செய்தல் என்பது கூட்டுறவின் குறிக்கோளாக அமையும் கூட்டுறவின் குறிக்கோள் உருவாக்கப்பட்ட பின்னரே அதன் நோக்கமானது நிர்ணயிக்கப்படுகிறது.

கூட்டுறவு அமைப்பானது எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும்? எங்கு செய்ய வேண்டும்? எப்போது செய்ய வேண்டும்? யாரால் செய்ய வேண்டும்? போன்ற விடயங்களில் கவனத்தை செலுத்துவதன் மூலம் ஓர் ஆரோக்கியமான திட்டமிடலை மேற்கொள்ள முடியும்.

கூட்டுறவில் திட்டமிடலை மேற்கொள்ளும் போது முதலில் நோக்கத்தை வரையறுத்தல் வேண்டும். நோக்கமானது வரையறுத்த பின்னர் அடையவேண்டிய நோக்கத்திற்கும், தற்போதைய நிலைக்குமிடையேயான வித்தியாசத்தை அறிதல் வேண்டும். இதன் மூலம் நோக்கத்திலிருந்து எந்தளவிற்கு நிறுவனம் வேறுபட்டுள்ளது என்பதை கண்டறிந்து பொருந்தக்கூடியதும், சாத்தியமானதுமான திட்டங்களை உருவாக்க முடியும். இதன் பின்னர் நோக்கத்தை அடைவதற்கு ஏதுவாக உள்ள சாதக காரணிகளை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்வதுடன், பாதக காரணிகளை இனங்கண்டு அவற்றை நீக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

க. செல்வகுமார்
பொதுமுகாமையாளர்
திருவையாறு வாலிப திட்ட விவசாய கூட்டுறவுச் சங்கம்
அக்கராயன்

1. அங்கத்தவர் ஆதரவு
2. அரச சலுகைகள்
3. செயற்படு தன்மை
4. சந்தை வாய்ப்பு
5. விளம்பர தன்மை
6. பொருளாதார நிலைமை
7. மக்களது பழக்கவழக்கம் சாதகமாயிருத்தல் போன்ற சாதக நிலைகளை இனங்கண்டு அபிவிருத்தி செய்யவேண்டும்.

1. அரச தலையீடு
2. போட்டியாளர் தலையீடு
3. திறனற்ற முகாமை, ஊழியம்
4. முயற்சியில் நம்பிக்கையின்மை
5. நேர வரையறையின்மை
6. சாத்தியமற்ற திட்டங்கள்
7. கட்டுப்பாடற்ற திட்டமிடல் என்பனபோன்ற

பாதக காரணிகளை கூட்டுறவு அமைப்பு இனங்கண்டு நீக்குதல் வேண்டும். இவ்வாறு சாதக பாதக காரணிகளை இனங்கண்ட பின்னர் நோக்கை அடையும் பொருட்டு செயற்பாடுகளை விருத்திசெய்தல் வேண்டும். விருத்தி செய்யும் செயற்பாடுகள் மூலம் நோக்கத்தை அடையக் கூடியதாக இருக்கும்.

கூட்டுறவுத் திட்டமிடலானது பின்வரும் காரணிகளை மையமாகக்கொண்டிருக்கவேண்டும்.
1. திட்ட நடைமுறைகள் நெகிழ்வுத் தன்மை உடையதாக இருத்தல் வேண்டும்.
2. சூழல் காரணிகளை கருத்தில் கொண்டு திட்டமிடல் வேண்டும்.
3. திட்டங்கள் நடைமுறைக்கு ஒட்பானதாகவும் உடனடியாக அமுல்செய்யக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
4. வரையறுத்த நோக்கமிருத்தல் வேண்டும்,
5. திட்டம் நிறுவனத்தின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படுவதுடன் கட்டுப்படுத்தலுக்கும் இடமளிக்க வேண்டும்.
6. திட்டத்திற்கும், செயற்பாட்டிற்குமிடையே பாரிய வித்தியாசம் ஏற்படாதவாறு திட்டமிட வேண்டும்.

மேற்போந்த விடயங்களை பின்பற்றி திட்டமிடும் போது அது ஓர் வழுவாத திட்டமாக, செயற்படுதன்மை உடைய திட்டமாக காணப்படுவதனை அவதானிக்கலாம்.

கூட்டுறவைப் பொறுத்தவரை பின்வரும் முக்கியமான திட்டமிடல்கள் அவசியமாக அமைகின்றது.
1. ஆளணித் திட்டமிடல்
2. நிதித் திட்டமிடல்
3. செயற்பாட்டுத் திட்டமிடல்

கூட்டுறவின் ஆளணித் திட்டமிடல் எனும் போது நிறுவனம் தனது நோக்கை அடையும் பொருட்டு சரியான நேரத்தில், சரியான தொகையில் ஊழியர்களைப் பேணும் செயற்பாட்டைக் கருதும். இதன் பொருட்டு தேவையான மனித வளத்தைப் பெறுதல், பயன்படுத்தல், விருத்தி செய்தல், தொடர்ந்து பேணுதல் என்பவற்றிற்கான செயற்பாடே ஆளணித் திட்டமிடல் என வரையறுக்கலாம். சிறந்ததோர் ஆளணித் திட்டமிடல் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

# திட்டமிடல்!

1. ஊழியத்தின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளலாம்.
2. ஊழியர் செயற்திறனை விருத்திசெய்யலாம்.
3. பொருத்தமான ஊழியரை தேவைக்கேற்ப இணைத்துக்கொள்ளலாம்.
4. ஊழியரைத் தொடர்ந்தும் ஊழியத்தில் ஈடுபடுத்தலாம்.
5. பயனற்ற ஊழியரை / மிகை ஊழியரை நீக்கலாம்.
6. விசுவாசமான ஊழியத்துடனான ஊழியரைப் பெற்றுக்கொள்ளலாம்.

கூட்டுறவின் நிதித் திட்டமிடல் எனும்போது நோக்கை அடையும் பொருட்டு தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்ளல், பயன்படுத்தல், நிலைநிறுத்திப் பாதுகாத்தல் போன்ற செயற்பாட்டை உள்ளடக்கியதென வரையறுக்கலாம். சிறந்ததொரு நிதித் திட்டமிடல் மூலம் பின்வரும் நன்மைகளை அடைய முடியும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நிதித் திட்டமிட ...

### நிதி முகாமையின் முக்கியத்துவம்

நிறுவனங்கள் பெருமளவு மூலதனத்தை ஈடுபடுத்தி தமது தொழிற்பாடுகளை மேற்கொள்ளுகின்றன. இத் தொழிற்பாடுகள் தொடர்பாக சில முன் உணர்வுகள் தீர்மானங்கள் என்பன அவசியமாகும். எனினும் தவிர்க்க முடியாத சில புறக்காரணிகளால் நிறுவனத்தின் செயற்பாடுகள் பாதிப்படையலாம்.
1. விலை வீழ்ச்சியும் வியாபார மந்தமும்.
2) தொழிலாளர் வேலை நிறுத்தங்கள்.
3) பொருளுக்கான கேள்வி குறைவடைதல்.
4) அரசின் கொள்கையிலான மாற்றங்கள்:

போன்ற காரணிகளால் நிறுவனம் பாதகமான விளைவுகளை எதிர்நோக்கலாம். இவற்றின் அடிப்படையில் நோக்கும்போது நிறுவனங்களின் முன் உணர்வுகள், தீர்மானங்கள் என்பன வலுவானவையாக இருக்கவேண்டியது அவசியமானதாகும். இவற்றின் அனுமானங்கள் சரியானவையாக அமையும் போது நிறுவன இலாபத்தன்மை உயர்ந்த பெறுமதி என்பன உத்தரவாதப்படுத்தப்படுகிறது. அனுமானங்கள் தவறானவையாக அமையும்போது நிறுவன நிலைமை எதிர்பாராத வகையில் மாற்றம் அடைவதுடன் இலாப வீழ்ச்சி போன்ற பாதக விளைவுகளும் ஏற்படலாம்.

## மாவட்ட கூட்டுறவு வங்கி

டங்களையும் இனம் கண்டு நடைமுறைப் படுத்தல்

11. நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியின் முக்கிய பங்காளியாக கூட்டுறவு இயக்கம் இருந்து சேவை செய்தல்.

கூட்டுறவின் ஆரம்ப காலங்களில் ஒவ்வொரு தனி நோக்குக்கும் என தனித்தனி சங்கங்களாகவே தோற்றம் பெற்றது. அவ்வேளையில் இச்சங்கங்கள் ஒரு வரையறுக்கப்பட்ட சேவைகளை மட்டுமே செய்து வந்ததுடன். பெருமளவு வேலைப் பழுக்களும் காணப்படாமையினாலும். 1956 ஆம் ஆண்டில் தனி நோக்குச் சங்கங்களை முகாமை செய்வதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் என ஒன்றிணைந்து, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தார்கள். ஆனால் இன்று கூட்டுறவுச்சங்கங்களே சமூகத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவு செய்ய வேண்டிய நிலைமை உருவாகியதனால், இதன் சேவைகளும் வரையறுக்க முடியாதுள்ளதுடன், முகாமைக்கும் பெரும் நெருக்கடிகளையும் வேலைப் பழுக்களையும் எதிர் நோக்கி இருப்பதனால் மீண்டும் 1971 இல் இருந்து தனி நோக்கச் சங்கங்களின் வளர்ச்சியும் இரண்டாம் படிச் சங்கங்களின் தேவையும் அதிகரித்துக் காணப்படுகின்றது

# காலம் மாறும் - இது உலக இயற்கை விதி

மீண்டும் ஒரு நரபலி! - வன்னியில்
உடையார்கட்டு, சுதந்திரபுரம்,
வள்ளிபுனத்தில்
இரத்த ஆறு ஓடுகிறது-
சதைத் துண்டங்களின் குவியல்
வயது வேறுபாடு அற்ற
இரும்புத்துண்டின் வெறியாட்டம்!
''யூன்'' ''யூலை'' யை எரித்து
இரை மீட்கின்றான்

[illegible]
இடிமுழக்கம்!
யாழ்தேவி!
சூரியககதிர் I, சூரியக்கதிர் II
சத்ஜெய!
ஜெயசிக்குறு! எம்
மண்ணில் - ''தமிழர் தாயகத்தின்''
இராணுவப் - படுகொலைகள் -
இச்சகதிக்குள்
புதைந்து, தெளிந்து, நிமிர்ந்து
எழுந்துள்ளோம்! இனி
இழக்க எதுவுமில்லை.

ஜெயசிக்குறு! சண்டியனே!
தடம் புரண்டு போகிறாய்
பாதை திறக்க வந்த உனக்கு
வன்னிமண் - பாடம்
புகட்டும் - சண்டாளப் பயலே!
சரித்திரம் எமக்கல்ல உனக்கே!
தருமம் எம் பக்கம் - எம்
படையணியுடன் குத்துக்கரணங்கள்
அடிக்கின்றாய்!

என்றும் அமைதியான சூழல்
நிவாரணம் பெற நீண்ட கியூவில்
நின்றோம்.
பேரிரைச்சல் கேட்டு பிணந்தின்னிக்
கிபிர் என்று
அடைக்கலப் கவி - சற்று
இடம் எடுத்தோம்.
எறிகணை விழும் சத்தமும் கேட்டது
நேற்று கிளிநொச்சியில் கேட்ட சத்தம் போ
எம் இளசுகளின் ஆட்லறிகள்
ஆனால் இன்றோ எம் பக்கம்
இயமன் வருகிறான்
தலைமேல் இடி விழுந்தது

இரணியனின் வேலை தான்
நேருக்கு நேராய் வர முடியாமல் - எம்
இரத்தம் குடிக்கும் எண்ணமோ
வா எங்கள் படைக்கும்
கோபம் வரும் - அப்போ
உன் தலை சிதறும்

சர்வதேசமே!
பதினைந்தை அறியாத பாலகரும்
மாண்டார்கள் - எம் இளசுகள்
பரிசோதனைக் குழாயில் பிறக்கவில்லை
கர்ப்பத்தில் இருக்கும் வேளை
கந்தகத்தை மணந்தவர்கள்

வன்னிக்களம் ---
அரசியலுக்கும்! இராணுவத்துக்கும்!
சமன்பாடு சொல்லும் - நாம்
பலம் உள்ள இனம்
படைப்பலமுள்ள இனம் - இது
உலகறியும் - எம்
வளர்ப்பு முறையே வித்தியாசமானது
பகைவனுக்கு பணியோம் - வேதனையை
தந்தவனுக்கே திரும்பக் கொடுப்பதே

எம் அகராதி
வன்னி மக்கள்
எல்லை போடுவார்கள்
ஓயமாட்டோம்! காலம் மாறும்
இது உலக இயற்கை விதி

கானகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலையும் oooooo oooooo நிலையும்!

ஒரு தேசியத்தின் அடையாளத்தைப் பிரதிபலிப்பதில் கலாச்சாரம் முக்கிய பங்கினைக் கொண்டிருக்கிறது. கலைகளும், பண்பாடும் இணைவதனால் ஏற்படும் கலவையே கலாச்சாரம் எனப் பொதுமைப்படுத்தப்படுகிறது. எனவே ஒரு தேசியத்தின் கலை வடிவங்களும், அவர்களின் வாழ்வியல் பண்பாட்டு அம்சங்களும் உயரிய தளத்தைக் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த எதிர்பார்ப்பை சரியானபடி நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு.

76 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினக் கொண்டாட்டங்கள் கிளி. மாவட்டத்தில் ஓர் அற்புதத்தை நிகழ்த்தியிருக்கிறது. மிகத் தரமான ஆறு நாடகங்கள் ஒரே மேடையில் ஏற்றிய நிகழ்வே அதுவாகும். இவ்வாறு நாடகங்களுமே ஒன்றை ஒன்று விஞ்சியனவாக நவீன அரங்க உத்திகளையும் நடிப்பாங்கு, இசை என்ற நாடகப் பாங்குகளையும் கொண்டிருந்தமை மிகவும் பாராட்டக்கூடிய அம்சமாகும்.

நவீன அரங்கியல் வடிவத்தைத் தழுவிய குறியீட்டு நாடகம் ஒன்று 1989 நவம்பர் 27ஆம் கோணாவில் பாடசாலையில் இடம்பெற்ற முதலாவது மாவீரர் தின நிகழ்வுமேடையில் அரங்கிடப்பட்டது. இதனை உருவாக்கி நெறிப்படுத்தியவர் திரு. நா. யோகேந்திரநாதன் இதன்பின் கல்வித்திணைக்களத்தின் நாடகப்பட்டறைகள் ஊடாக கிளிநொச்சியில் பலகுறியீட்டு நவீன அரங்கியல் நாடகங்கள் இடம்பெற்றன. எனினும் இந்த கூட்டுறவு மேடையிலேயே ஆறு தரமான நாடகங்கள் மேடையேறின. இந் நாடகங்கள் உருவாகுவதற்கு நாடகவித்தன்னர்களான திரு. பொன். கணேசமூர்த்தி, திரு. பாலா மாஸ்டர், திரு. விஜயசேகரன். திரு. றோமியல், திரு. பொன்.காந்தன், திரு சதீஸ், திரு. ரவீந்திரா, திரு. தயாபரன் ஆகியோரே காலாக அமைந்தனர். இவர்களில் முதலிருவரும் தமிழீழத்தின் மிகப்பிரபல்யமான கலைஞர்கள். ஏனைய இருவரும் கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நாடகப் பட்டறைகளுடாக வெளியேறியவர்கள். பிந்திய நால்வரும் மாணவர்களாக இருந்து பாடசாலை நாடக அரங்குகளின் ஊடாக உருவாகியவர்களாவர். இவர்களுக்கு நாடகமும் அரங்கியலும் பாடமாகவும் கற்கும் வாய்ப்பும் இருந்தது எனினும் மூன்று வகையான தரத்தினரும் ஒருவருடன் ஒருவர் போட்டியிடக்கூடிய தரமுடைய நாடகங்களை வெளிக்கொணர்ந்தனர். என்பது பாராட்டுதற்குரிய விடயமே. இவர்களுக்குரிய தளமாக கூட்டுறவுத் தினவிழாவும், கூட்டுறவுச்சங்கங்களும் அமைந்திருந்ததும் பாராட்டுதற்குரிய விடயமே.

நாடகத்தினூடாக கலை வெளிப்பாட்டுக்கு வழங்கப்பட்ட பாராட்டைப்பெறாது நாடகமுடிவுகள் வெளியிடப்பட்ட பின் இடம்பெற்ற இரண்டொரு குழுவினரின் தனிமனிதப்பண்பாடுசார்ந்த நடவடிக்கைகள் தொடர்பில் கவலையையும், கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டிய நிலைப்பாடும் எழுந்துள்ளது. போட்டி நாடகங்களை முழுமையாக பார்த்த ஒருவருக்கு அதனைப்பற்றி ஒரு பொதுவான அபிபிராயம் தெரிவிக்கமுடியும். அவ்வாறில்லாமல் தம்முடைய நாடகங்களை அரங்கிட வந்திருந்தவர்கள் எப்படி தமது நாடகங்களுக்கு முன்பும் பின்பும் நிகழ்ந்த நாடகங்களை பார்க்க முடிந்தது என்ற கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை.

எமக்கு பரிச்சயமான தமிழ் திரைப்பட உலகில் பல தேசிய விருதுகளை வென்றெடுத்த படங்கள் பல மக்கள் ஆதரவில்லாமல் வசூல் இன்றி போயுள்ள நிலைமை காணப்படுகிறது. எனவே சாதாரண மக்களால் ரசித்தும் அமோகமாக வரவேற்கப்படும், அனைத்தும் தரமானவை என்று எடுத்துக் கொள்ளமுடியுமா? என்ற கேள்வி என்னுள் எழுகிறது. உண்மையிலேயே பிரதியாக்கத்துக்கும் நெறியாள்கைக்கும் பொறுப்பானவர்கள வெற்றி, தோல்விகளை ஒரே மாதிரி ஏற்றுக்கொள்ள ஏனையோரால் முடியாமல் போனது ஏன்?

எமது மண்ணில் நாடகத்துக்கு கிடைத்துள்ள புதிய களத்தை வரவேற்போம். பிறர் என நினைக்கண்டு துளைஞும் கலைஞனின் வாழ்வில் பொறாமைக்கும் அழுக்காறுக்கும் இடம் ஏது? புதியதோர் உலகம் காண கலைஞர்களாய் இணைந்து செயற்படுவோம்.

- ஆசிரியர்

கூட்டுறவு தினத்தையொட்டி கூட்டுறவுச் சங்கங்களிடையே நடத்தப்பெற்ற நாடகப் போட்டி பற்றிய குறிப்புகள்

- கிளி. மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தால் -

# 76வது சர்வதேச கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்!

## சங்க மட்டப் போட்டி முடிவுகள்

01) பூநகரி ப. தெ. வ. கூ. சங்கம்
1) கிடுகு பின்னல்;-
01. சிவராசா லலிதா
02. இராமன் திலகவதி
03. தர்மராசா வள்ளிநாயகி
2) மரம் ஏறல்;-
1. திரு. ச. இராஜேஸ்வரன்
2. திரு. வே. கந்தசாமி
3. திரு. கனகு விக்கினேஸ்வரன்

02) கிளி/ப. தெ. வ. அ. கூ. சங்கம்
1) கிடுகு பின்னல்:-
1. திருமதி ஆ. தங்கம்மா
2. திருமதி வே. கலா
3. செல்வி க. விஜிதா
2) பனைமரம் ஏறல்:-
1. திரு. இ. கமலநாதன்
2. திரு. வே. உதயகுமார்
3. திரு. ந. பரமேஸ்வரன்

03 கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம்
1) நீச்சல்:-
1. திரு. இ. வினோத்-நலன்புரி அமைப்பு
2. திரு. ம. ஜேசுதாசன்-புனித அன்னம்மாள்
3. திரு. ந. நிமாசன்-அன்னை வேளாங்கன்னி
2) தண்டு வலித்தல்;-
1. அன்னை வேளாங்கன்னி
2. அன்னை வேளாங்கன்னி
3. நலன்புரி அமைப்பு
3) படகு ஓட்டம்:-
1. அன்னை வேளாங்கன்னி
2. அன்னை வேளாங்கன்னி
3. அன்னை வேளாங்கன்னி
4) மாட்டுவண்டிச் சவாரி;-
பிரிவு ஏ:-
1. திரு. இ. யோகேஸ்வரன்
2. திரு. ம. யதுர்சன்
3. திரு. குகதாசன்
பிரிவு பி:-
1. திரு. வெ. தங்கராசா
2. வி. வினித்தா
3. செ. கோகிலவிழி
பிரிவு சி.-
1. திரு. ந. கமல்ராஜ்
2. திரு. இ. யோகேஸ்வரன்
3. திரு. சு. விக்கினேஸ்வரன்
பிரிவு டீ:-
1. திரு. ச. சத்தியபவான்
2. திரு. பா. யோகராசா
3. திரு. க. கணபதிப்பிள்ளை
5) துவிச்சக்கரவண்டி ஓட்டம்
1. திரு. வே. சிவனேசன்
2. திரு. ம. கிருபாகரன்
3. திரு. அ. ஜெயசிறி
6) மரதன் ஓட்டம்:-
1. ஆண்கள்:-
1. திரு. வே. சிவநேசன்
2. திரு. இ. ஜெயந்திரன்
3. திரு. யோ. சசிகுமார்
2. பெண்கள்:-
1. செல்வி. செ. அஜந்தினி
2. செல்வி. சி. கோகிலா
3. செல்வி. சி. சிதா
7) கரப்பந்தாட்டம் குழு:-
1. கிளி/ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
2. கரைச்சி வடக்கு ப.நோ. கூ. சங்கம்.
08) உதைப்பந்தாட்டக் குழு:-
1. கரைச்சி தெற்கு ப.நோ. கூ. சங்கம்.
2. கரைச்சிகிழக்கு ப. நோ. கூ. சங்கம்.
09) கயிறு இழுத்தல் குழு;-
1. கிளி/ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
2. கரைச்சிதெற்கு ப.நோ. கூ. சங்கம்.
10) நாடகம் (குழு).-
1. அக்கராயன்ப.நோ.கூ.சங்கம்
2. கிளி/ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்
3. கிளி/கூட்டுறவுக் கல்லூரி

## பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி

பேச்சுப் போட்டி

பிரிவு 1
1. இ. சுதர்சனா கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம்
2. சி. பிரசாத் கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்
3. பா. மேனா கிளி/புனித திரேசா மகளிர் கல்லூரி

பிரிவு 2
1. பீ. ஜெயஸ்மீன் ஜெயமலர் கிளி/பூநகரி மகாவித்தியாலயம்
2. கு. மயூரா கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
3. பா. சிறீப்பிரியா கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம்

பிரிவு 3
1. ஆ. கலைச்செல்வி கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
2. த. விஜிரூபினி கிளி-பரந்தன் இந்து மகா வித்தியாலயம்
3. பா. ஜெனா கிளி-புனித திரேசா மகளிர் கல்லூரி

கட்டுரைப்போட்டி

பிரிவு 1
1. சி. சிவசங்கரி கிளி-அக்கராயன் மகாவித்தியாலயம்
2. ச. மயூரன் கிளி-கறுக்காய்த்தீவு அ. த. க. பாடசாலை
3. த. திலீபன் கிளி - முருகானந்தா மகா வித்தியாலயம்

பிரிவு 2
1. இ. சுவின்யா கிளி-முருகானந்தா மகா வித்தியாலயம்
2. பா. சயந்தினி கிளி-உருத்திரபுரம் மகா வித்தியாலயம்
3. த. துஸ்யந்தினி கிளி-சிவநகர் அ. த. க. பாடசாலை

பிரிவு 3
1. ஜெ. வித்தியாவதி கிளி-முருகானந்தா மகா வித்தியாலயம்
2. ம. தீபாஜினி கிளி-வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
3. செ. ஜசோதா கிளி-புனித திரேசா மகளிர் கல்லூரி

பொது அறிவுப் போட்டி:-

பிரிவு 1
1. இ. கமலேந்திரன் கிளி-கனகபுரம் மகா வித்தியாலயம்
2. சி. பிரசாத் கிளி-முருகானந்தா மகா வித்தியாலயம்
3. ம. உசாகரன் கிளி-பாரதி வித்தியாலயம்

பிரிவு 2
1. சி. வனுராஜ் கிளி-இராமநாதபுரம் மகா வித்தியாலயம்
2. செ. றஜீவன் கிளி-வட்டக்கச்சி மகா வித்தியாலயம்
3. க. துஸ்யந்தன் கிளி-முருகானந்தா மகா வித்தியாலயம்

பிரிவு 3
1. கு. டெல்பிசேவியர் கிளி-முருகானந்தா மகா வித்தியாலயம்
2. க. சதீஸ்குமார் கிளி-இந்துக் கல்லூரி
3. வி. சுதர்சினி கிளி-கனகபுரம் மகா வித்தியாலயம்

சித்திரப்போட்டி

பிரிவு 1
1. நா. ஜெனீஸ்வரன் கிளி-கனகபுரம் மகா வித்தியாலயம்
2. ஜெ. மேனகன் கிளி-திருவையாறு மகா வித்தியாலயம்
3. ம. பரமேஸ்வரி கிளி-புனித பற்றிமா றோ. க. த. க. பாடசாலை

பிரிவு 2
1. ஜே. போல்றஜிந்தன் கிளி-புனித பற்றிமா றோ. க. த. க. பாடசாலை
2. ந. றஞ்சித்குமார் கிளி-உருத்திரபுரம் மகாவித்தியாலயம்
3. சே. ஞானசேகரன் கிளி-திருவையாறு மகாவித்தியாலயம்

பிரிவு 3
1. சொ. விஜிகரன் கிளி- வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
2. ப. சுகந்தன் கிளி- மத்திய கல்லூரி
3. சி. ஜெகதீபன் கிளி- தருமபுரம் மகாவித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி. மாவட்ட விளையாட்டு வளர்ச்சி...

அண்மையில் மல்லாவியில் நடந்து முடிந்தது வன்னி பெருநிலப்பரப்பு பாடசாலை மாணவர்களுக்கான உபமாகாணப் போட்டி. ஐந்து வருட இடைவெளியின் பின் இடம் பெறுகிறது விளையாட்டு அமைச்சின் மாவட்ட விளையாட்டுப் போட்டி. 76வது கூட்டுறவாளர் விழாவுடன் இணைந்து பல விளையாட்டரங்க முயற்சிகள் என இடம் பெயர்ந்த வாழ்விலும் தொடர்கிறது பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகள் தமை மறந்து களித்திருக்க, எம் சிறாரின் உடற்திறன் சிறக்க போரின் நெருக்கடியில் எழுந்த உள நெருக்கடியை குறைவென பல்வேறு வழிகளில் உதவும் விளையாட்டுக்களின் வளர்ச்சி பற்றி கூறுங்கள் ...

கிளிநொச்சிப் பிரதேசத்தில் எழுபதுகளில் இங்குள்ள விளையாட்டுக்கழகங்களை இணைத்து கிளிநொச்சி விளையாட்டுச் சங்கம் எனும் அமைப்பு பல விளையாட்டு நிகழ்வுகளை இங்கு நடத்தியது. இச்செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்தவர்கள் திரு. எக்ஸ். ஆர். பிரான்சிஸ் மற்றும் திரு. குணரத்தினம் ஆகியோராவர். 84 இல் கிளிநொச்சி தனி மாவட்டமாகியது 85 தொடக்கம் விளையாட்டமைச்சின் மாவட்ட மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டன. அப்போது மாவட்ட விளையாட்டதிகாரியாக இருந்தவர் திரு. அண்ணாத்துரை அவர்கள். அக்காலத்தில் மெய்வல்லுனர் தவிர்ந்த ஏனைய நிகழ்வுகளில் (உதைபந்தாட்டம் வலைபந்தாட்டம், கரப்பந்தாட்டம். நீச்சல்) அகில இலங்கை மட்டத்தில கலந்து கொள்ளும் வாய்ப்பு இருந்தது.

87ஆம் ஆண்டு கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு. அ. எமிலியானஸ் என்பவர் அகில இலங்கை விளையாட்டுப் போட்டியில் 200 மீற்றர் பிறீஸ்ரைல் நீச்சல் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கத்தை பெற்றார். இன்றுவரை கிளிநொச்சி சார்பில் அகில இலங்கைப் போட்டியில் பரிசு பெற்ற வீரராவர். திரு. அண்ணாத்துரை அவர்களின் பெருமுயற்சியும் இதற்குக் காரணமாயமைந்தது.

இதன்பின் 1993இல் வடகிழக்கு மாகாண மட்டத்தில மட்டக்களப்பில நடந்த விளையாட்டமைச்சின் போட்டியில் எமது மாவட்ட மெய்வல்லுனர் அணி கலந்து கொண்டது. அப்போது விளையாட்டதிகாரியாக இருந்தவர் திரு. விஜயநீதன் இப்போட்டியில் கலந்து கொண்ட இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த

உடற்கல்வி ஆசிரியர்
இ. கணேசலிங்கத்துடனான சந்திப்பு
கருத்தறிந்தவர் - சஞ்சிகா -

திரு. சிவனேசன் என்பவர் 5000 மீற்றர், 10,000 மீற்றர் போன்ற நெடுந்தூர ஓட்டப்போட்டிகளில் முதலிடம் பெற்றார். இதேபோன்று கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த செல்வி. கலைச்செல்வி என்பவர் 400 மீற்றர் போட்டியில் முதலிடத்தைப் பெற்றார். இங்கிருந்து சென்றவர் பல இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றனர்.

இவர்களை விட மாவட்டம் உருவாகிய காலங்களில் இருந்து இன்றுவரை தொடர்ந்து பதினைந்து வருடங்களாக குண்டெறிதல் நிகழ்வில் முதலிடத்தைப் பெற்று வரும் திரு. அன்பழகன் ஆசிரியர், தேசிய மட்டத்தகமை பெற்ற நீளம் பாய்தல் வீரரான பரந்தன் இளைஞர் வட்ட விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த திரு. ந. தெய்வேந்திரன் ஆகியோரையும் குறிப்பிட வேண்டும்.

இம்முறை நடைபெற்று முடிந்த மாணவர்களுக்கான உபமாகாணப் போட்டிகளில் முல்லைத்தீவு வித்யானந்த கல்லூரி மாணவர்கள் சிறந்த செயற்பாட்டினை வெளிப்படுத்தியிருந்தனர். இது பாராட்டப்படவேண்டிய விடயமாகும். இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களில் பலர் வட கிழக்கு மாகாண மட்டப் போட்டிகளில் முதலிடத்தைப் பெறக்கூடிய தகுதிறனைக் கொண்டிருந்தனர் என்பது அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எமது மாவட்ட மாணவர்கள் இப்போட்டிகளில் சற்றுப் பின்னடைந்திருந்ததற்கு பல்வேறு காரணங்கள் உண்டு இராணுவ நடவடிக்கை, இடப்பெயர்வு என்பன முக்கிய காரணங்களாக இருந்த போதும், உரிய முறையில் பயிற்சி பெறாமையும் உரிய (TRAINING METHOD) ஐ பின்பற்றாமையும் காரணங்களாக அமைந்தன.

கிளிநொச்சி மெய்வல்லுனர் சங்கம், செஞ்சிலுவைச் சங்கம், மனித முன்னேற்ற நிலையம் என்பவற்றின் ஆதரவுடன் மெய்வல்லுனர் பகுதி நேர பயிற்றுனர் (PART TIME COACH) மெய்வல்லுனர் அலுவலர் (OFEICALS) என்பவற்றிற்கான பயிற்சிகளை திரு. கனகராஜா அவர்களால் நடத்தப்பட்டது ஆயினும் இவை ஒழுங்குபடுத்தப்பட்ட நிலையில் தொடர் நடவடிக்கைகளை கொண்டிருக்காமையால் பயன் விளைவிக்காது போய்விட்டது. பயிற்றுனர்கள் அலுவலர்கள் தனிப்பிரிவாக அமைக்கப்பட்டு அவர்களின் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு தொடர்ச்சியான செயற்பாட்டைக் கொண்டிருக்குமாயின் எமது மாவட்ட மெய்வல்லுனர்களும் ஒருநாள் சர்வதேச அரங்கில் பிரகாசிப்பார்கள். உண்மையில் 12 - 15 வயது வரையான இளம்பிராய வீரன் ஒருவனை பயிற்றுவதன் மூலமே நல்லதொரு விளையாட்டு வீரனை உருவாக்க முடியும்.

அத்தோடு 93, 94 இல் திரு. பொன்விநாயகமூர்த்தி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற வன்னி ஐக்கிய விளையாட்டுச்சபையினால் நடத்தப்பட்ட போட்டிகள் போன்ற பெரிய அளவிலான விளையாட்டுப்போட்டிகள் விளையாட்டு வீரர்களை உற்சாகமூட்டுவதோடு, விளையாட்டு ஆர்வலர்களுக்கு நல்ல விருந்தாகவும் அமையும உளநெருக்கடிகளுக்கு இவ்வாறான போட்டிகள் அருமருந்தாக அமையும் என்பதில் ஐயமில்லை.

## கொள்கை

கூட்டுறவின் வளர்ச்சிக்கு
துணை கொள்கை
என்றார்கள். முன்பு
கடைப்பிடிப்போம்
என்றார்கள் (ஒரு வருடத்துக்கு முன்)
விருப்பத்துக்குரிய அங்கத்துவம்
எங்கே போய்விட்டது?
ஆதனம் இல்லாதவரும்
நிரந்தர தொழில் இல்லாதவர்கள்
எங்கே போவது?
சிந்தியுங்கள்
ஜனநாயக ஆளுகை என்றார்கள்
நடைமுறையில் சரியாக
நடைபெறுகிறதா
நான் சொல்வதே நடக்க வேண்டும்
என்பார் ஒருவர்
மற்றவர் கதைத்தால் வேலை
நிறுத்தம்
ஏன் இந்த அநியாயம்
கவனியுங்கள்
பங்கிற்கு மட்டான வட்டி
எங்கே?
மனச்சாட்சிக்கென்றாலும்
வழங்க வேண்டாமா?
பங்குகள் எங்கே போய்விட்டது?
யோசியுங்கள்
ஆதரவிற்கு தள்ளுபடி - எங்கே?
பங்கீடு என்றார்கள்
முட்டையாக போகிறது
பதுக்கல் இடம் பெறுகிறது
உற்று நோக்குங்கள்
கூட்டுறவுக் கல்வி - இது
நல்ல விடயமே - ஆனால்
யாருக்கு என்பது தெரியாமல்
பணியாளர்களுக்கு மட்டும்
மாதம் ஒருதடவை
கருத்தரங்கு
பரிதாபப்படுங்கள்
பாராமுகம் காட்டாதீர்கள்
கூட்டுறவின் கூட்டுறவு
எங்கே உள்ளது?
தேடினால் பொறுக்கி எடுக்கலாம்
கண்முன்னே தெரிகிறது
முரண்பாடுகள்
போட்டி ஏற்படுகிறது
ஒற்றுமை குறைகிறது
தங்கள் பெருமைக்காக
மக்கள் நலன் தெரிவதில்லை
உங்கள் பெருமையை விட்டு
மக்கள் சேவையை செய்யுங்கள்
வேறுபாடு வேண்டாம்
எல்லோரும் கூட்டுறவாளர்களே
கொள்கைகளைப்
பின்பற்றுங்கள் உயர்வடையலாம்
இது யார் சொன்னது
ஆத்திரம் வேண்டாம்
கூட்டுறவின் தந்தை
ஓவனே சொன்னார்
ஒன்று படுங்கள்
வெற்றிநடை போடலாம்.

ஆக்கம்
வன்னியூரான் [02]
வட்டக்கச்சி

## கூட்டுறவு அமைப்பில் திட்டமிடல்...

1. நிறுவன செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தலாம்.
2. பயனற்ற செயற்பாடுகளை நீக்கமுடியும்.
3. நிதி மூலங்களையும், நிதிப் பயன்பாட்டையும் இனங்கண்டு வரையறுக்க முடியும்.
4. செயற்பாட்டுக்குப் போதிய நிதியிருப்பதை உறுதிப்படுத்தலாம்.
5. செயற்பாட்டு கட்டுப்பாட்டைப் பேணலாம்.

கூட்டுறவின் செயற்பாட்டுத் திட்டமிடல் எனும் போது கூட்டுறவு அமைப்பின் எதிர்கால நோக்கை அடிப்படையாகக் கொண்டு அதனை அடையக் கூடியதாக செயற்பாடுகளைத் திட்டமிடுவதை க் குறிக்கும். இதன் மூலம் கூட்டுறவின் ''சேவை'' எனும் குறிக்கோளை அடைவதற்காக நோக்கங்களை நிர்ணயித்து சிறந்த ஓர் சமூகத்தை உருவாக்குவதே கூட்டுறவின் செயற்பாட்டுத் திட்டமிடல் எனச் சுருக்கமாகக் கூறலாம்.

- வாசகர் கடிதம் -

## கூட்டுறவு மகளிர் குழு அமைக்க வேண்டும்!

சஞ்சிகாவின் விவசாயக் கண்காட்சி பற்றிய கட்டுரை வெறும் காட்சி விவரணத் தொடுப்பாகவே அமைந்திருந்தது. எனினும் உணவுப்பதனிடல் பகுதி தொடர்பில் கூட்டுறவு மகளிர் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டது தொடர்பாக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

உண்மையில் யாழ்ப்பாணத்தில், திருகோணமலையில் மாவட்டக் கூட்டுறவுச்சபைகளுக்கூடாக மகளிர் குழுக்களின் பணிகள் குறிப்பிடும்படியாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றது. அதனைப்பற்றிய உணர்வு இப்பகுதி மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும என்பதே எனது விருப்பமுமாகும்.

இன்று உலகின் பல்வேறு இடங்களிலும் பல்வேறு மட்டங்களிலும் அபிவிருத்தியில் மகளிர்களுக்கான பங்களிப்பே அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. 1997-02-15 இல் வாசிங்டனில் நடத்தப்பட்ட நுண்கருக்கடன் உலக உச்சி மகாநாட்டில் அபிவிருத்திக்கான கடன் உதவிகள் பெண்களுக்கு அவர்களுக்கான அமைப்புக்களுக்கூடாக வழங்குதல் மிகப்பயன் அளிக்கும் என்னும் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது எனவே இடப்பெயர்வுப் பாதிப்பு இராணுவ நடவடிக்கைகளால் உழைப்பாளரை இழந்த பாதிப்பு, தொழில்வாய்ப்பு இழப்புப் பாதிப்பு என்பவற்றால் நலிவடைந்த எமது மாவட்டப் பெண்களுக்கு உதவுவதற்கு கூட்டுறவும் தனக்குரிய பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமாகும். கூட்டுறவு அமைப்புக்களில் மகளிருக்குரிய சட்டபூர்வமான உரிமைகள் கூட இன்று அலட்சியப்படுத்தப்படுவது வேதனைக்குரியது. கிராமிய மட்டத்தின் கூட்டுறவு நிறுவனமான சி. க. கூ. சங்கங்கள் பல மகளிர் சி. க. கூ. சங்கங்களாக செயற்படுகின்றன. இவற்றினை மேம்படுத்துவதின் ஊடாக மகளிருக்குரிய வாய்ப்புக்கள் வழங்கப்பட முடியும்.

எனவே கூட்டுறவுச்சங்கங்கள் தோறும் குறிப்பாக மாவட்டக் கூட்டுறவுச் சபை மட்டத்தில் மகளிர் குழுக்கள் அமைத்து போசாக்குக் குறைபாடு வருமானமின்மை என்பவற்றை நிவர்த்தியாக்கக் கூடிய போசாக்குக்கல்வி, வீட்டுத்தோட்டம், சுயதொழில், உபதொழில் வாய்ப்புக்கள் பயிற்சிகள், கடன் வசதிகள் ஏற்படுத்தக்கூடிய ஒழுங்குகளை ''சங்கமம்'' ஊடாக செய்து தரும்படி வேண்டுகிறேன்.

சு. சுதாயினி

## எமது சங்கமம்

காலை இளஞ்சூரியன்
கருவானில் உருவாகி
காலந்தழ கொழிப்பதும்
சங்கமம் ...

மாலைநிலா மலர்ந்திங்கு
மனத்தையே கவர்ந்திட்டு
மண்ணுடன் கலப்பதும்
சங்கமம ...

கருவண்டு கவர்ச்சியான
மலர்களை மணப்பதும்
சங்கமம் ...

காளையரும் கன்னியரும்
காதலிலே கலப்பதும்
சங்கமம் ...

ஏழையுடன் பணக்காரனும்
ஏதுவித்தியாசமின்றி
இணைந்து இருப்பதும்
சங்கமம் ...

நதியது வழியோடி
நயமாக கடலுடனே
இணைவதும்
சங்கமம் ...

இது இயற்கையின் சங்கமம்
எம்மவர்க்கு தெரிந்திட்ட
சங்கமம் ...

உண்மைக் கூட்டுறவை
உலகிற்கு உணர்த்திடவும்
நல்ல கூட்டுறவை
நாமெல்லாம வளர்த்திடவும்
இன்று கூட்டுறவில்
இணைந்த எம் மக்களெல்லாம்
தொன்மைக் கூட்டுறவை
தொடர்ந்து பேணிடவே
தொடங்கி உருவாக்கி
தொடுத்திடும் கலைப்பாசம்
எமது சங்கமம்

க. செல்வகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
கல்லூர் சேர நூலகம்.



# எம் மண்ணின் இலக்கியங்கள்...

இப்போதைய வன்னிப்பிரதேச இலக்கிய முயற்சிகள் பற்றி—

♥ அந்த நாட்களில் வன்னிப் பிரதேசத்தில் எழுத்தாளர்கள் மிகவும் குறைவாக இருந்தனர். அந்த நேரங்களில் சமூகப் பிரச்சினைகள் கதைகளுக்கு கருவாய் அமைந்தன. பின்னர் இனப்பிரச்சினை தீவிரமான பின்னர் போரின் தாக்கத்தால் மக்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போருக்கு முகம்கொடுத்து வாழும் மக்களின் அவலநிலைகள் கதைகளாய் மாறின. சமூக அவலமும். துன்பமும் எழுத்தாளனுக்கு ஒரு ஆதங்கத்தையும், ஆவேசத்தையும் இயல்பாய் வெளிப்படுத்தும். இப்போது நிறையப்பேர் எழுதத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களில் போராளிக்கலைஞர்களும் அடங்குவர். இவர்களது திறமையும், ஆற்றலும் சமூகத்தின் பிரச்சினைகளைப் பார்க்கும் பார்வையிலுள்ள கூர்மையும் எம்மை வியக்கவைக்கிறது. சரியானபடி இவர்களை வழிநடத்தினால் சிறந்த எழுத்தாளர்களாக இவர்களால் உருவாக முடியும். ஆக்கிரமிப்பு இராணுவத்தினால் ஏற்படும் அவலத்தின் கொடுமையை அனுபவித்து அதை இலக்கியமாக்கும் தன்மை இங்கே இருக்கிறது

சமீப காலமாக இந்த வன்னி மக்கள் இடம்பெயர்வினால் அனுபவிக்கும் துயரங்கள் இந்த போர்ப் பிரதேசத்துக்கு வெளியே இருப்பவர்களால் கற்பனை செய்து பார்த்திராத அளவுக்குப் பரிதாபம் மிக்கவை. உயிர் வாழ்தலுக்காக மட்டும் அல்லாமல் பசி, பட்டினியோடும், நோயோடும் போராடவேண்டிய நிலை இந்த அளப்பரிய துயரத்தின் ஒரு துளியே ஞாயிறு தினக்குரலில் வெளி

தொகுப்பு

## சஞ்சிகா

வந்த ''அழுவதற்கு நேரமில்லை'' சிறுகதை. இந்த மக்களின் அவலத்தை இந்தக் கதையில்கூட என்னால் முழுமையாகச் சொல்லமுடியவில்லை— என்பதே உண்மை.

வன்னியிலிருந்து வெளிச்சம் சஞ்சிகை, ஈழநாடு வாரமலர், ஈழநாடு மாதமலர் என்பன வெளிவருகின்றன. இவை மிகவும் தரமான படைப்புக்களைத் தாங்கிவருகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். இதனால் நிறைய எழுத்தாளர்களுக்கு எழுதுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது- போர் தீவிரமாக நடந்துகொண்டிருக்கும் ஒருபிரதேசத்தில் இத்தகைய இலக்கிய முயற்சிகள் மேற்கொள்வது மிகவும் கடினமான பணியாகும், இந் நிறுவனங்களின் இலக்கிய முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை,

– தாமரைச்செல்வி '
(நன்றி தினக்குரல்)

இன்றைய வாழ்வின் அவலங்கள் பற்றி இலக்கியம் படைக்கும் எம் மண்ணின் சமகாலப் படைப்பாளிகளின் பொறுப்புக் கடப்பாடும் எவ்வாறிருக்கவேண்டும் என கருதுகிறீர்கள்?

♠ பதிவு செய்யப்படுவது அவசியமானது. ஆனால் பதிவுசெய்யப்படும் முறைமையில் படைப்பாளி தெளிவுடனும் விழிப்புணர்வுடனும் செயற்படவேண்டும். இன்றைய நாட்களின் அவலங்களை படுபயங்கரமாக சித்தரிப்பது சிலவேளை ஒரு சமூகத்தின் நம்பிக்கையைச் சிதறடித்து அதனை சரணாகதிக்கு இட்டுச்சென்றுவிடும் படைப்பாளிக்கு இருக்கவேண்டிய சமூகப் பொறுப்பும், காலப் பிரக்ஞையும் மனித அவலங்களைச் சித்தரிக்கும்போது இன்னும்கூடிய அவதானத்துடன் இருக்கவேண்டும்

இன்றைய வாழ்வியல் அவலங்கள் எமது சமகாலப் பதிவாகின்ற அதேவேளை அது வரலாற்றுப் பதிவாகவும் மாறிவிடுகிறது. அவலங்களைச் சித்தரிப்பதில் பல விடயங்கள் உண்டு. எங்களின் அவலங்களை வெளிப்படுத்தி பிறரிடமிருந்து-வெளியிலிருந்து அனுதாபத்தை, ஆதரவைத் தேடுவது அதேவேளை இந்த அவலங்களைத் தொடரவிடுவதா? இவற்றை எப்படி நிறுத்துவது? இது எதனால் விளைகிறது? இதனை நிறுத்துவதற்கு எனது பங்களிப்பு என்ன? என்ற கேள்விகளை சமூகத்தில் தனது படைப்புக்கள் ஊடாக உணரவைப்பதும் அதனூடாக விழிப்புணர்வையும் புத்தெழுச்சியையும் ஏற்படுத்துவதையும் படைப்பாளி தனது சமூகப் பொறுப்பாகக் கொண்டிருக்கவேண்டும்,

- கருணாகரன் -

## கொலரா (CHOLERA)

- இது உலகின் நூற்றுக்கு மேற்பட்ட நாடுகளை உலுக்கிய ஒரு தொற்று நோயாகும். அமெரிக்கா, யப்பான் போன்ற நாடுகளால்க் கூட இதிலிருந்து தப்ப முடியவில்லை.
- இது ஒரு வருடத்தில் ஒரு இலட்சத்து இருபதினாயிரம்பேரைக்காவுகொண்ட கொடிய நோயாகும.
- விரைவில் பரவும் BACTERIUM VIBRIO CHOLERA எனும் பக்ரீரியாவினாலேயே இவ் வயிற்றோட்ட நோய் ஏற்படுகிறது. ஆரம்ப நிலையில் இதனை இலகுவாகக் குணப்படுத்த முடியும். கடுமையாயின் மரணம் தவிர்க்கமுடியாது
- இவ் வருடம் 604 பேர் இந் நோயால் பீடிக்கப்பட்டதாகவும் இதில் 17 பேர் இறந்துள்ளனர் எனவும் இலங்கை சுகாதார அறிக்கைகள் தெரிவிக்கின்றன.
- ரெற்றாசைக்கிளின் (TETRACYCLINE) குளிசையை இதற்கெதிரான தடை மருந்தாக உபயோகிக்க முடியும்.
- இந் நோயைக் கட்டுப்படுத்துதலில் பொது மக்களின் பங்களிப்பே பிரதானமாகும். உரிய சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதன் ஊடாக இதனைக் கட்டுப்படுத்துவதுடன் வராமலும் தடுக்கலாம்.
- நோயாளியின் மலம், வாந்தி என்பவற்றினூடாகவே இந் நோய்க்கிருமி பரவுகிறது. நீர் மூலமும், இலையான் மூலமுமே இந் நோய் காவப்படுகிறது. நீரின் கொதிநிலை வெப்பநிலையான 100 °C இல் ஒரு நிமிடம் கொதிக்கவிடப்படும்போது இந் நோய்க்கிருமி முற்றாக அழிந்துவிடும்.
- உணவு, நீர் என்பனவற்றை சுகாதார முறைப்படி வீட்டிலேயே தயாரித்து உண்ண வேண்டும். வெளியிடங்களில் உணவு, நீர் உட்கொள்ளுவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.
- பொது நீர் நிலைகளான குளம், வாய்க்கால் என்பவற்றினூடும் இந்நோய்பரவ வாய்ப்பு உள்ளதால் இவற்றை உபயோகிப்பதைத் தவிர்க்கவும்.
- உணவு தயாரிப்பதற்கு, உண்பதற்கு, குழந்தைகளுக்கு உணவூட்டுவதற்கு முன் சவர்க்காரமிட்டு கைகளைநன்குகழுவுதல் அவசியம்.
- மலகூடங்களை உபயோகிப்பதும், குழந்தைகளின் மலங்களைப் புதைப்பதும் அவசியமானது.

<> <> <>

கொலரா — கொலரா —
போர் அனர்த்தம்
விளைவித்த
சொல்லொண்ணாத்
துயர் சுமந்த
எம் வாழ்வியலை
நோக்கமுடியாது
தடுமாறும்
நம் மக்கள்
மருந்துத்தடை,
போசாக்கின்மை,
நோய்த் தொற்றுக்கொடுமை
மரணத்தை மட்டுமே
மலிவாகத் தருகிறது
எல்லோரும் வாழ,
வேண்டும் விழிப்புணர்வு
ஒன்றுபட்டு விரட்டுவீர்,
கொலரா எதிரியை

கூ. செல்வம்
ஊர்: ப. நோ. கூ. சங்கம்

## புதிய தலைமுறைக்கு எடுத்துக் காட்டாவோம்!

கூட்டுறவு என்பது ஒரு வலுவான ஜனநாயக அமைப்பு இதை நாம் எல்லோரும் ஒன்றிணைந்து காக்கவேண்டும் கூட்டுறவுன் உடைய கடந்தகால வரலாறு ஒரு முரண்பட்டதொன்றாக அமைந்துள்ளதைக் காணலாம். 21ஆம் நூற்றாண்டில் காலடி எடுத்துவைக்கும் நாம் சர்வதேச கூட்டுறவின் உடைய விழிப்புணர்வுகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு முரண்பாடுகள் அற்ற ஒரு வலுவான கூட்டுறவு இயக்கத்தைக் கட்டி எழுப்பி எமது தேசமக்களுக்கும் புதிய தலைமுறைக்கும் எடுத்துக்காட்டாக நாம் வாழ்ந்து காட்டுவோமாக.

இங்ஙனம்
கூட்டுறவு சேவையில்

ப.கனகலிங்கம்,

தலைவர்- கிளி/புங்-நயி-பல-நோ-கூ சங்கம்

## மனங்கள் எங்கும் வேண்டும் கூட்டுறவு

ஒருவர் பலரின் நன்மைக்காகவும், பலர் சேர்ந்து ஒருவரின் உயர்ச்சிக்காககவும் உழைப்பதே கூட்டுறவு. மக்களின் பொதுவான தேவைகளை, மலிவாக நிறைவேற்றுவதினூடாக அவர்களுக்குப் பொருளாதார நலன் சேர்க்கும் நிறுவனம் கூட்டுறவு நிறுனவனமாகும்.

கூட்டுறவு நிறுவனங்களின் வளர்ச்சி அங்கத்துவர்களின் பங்களிப்பிலும், தலைமைத்துவத்தின் உயரிய செயற்பாட்டிலும், பணியாளர்களின் சேவையிலுமே தங்கியுள்ளது.

அநேக கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தவர்களின் நேரடியான பங்களிப்பு குறைவாகவே உள்ளது. பங்களிப்பை உயர்த்துவதற்கு, கருத்தரங்குகள், பயிலரங்குகள், என்பன அவசியமாகிறது. இதன் மூலமே கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தமுடியும். கூட்டுறவு இன்று பரந்துபட்ட தொடர்புகளையுடைய ஓர் நிறுவனமாகிவருகின்றது. எனவே கூட்டுறவு பற்றிய கருத்து விழிப்புணர்வு அங்கத்தவர்களிடம் மட்டுமல்ல, பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், மற்றும் எதிர்காலச் சந்ததியான மாணவர்கள் ஆகியோரிடையேயும் ஏற்படுத்தவேண்டியது அவசியமாகிறது.

பணியாளரிடையேயும் கூட்டுறவு அறிவை மேம்படுத்துவதினூடாக அவர்களிடம் கூட்டுறவுச் சேவைக்கான மனப்பாங்கை ஏற்படுத்த முடியும். இது அவசியமானதும் கூட. இன்று வளர்ந்துவரும் ஒரு சேவை நிறுவனமாகவும், சிறந்த வர்த்தக நிறுவனமாகவும் செயற்படும் கூட்டுறவு நிறுவனங்களின் வினைத்திறன் அதிகரிப்புக்கு கூட்டுறவு, மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்ப அறிவு விருத்தி அவசியமாகிறது.

இவற்றை அடைந்துகொள்ள கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளே ஆதாரமாகும். எனவே கூட்டுறவை வளர்க்க, கூட்டுறவுக் கல்வியை வளர்க்க அனைவரும் கூட்டுறவாகுவோம்.

க: சிவகுமார்
செயலாளர்,
மாவட்ட கூட்டுறவுச் சபை,
கிளிநொச்சி.

## ஆற்றல் உடையோரை அணிவகுக்கும் சங்கமமே!

''ஆலமரத்தின் சிறப்பை விழுது சொல்வதா சூரியனின் விலாசத்திற்கு பனித்துளி வெளிச்சம் காட்டுவதா''

சங்கமத்தைப் பிரித்துக் கழித்துக் கூட்டிப் பொருள் சொன்னால் கூட்டுறவாளர்களின் உழைப்பும் அதன் வழி வந்த உயர்ச்சியும் இணைந்தஆற்றல் பெருக்கே சங்கமம் எனலாம்.

அச்சடிக்க தாள் இல்லை
அதில் பூச மை இல்லை
இந்தநிலையிலும்

ஆற்றல் உடையோரை அணிவகுத்து திங்கள் தோறும் சங்கமமாகும் சங்கமமே நீ வாழியவே திக்கெட்டும் திசையெல்லாம் கூட்டுறவின் மணம் பரப்பி இன்று ஆண்டு ஒன்றாகப்போகும் சங்கமமே நீ வாழ்க, வாழிய,வாழியவே

நன்றி
தி. சுந்தரலிங்கம்
கிளி/ ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
ஸ்கந்தபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்த நிறுத்தம் கோரி கத்தோலிக்க மதகுருமார் ஜனாதிபதிக்கு மகஜர்!

துன்பத்தை சுமக்கும் அப்பாவி மக்கள் மீது அர்த்த மற்ற யுத்தத்தை நிறுத்தி, சமாதானம் தேடிய வழியாக, விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் படி முப்படைகளின் தளபதியும், நாட்டின் ஜனாதிபதியுமான தங்களை வேண்டுகின்றோம் என கிளிநொச்சி, முல்லைத்தீவு கத்தோலிக்க மதகுருமார் இணைந்து ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

சுதந்திரபுரம் பகுதியில் நடைபெற்ற சிறிலங்கா வான் படைத் தாக்குதலையும் அதனைத்தொடர்ந்து நடத்தப் பட்ட எறிகணை வீச்சினையும் கண்டித்து அனுப்பப் பட்ட கடிதத்திலேயே மேற் கண்ட வேண்டுகோளையும் விடுத்திருந்தனர்.

இச் சம்பவத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 26 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதுடன் 31 பேர் படுகாயம டைந்தனர். பெரும் பொருளாதார அழிவுகள் ஏற்படுத்தப் பட்டமையும் இவ் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கிளி. முல்லை மேய்ப்புப் பணிமனையைச் சேர்ந்த பதினாறு மதகுருக்கள் இம் மகஜரில் கையொப்பமிட்டிருந்தனர்.

# "நிவாரணம் விரைவாய் வழங்கு" மக்கள் மறியல் போராட்டம்!

நிவாரணம் பெறுவது இடம்பெயர்ந்தோர் உரிமை அதனைத் தடுப்பது அரசின் மடமை என கோசமிட்டபடி நிவாரண வெட்டினை எதிர்த்து மக்கள் கிளி - முல்லை அரச அதிபர் செயலகத்தை மறியல் செய்தனர். தமக்குரிய நிவாரணம் கிடைக்கும் வரை இம்மறியல் போராட்டம் எனத் தெரிவித்த அவர்கள் இப்போராட்டமானது படிப்படியாக பிரதேசச் செயலர் அலுவலகங்களுக்கும் விஸ்தரிக்கப் படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

நிவாரணம் வெட்டினால் இப்பகுதி இடம் பெயர்ந்த மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர் என்பதும் தெரியவருகிறது.

# அரசின் நிவாரண வெட்டு மக்கள் வாழ்க்கையைப் பாதித்துள்ளது!

## வெகுஜன ஒன்றியங்கள் மகஜர்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் கடந்த யூலை முதல் அரசினால் கொண்டுவரப் பட்ட நிவாரண வெட்டானது மக்களின் வாழ்க்கையை பெருமளவில் பாதித்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 34,381 குடும்பங்கள் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறத் தகுதியுடையவர்களாயிருந்தும் 8889 குடும்பங்களுக்கு மட்டுமே நிவாரணம் அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அரசின் இந் நடவடிக்கையை கண்டித்து கிளிநொச்சி வெகுஜன ஒன்றியத்தினால் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு மகஜர் கையளிக்கப் பட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியாகத் திரண்டு சென்று இம் மகஜர்களைக் கையளித்தனர். இதேபோன்று முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளிலும் நிவாரண வெட்டுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டு மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளது.

# கண்மூடித்தனமான தாக்குதலால் மக்கள் உளவியல் பாதிப்பு!

அப்பாவி மக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் சிறிலங்கா இராணுவத்தின் மனிதாபிமானமற்ற தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்கிறது. வட்டக்கச்சி பழைய கமம் உடையார்கட்டு சுதந்திரபுரம், கோணாவில் சோலைநகர் எனத் தொடரும் சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளில் அப்பாவி மக்கள் உயிரிழப்புடன், பெரும் உளவியல் தாக்கங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

கடந்த மாதம் கோணாவில் சோலைநகர் குடியிருப்பு மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குழந்தை ஒன்று உட்பட நால்வர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். சுதந்திரபுரத்தில் நிகழ்த்தப்பட்டது போன்று 'கபீர்' விமானக் குண்டுவீச்சைத் தொடர்ந்து கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாலேயே அப்பாவி மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டனர்.

## சட்டக்கற்கைக்கு தெரிவு!

உருத்திரபுரம் ம. வி. மாணவனான திரு. அருட்பிரகாசம் சிம்சன் போல் கொழும்பு பல்கலைக்கழக சட்டப் பீடத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வருடம் சட்டக்கற்கை நெறிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து இவர் மட்டுமே தெரிவாகியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உயர்தர மாணவர் தொழிற்பயிற்சி மூலம் தமது வாழ்வையும் தரத்தையும் உயர்த்த வேண்டும்!

## - கிளி. திட்டப்பணிப்பாளர்

''உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் அனைவருமே பல்கலைக்கழக அனுமதிபெறுவதில்லை. ஒரு வீதத்துக்கும் குறைவான தொகையினரே இவ்வாய்ப்பைப் பெறுகின்றனர். ஏனையவர்கள் தமது கல்வியை பூரணப்படுத்தி தமக்கும் சமூகத்துக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் தொழிற்கல்விகளை பெற்றுக் கொள்ள வேண்டும். எமது அரச அதிபரின் முயற்சியினால் கிளிநொச்சியில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்று உருவாகிறது. செஞ்சிலுவைச்சங்கம் கணனிப் பயிற்சி உட்பட பல்வேறு பயிற்சிகளை வழங்குகிறது. முறைசாரா கல்விப்பிரிவு மூலம் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன, இவற்றைப் பயன்படுத்தி தமது கல்வியைப் பூரணப்படுத்த வேண்டும்''

இவ்வாறு கிளிநொச்சி திட்டப் பணிப்பாளர் திரு. நித்தியானந்தன் கேட்டுக்கொண்டார்.

கிளி. உருத்திரபுரம் ம. வி. உயர்தர மாணவர் மன்ற மதிய போசன விருந்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந் நிகழ்வில் சிறப்புவிருந்தினராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் கலந்து கொண்டார்.

# கிளி. கூட்டுறவுக் கல்லூரி உயர்தர பரீட்சை முடிவுகள்

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபையின் கூட்டுறவுக் கல்லூரியில் 1997 இல் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பயிற்சி நெறியில் தோற்றிய 27 மாணவர்களில் 25 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் மூன்றுபேர் இரண்டாம் வகுப்பில் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இப்பயிற்சி நெறி கடந்த வருடமே முதல்முதல் ஆரம்பிக்கப்பட்டது.

சித்தியடைந்தோர் விபரம்;-

இரண்டாம் வகுப்பு சித்தி

1) க. சிவகுமார்
2) செ. யோகரத்தினம்
3) செல்வி ம. உமாதேவி

தரம் மூன்று சித்தி

1) சா. விமலகுமார்
2) க. அசோக்குமார்
3) ப. சுரேந்திரன்
4) ஆ. சதானந்தன்
5) சி. சுதர்சன்
6) பீ. ரமணதாசன்
7) ச. தவபாலன்
8) ச. இராஜேஸ்வரன்
9) செல்வி. வி. கிருஷ்ணகலா
10) திருமதி. பு. விஜயராணி
11) க. சதீஸ்குமார்
12) மு. யோகலிங்கம்

நூன சித்தியடைந்தோர்

1) செல்வி. இ. ரூபராட்னேஸ்வரி
2) செல்வி ச. சுதர்சினி
3) தோ. டொன்பொஸ்கோ
4) கி. தர்மலிங்கம்
5) வே. பத்மநாதன்
6) இ. அன்ரன்ரூபராஜ்
7) செ. பாலேந்திரன்
8) செல்வி. வே. புஸ்பலதா
9) சோ. பிரகலாதன்
10) ம. நவரத்தினராசா

# கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட பிரிவு பயிற்சி

கிளி மாவட்டக் கூட்டுறவுச் சபை கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப்பத்திர பரீட்சைக்கான வகுப்புக்கள் இம்மாதம் தொடக்கம நடைபெறுகின்றன. நாலு மாத காலப் பயிற்சிநெறியான இப் பயிற்சியின் இறுதிப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாத இறுதியில் நடைபெறும் என கிளி- மாவட்ட கூட்டுறவுச் சபைச்செயலாளர் திரு. க. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

ஊற்றுப்புலம் அ. த. க.

# பாடசாலை மாணவர் கூட்டுறவுச் சங்கம்!

கூட்டுறவு என்பது ஒரு வாழ்க்கைத் தத்துவம். கூட்டுறவு பற்றி இன்று மக்கள் தவறான கருத்துக்களையே கொண்டிருக்கிறார்கள், இதற்கு காரணம் கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் கூட்டுறவுக்கல்வி விரிவாக்கத்தில் உள்ள அக்கறையின்மையே. இந் நிலையில் பாடசாலைக்கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்படுவதன் ஊடாக நாளைய மனிதர்களான இன்றைய மாணவர்களுக்கு கூட்டுறவு பற்றிய விழிப்புணர்வும், பயிற்சியும் கிடைக்கிறது இது நாளைய கூட்டுறவு வளர்ச்சிக்கான படிக்கல்லாய் அமையும் என கிளி/ஊற்றுப்புலம் அ. த. க. பாடசாலையில் அதிபர் திரு. இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற பாடசாலைக் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்ட 'சங்கமம்' பத்திரிகை ஆசிரியர் தெரிவித்தார்.

பாடசாலைக் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல் தொடர்பான அறிவூட்டல், துணைவிதி விளக்கம் மற்றும் கணக்கு வைப்பு முறைகள் பற்றிய விளக்கங்களை கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. பத்மானந்தன் வழங்கினார். திருமதி. முருகானந்தத்தைதலைவராக கொண்ட இச் சங்கம் மாணவர்க்கான கல்வி உபகரண விற்பனை மாணவர் சேமிப்புத் திட்டம் என்பவற்றுடன் ஆதரவுக்கேற்ற தன்னுபடி எனும் கூட்டுறவுக் கொள்கையையும் நடைமுறைப்படுத்துகிறது.

## பாடசாலை மூலிகைத் தோட்டம்

இலைக்கஞ்சித் திட்டத்துக்கு உதவும் வகையிலும், அரிய மருத்துவ மூலிகைகளைப் பாதுகாக்கும் நோக்கிலும் கண்டாவளை பெரியகுளம் ஐயனார் அ. த. க. பாடசாலையில் மூலிகைத் தோட்டம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. கருணாநிதி அவர்களின் முயற்சியினால் அமைக்கப் பட்ட இம்மூலிகைத் தோட்டம் நல்லதொரு முன்மாதிரியான முயற்சி என பலரும் பாராட்டியுள்ளனர்.

## மாணவர் விடுதி வசதி

தற்போது ஆனைவிழுந்தானில் இயங்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்களுக்கு உதவு முகமாக ஆண்களுக்கான மாணவர் விடுதியும் பெண்களுக்கான மாணவர் விடுதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றை பயன் படுத்தி நன்மை பெறும்படி பாடசாலை நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதை பந்தாட்ட

# உலகக் கிண்ணம் முதல் கூட்டுறவுக் கிண்ணம் வரை...

உதைபந்தாட்ட ரசிகர்கள் அடிதடியில் இறங்கியது, நடுவர்கள் தூசிக்கப்பட்டது, சக வீரர்களைப் பாதிக்கக்கூடியதான ஆட்ட முறைமையை (FOUL PLAY) கொண்டிருந்ததுஎனபல்வேறு விடயங்கள் கடந்த மாதம் பிரான்சில் நடந்து முடிந்த உலகக் கிண்ணப்போட்டியில்இருந்து கடந்தவாரம் முடிவடைந்த கூட்டுறவுக் கிண்ணப் போட்டி வரை காணப்பட்ட கவலை தருகின்ற உதைபந்தாட்ட நிலைமைகளாகும். எனினும் சீரிய விளையாட்டை ஆடிய பிறேசில் அணி போன்று நம்பிக்கையும் நல்லெண்ணமும் தருகின்ற அணிகளும் உண்டென்பதும் சற்று ஆறுதல் தருகின்ற விடயங்களாகும்.

உதைபந்தாட்ட வரலாற்றின் ஆரம்ப நாட்களில் மிகவும் முரட்டுத்தனமாகவும், சகவீரனுக்கு ஆபத்துவிளைவிக்கின்ற நடைமுறையையும்கொண்டிருந்தது. ஆனால் 1863 ஒக்டோபர் 26 இல் இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட (FOOT BALL) (ASSOCIATION) ஆபத்தற்ற நெறிமுறை ஆட்டத்தை வகுத்தது. இதனை ஏற்றுக்கொள்ளாத முரட்டுத்தனமான ஆட்டத்தை விரும்பியவர்கள் தொடர்ந்தும் ஆடிய ஆட்டம் (RUGBY FOOT BALL) எனப்பட்டது இம் முரட்டுத்தனமான ஆட்டம் இன்று இலங்கையில் மிகவும் பிரபல்ய (RUGBY) மாக உள்ளபோதும் இன்னும் எம் மண்ணில் இது நுழையவில்லை.

உதைபந்தாட்ட வீரர்கள், மத்தியஸ்தர்கள், இரசிகர்கள் ஆகியோரிலேயே உதைப்பந்தாட்டம் தங்கியுள்ளது. ஏனைய ஆட்டங்களைப் போலல்லாது உதைப்பந்தாட்டத்தின் விறுவிறுப்பு மிக விரைவிலேயேஇரசிகர்களைப் பற்றிக் கொண்டு அவர்களைத் தன்னிலை இழக்க வைத்துவிடும் இதனாலேயே உதைபந்தாட்ட நிகழ்வில் சச்சரவும், கைகலப்புக்களும் ஏற்படுகின்றன. இரசிகர்கள் எப்போதும் தன் அணியை உற்சாக மூட்டுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கிறாரே அன்றி, எதிரணியை கேலி செய்யவோ அல்லது இடையூறு விளைவிக்கவோ உரிமை உடையவர் அல்ல என்பதை தம் மனதில் கொண்டிருக்க வேண்டும்.

விளையாட்டில் பங்கு பற்றுவோர், நன்னெறியில் ஆடி வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காகவே நடுவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் நடுவுநிலை அதிகாரங்கள் விளையாட்டை பாரபட்சமின்றி சிறப்பாக நடத்துவதற்கே வழங்கப்படுகின்றன.

உதைப்பந்தாட்டத்துக்கு எப்போதும் தகவுடைய மூன்று நடுவர்கள் நியமிக்கப்பட வேண்டும். இவர்கள் இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தாலோ, அன்றி மாவட்ட உதைப்பந்தாட்டச் சங்கத்தினாலோ விதிமுறைகளையும், நடைமுறைகளையும் பயிற்றுவித்து பரீட்சை ஒன்றின் ஊடாக தகவுபெற்றவர்களாக இருத்தல் வேண்டும். (LINESMAN) நியமனத்தில் காணப்படும் அசண்டையீனமேபல்வேறுபிரச்சினைகளுக்கு காலாக அமைகிறது. இதனை எமது மாவட்ட உதைப்பந்தாட்டச் சங்கம் கவனத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பல நடுவர்கள், பார்வையாளரைத் திருப்திப்படுத்தும் நோக்கில் விடயங்களைக் கையாள முனைகின்றனர். முதலாவது (HANDBALL) கையில் பந்து படும்போது எல்லாம் HAND BALL கோரேக்கப்படுகிறது. உண்மையில் வேண்டுமென்றே கையால் அடித்து பந்தை கையாண்டுள்ளார். (DELIBERATELY HIT THE BALL) என நடுவர் கருதும் போதே அது HAND BALL) ஆகும் அடுத்தது(OFF SIDE) ஒருவர் ஒவ்சைட் நிலையில் இருந்து பந்து எடுக்கும் போது மட்டுமே ஒவ்சைட், கொடுக்கப்பட வேண்டும். ஆனால் ஆட்டத்தில் ஒருவர் 'ஒவ்சைட்' நிலைக்கு போனவுடனேயே கொடி உயர்த்தி விசில் அடிக்கும் நிலையே இங்குகாணப்படுகிறது. (OFF SIDE)பற்றிய குழப்ப நிலைமை உலகக்கிண்ண போட்டியிலேயே காணப்பட்டது. நடுவர் என்பவர் நீதி நிலை நின்று ''ஊதும் விசிலே உண்மை பேசு'' என தன் கடமை செய்தல் வேண்டும். பக்க சார்புடன் நடத்தலோ அன்றி பார்வையாளரைத் திருப்திப்படுத்தலோ அவர் நோக்கன்று.

### இரசிகன்

மூன்றாவது ஆட்ட வீரர்கள்- இவர்களே உதைபந்தாட்டத்தின் உயிர்நாடியாகும் ஆனால் இன்று இவர்கள் விளையாட்டு வீரனுக்குரிய பண்புகளை ஒதுக்கி, எவ்வாறான முறைகேடுகளைச் செய்தாயினும், வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்பிலேயே செயற்படுகின்றனர். இது விளையாட்டு வீரனுக்குரிய சகிப்புத்தன்மை, வெற்றியையும், தோல்வியையும் சமமாக மதிக்கும் பண்பு என்பவற்றை உருவாக்காது சுயநலத்தை வளர்க்கும் பண்பையே ஊட்டி விடுகிறது.

உண்மையில் விளையாட்டு மனிதனுக்கு அளிக்கக்கூடிய உயர்ந்த பண்புகளான ஒற்றுமை சகிப்புத்தன்மை வெற்றி தோல்வியை சமமாக மதிக்கும் பண்பு என்பவற்றை பெற்றுக்கொள்ளும் விளையாட்டு முறைமைகளை வளர்த்துக் கொள்ளவேண்டும்.

விளையாட்டின்போது விளையாட்டு வீரனின் திறமையை மட்டுமல்ல, நேர்மை, ஒழுக்கம், மனப்பக்குவம் என்பவற்றையும் எடுத்துக்காட்டக் கூடிய வகையில் விளையாட்டு வீரனது ஆட்டம் இருக்க வேண்டும்.

- நன்றி -

## கரும்புலிகள் தினத்தில் சிரமதானம்!

யூலை 5 கரும்புலிகள் நாளை நினைவு கூருமுகமாக கிளிமாவட்டத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கங்களின் பணிப்பாளர்கள், பணியாளர்கள் அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் 3.5.98ஆம் திகதி சிரமதானப்பணியை மேற்கொண்டனர்.

இந்நாளில் கிளி/ ப.தெ.வ.அ.கூ. சங்கத்தின் பணிப்பாளர்கள். பணியாளர்கள் வன்னேரியில் உள்ள முதியோர் இல்லத்தை சுத்தம் செய்து வயோதிபர்களுக்கு உணவு வழங்கி அவர்களுடன் கலந்துரையாடி கௌரவித்தனர்.

## சொந்த நிலம் இல்லாதவரை உண்மைச்சமாதானம் இல்லை

-மேதகு மன்னார் ஆயர்-

''மக்கள் தங்களுடையது என்று உணரும் சொந்த இடம், சொந்த தாயகம் என்ற நிலைப்பாடு ஏற்படும் போது தான் உண்மையான சமாதானம் ஏற்படும். மக்கள் சுதந்திரமாகவும் அமைதியாகவும் தங்கள் பிரதேசங்களில் வாழும் நிலையில்லா வரை சமாதானம் சத்திய மற்றதே''

இவ்வாறு மன்னார் ஆயர் கடந்த மாதம் மருதமடுத்திருப்பதியில் தன்னைச் சந்தித்த வன்னிப் பகுதி யாத்திரிகர்களிடையே பேசும் போது தெரிவித்தார். வன்னியில் இருந்து வெளியாகும் சுதேசிக்க மாத வெளியீடான 'விருட்சம்' மேற்படி தகவலை வெளியிட்டுள்ளது.

## சங்கமம் வாசகரை தேடிச்செல்ல வேண்டும்!

ச. வே

''சாய்த்த மரமே கல்லெறிக்கு உட்படும்'' சங்கமம் பத்திரிகை சமூக, பொருளாதார ஏடாக வெளிவருவது சிறப்பானது. இப்பத்திரிகையானது வாசகரைத் தேடிச்செல்ல வேண்டும்

இவ்வாறுதிரு சா.வே பஞ்சாட்சரம் யூன் மாத விமர்சன அரங்கு கிளி/அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கத்தின் ஆதரவில் ஸ்கந்தபுரத்தில் நிகழ்ந்தபோது தெரிவித்தார்.

இவ்வரங்கில் கிளிமாவட்ட கூ.அபி.உ. ஆணையாளர் திரு. நா. முருகேசு, கிளி/மா திட்டப் பணிப்பாளர், திரு. பொன் நித்தியானந்தம், கிளி/மா. கூ. ச. ஒன்றியத்தலைவர் திரு. சு. சிறில் ஆகியோரும் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பொதுமுகாமையாளர்களும் உரை நிகழ்த்தினர். இவ் அரங்குக்கு சங்கத்தலைவர் திரு ம. ஜெகநாதன் தலைமை தாங்க பொதுமுகாமையாளர் திரு வே. தர்மராஜா நன்றி உரை ஆற்றினார்.

## மேலும் ஆசிரிய நியமனங்கள்?

வட கிழக்கு மாகாணத்தில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்கள் பற்றிய புள்ளி விபரங்கள் திரட்டப்படுகிறது. இசனடிப்படையில் மேலதிகமாகத் தேவைப்படும் ஆசிரியர்களை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வடகிழக்கு மாகாண கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் மேலும் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுமா என கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளனர். ஏறக்குறைய 3000 ஆசிரிய வெற்றிடங்கள் வடகிழக்கு மாகாணத்தில் நிலவுவதாக உத்தியோகபூர்வமற்ற புள்ளி விபரங்கள் தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அறிவுலகம் - உலக ஒழுங்கு

## ஒன்றித்த தொடர்புகளை புரிந்துகொள்ள வேண்டும்

''இதழியல் தொடர்பான அடிப்படை கற்கை நெறி ஒன்றை நிறைவு செய்வதன் மூலமே பத்திரிகையாளன் என்ற நிலைக்கு எம்மை தயார்படுத்த முடியும். உலகம் இன்று தொடர்பு சாதன ஊடகத்தினால்தான் வழிப்படுத்தப்படுகிறது; என்பதனால் ஊடக அறிவுலகமும் உலக ஒழுங்கும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதால் ஏற்பட்ட விளைவுகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்''.

இவ்வாறு கூட்டுறவுச் சபையும், ''சங்கமம்'' பத்திரிகையும் இணைந்து நடாத்திய இதழியல் பயிலரங்கில் உரையாற்றிய வன்னி மாவட்ட பத்திரிகையாளரும் விசுவமடு மகாவித்தியாலய ஆசிரியருமான திரு. த. கணேசலிங்கம் குறிப்பிட்டார்

இதழியலின் வரலாறும், பயன்பாடும் பற்றிய இவரது உரையில் பெருமளவு பத்திரிகைகளின் உத்திகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து செய்தியாளரும், செய்தி சேகரிப்பும், செய்தி அமைப்பும் பற்றி சங்கம உதவி ஆசிரியர் திரு. அன்ரன் அன்பழகனின் விரிவுரையில் கலந்து கொண்டோருக்கான களப்பயிற்சியும் வழங்கப்பட்டது.

அண்மையில் மாவட்டக் கூட்டுறவுச் சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இப்பயிலரங்கில் கல்வி உத்தியோகஸ்தர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்டனர்.

# சிறிலங்கா அரசாங்கம் புரியும் அநீதியை அனைத்துலகம் அறிந்து கொள்ளட்டும்!

- யாழ். வெகுஜன ஒன்றியத் தலைவர்



நேர்மையற்ற சிறிலங்கா அரசு எம்மை பட்டினி மூலம் கொல்லும் முனைப்பில் நிவாரண விநியோகத்தை வெட்டியுள்ளது. அரசின் அநீதியை உலகம் அறிய வேண்டும். எமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே ஒன்றுஇரண்டு போராடினோம் என நிவாரண வெட்டுக்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்ட பேரணி தொடர்பான எமது கேள்விகளுக்கு யாழ் வெகுஜன ஒன்றியத்தின் தலைவர் திரு.சொலமன் சூ. சிறில் பதிலளித்தார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர். ஏற்கனவே பொருளாதாரத் தடை, உயிர்காக்கும் மருந்துத் தடை, இடப்பெயர்வு, தொழிலிழப்பு என்பவற்றின் பாதிப்பால் மக்கள் நுகர்வுச் சக்தியை இழந்துவிட்டனர். இந் நிவாரண வெட்டுக்கு தாம் எவ்விதத்திலும் காரணமில்லை என சர்வதேச நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. இந் நிவாரண வெட்டுக்கு சிறிலங்கா அரசே காரணமாகவுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணப் பணிகளுக்கு என உலகம் வழங்கும் உதவிப்பணத்தில் எம் குடியிருப்புக்கள் மீது நெருப்பு மழைதான் பொழிகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசிரியர் குழு -
அ. கேதீஸ்வரன்
அ. அன்ரன் அன்பழகன்
ம. ஜெகநாதன்

# சங்கமம்
# SANGAMAM

ஆறு 1 அருவி 11
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி. ஜூலை 1998

## சங்க அகம்

கூட்டுறவாளரின் உலகளாவிய ஒற்றுமை நாள். சர்வதேச கூட்டுறவாளர் தினம் என அனுஸ்டிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை மீள நினைவூட்டி புத்தாக்க செழுமையை வழங்கும் ஒரு குறிநிலை செயல்வடிவமாகவே சர்வதேச தினங்கள் பிரகடனப்படுத்தப்படுகிறது 1998ஆம் வருடத்திலும் இந் நிகழ்வுகள் வெகு உற்சாகத்துடன் இடம் பெறுகிறது.

இதன் பெருமித வெளியீடாக சங்கமமும் சிறப்பு மலராக வெளிவருகிறது. இந்த நாள் சங்கமத்தின் மறக்க முடியாத ஒரு நாளும் கூட ஏனென்றால் கடந்த ஆண்டின் சர்வதேச கூட்டுறவு தினத்தில் தான் சங்கமம் தனது முதலாவது வெளியீட்டை தொடங்கியது. இடப்பெயர்வால் இன்னலுற்று திரண்டு வந்த கூட்டுறவாளரும் இந்தப் பெருநிலப் பரப்பின் புகழ் பூத்த கூட்டுறவாளரும் ஒழுங்கு சேர கைகோர்த்துக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் என்ற பெயரில் ஏற்படுத்திய இரண்டாம் படி கூட்டுறவு அமைப்பினால் பெற்ற அறுவடையின் சிறப்பு மிக்க கல்விப்பெட்டகம் பெறுபேறாகி வெளிப்பட்டதே சங்கமம் என்ற மாத இதழாகும்.

கூட்டுறவின் உயரிய கொள்கைகளையும் அதனூடாக எழும் சேவைகளையும் ஒரு சில சுயநலநடத்தையின் குறியீடாக மறைப்பதும் மிகப்பெரிய தவறில் இருந்து கூட்டுறவு இயக்கத்தினை விடுவித்து அறிவு பூர்வமாக கூட்டுறவை இனம் காட்டும் நோக்கத்துடனும் அல்லல்படும் ஒரு பெரிய சமூக குழுமத்தின் தேசிய அவலத்தின் சுமைகளை அது நிகழும் காலத்தில் வெளிப்படுத்துவதன்மூலம் ஏதுமறியாத மக்களின் இடரின் குரலாகவும் செயல்படுவது என்ற வகையிலும் கூட்டுறவுக் கல்வி விரிவாக்கல் பணியில் தன்னை இணைத்துக்கொண்டு சமூக, கலாச்சார அறிவியல் கருத்துக்களை பரிமாறுவது ஆகிய உயரிய நோக்கங்களைக்கொண்டு இம்மாத இதழ் தொடங்கப்பட்டது என்பதனால் கூட்டு நோக்கங்களை அடைந்து கொள்வதில் ஒருமித்த கருத்துடையோர் ஒன்றிணைந்து கொள்ளவேண்டும்.

பத்திரிகை என்பது உங்களின் பங்குபற்றலுக்கானது. நீங்கள் நீங்களாக இருக்க எங்கள் கருத்துக்களினால் நீங்கள் நிறைக்கப்படக்கூடாது என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

கருத்துக்களும், நடத்தைகளும் விமர்சனத்துக்குரியது நடுவுநிலமை என்பது மட்டுமே அளவுகோல் என்பதாகும். எங்களின் எழுத்துக்களினால் நீங்கள் மகிழ்ச்சியடைவதனை விட நீங்கள் சிந்திக்க தூண்டப்பட்டால்தான் எமக்கும் எம் எழுது கோலுக்கும் வெற்றி. உலகின் அறிவுலகம் என்பது தொடர்பூடகத்தினால் ஒழுங்குபடுத்தப்படும்.

இன்றைய ஒழுங்கமைப்பில் வன்னியின் கிராமங்களும் அதன் செழுமையும், திறமையும் ஒதுங்கி ஓரங்கட்டப்படக்கூடாது. மண் வாசனையுடன் வெளிவரும் சங்கமம் உங்களின் ஒவ்வொரு மனதுடனும் சங்கமமாக வேண்டும். எழுதும் பொருள்கள் கூட முழுமையாய் பெறமுடியாத எமது பகுதிகளில் உருவம் சிறியதாக இருப்பினும் உயிர்த்துடிப்புடன் வெளிவர உங்கள் ஆதரவும் பங்குபற்றலும் வலுச் சேர்க்கும்.

### வாந்திபேதி அழிவிலிருந்து

# மக்களைக் காக்க உடனடி யுத்த நிறுத்தம் வேண்டும்!

உலகின் சுகநலம் பேணும் உலக சுகாதார அமைப்பு வன்னி மண்ணில் பரவி வரும் வாந்திபேதி நோயிலிருந்து அப்பாவி மக்களைக்காக்க உடனடியாக யுத்தநிறுத்தம் செய்ய இலங்கை அரசைக் கோர வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியம் மகஜர் மூலம் கேட்டுள்ளதாக இதன் தலைவர் திரு பொன்.விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

உலக நாடுகளின் போராட்டச் சூழ்நிலையில் சிக்கித் தவிக்கும் அப்பாவி மக்களை இலட்சக்கணக்காக அழிய வைக்கும் கொடிய நோய் வாந்திபேதி, இடம் பெயர்ந்த மக்கள் செறிந்து வாழும் வன்னிப்பகுதியில் ஒட்டுசுட்டான், மன்னார், புதுக்குடியிருப்பு, அக்கராயன் பள்ளமடு பகுதிகளில் இந்நோய் பரவியுள்ளதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அடிப்படை சுகாதார, வைத்திய வசதிகள் இன்றி காடுகள், அகதி முகாம்களில் வசிக்கும் மக்களிடையே இந்நோய் பரவாதென்பதில் என்ன நிட்சயம் எனவும் இம்மகஜரில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1990 முதலே சிறிலங்கா அரசு மருந்துத்தடை தொற்றுநோய் தடுப்பு மருந்துகளான மலத்தியோன், குளோரின் என்பவற்றுக்கான தடை என்பவற்றை ஏற்படுத்தியதுடன் மருத்துவ அணியினரை நியமிப்பதிலும் அலட்சியப்போக்கைக் கொண்டது. அத்தோடு கர்ப்பிணிகள் பாலூட்டும் தாய்மார், சிறுவர்கள் ஆகியோருக்கான போசாக்குணவான 'திரிபோஷா'வினையும் அனுப்புவதைத்தடை செய்துள்ளது.

கடந்த வருடம் மட்டும் 24 ஆயிரம் பேர் மலேரியாவாலும் 16 ஆயிரம் பேர் மூளை மலேரியாவாலும் பாதிக்கப்பட்டுள்ளனர். நாலாண்டாகியும் காலாண்டுக்கான மருந்துகள் கூட கிடைக்கவில்லை. எனவும் அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும் கிளி - மாவட்ட விளையாட்டுப்போட்டி!

இராணுவ நடவடிக்கை, இடப்பெயர்வு, மற்றும் பல்வேறு நடவடிக்கைகளால் கடந்த பல வருடங்களாக நடைபெறாதிருந்த விளையாட்டமைச்சின் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுப் போட்டி இவ்வருடம் ஸ்கந்தபுரத்தில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. எல்லே, கிறிக்கெட், உதைபந்து, கரபந்து, வலைபந்து மெய்நிகழ்வுகள் வல்லுனர் ஆகியவற்றுக்கான இப்போட்டிகள் கரைச்சி, பூநகரி, கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிடையே தெரிவு பெற்ற போட்டியாளர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றியுள்ளனர்.

மாவட்ட அரசாங்க அதிபர் திரு. தி. இராசநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இப்போட்டிகளுக்கான ஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. கனகராஜா செய்திருந்தார்.

## செய்தியாளர் நியமனம்

சங்கம பத்திரிகையின் செய்தியாளர்கள் செய்தி நிருபர்கள் ஆகியோருக்கான நியமன ஏற்பாடு ஒன்றை சங்கம ஆசிரியர் குழு ஏற்பாடு செய்துள்ளது. இவ் ஏற்பாட்டின் கீழ் சகல வகை சங்கங்களினதும் கல்வி உத்தியோகஸ்தர்களும் பதவி வழியாக சங்கம செயதியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர், இவர்களுக்கூடாக அச்சங்கங்களும் சங்கப்பரப்பிற்குட்பட்ட பொது நிறுவனங்களும் அலுவலகங்களும் தமது செய்திகளை அனுப்பி வைக்கலாம் இதனுடன் பிரதேச வாரியாக கிளி-முல்லை மன்னார்-வவுனியா மாவட்டங்களில் இருந்து செய்தி சேகரிக்கக்கூடிய 10 பொதுச் செய்தியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கூடாகவும் சங்கமத்துக்கான தொடர்புகளைமேற்கொள்ளலாம்.

---

எழுச்சி

தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவமும் இந் நிகழ்வில் இடம்பெறும்.

மன்னார் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட சர்வதேச கூட்டுறவாளர் தின விழா சிறப்புற நடைபெற்று முடிந்ததுடன் முல்லைத்தீவு கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுறவாளர் விழாவிற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்!

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் திருவையாறு படித்த வாலிபர் திட்ட விவசாயக் கூட்டுறவுச் சங்கமும் கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கமும் தத்தம் சங்கங்களுக்குரிய பொது முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளன.

இதில் கரைச்சி ப. நோ. கூ. சங்கம் சங்க எல்லைப் பரப்பில் நிரந்தர வசிப்பிடங்களைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என சங்கத் தலைவர் திரு. சி. சிவஞானம் தெரிவித்தார்.

## 3 ஆம் ஆண்டு நிறைவு விழா

பூநகரி செக்காலைக் கிராமத்தில் அமைந்துள்ள லெப்டினன் குமார் சிறுவர் போசாக்கு பராமரிப்பு இல்லத்தின் 3ஆம் ஆண்டு நிறைவு விழா 22-07-98 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

காலையில் இருந்து மாலை வரை சிறுவர்களின் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சியும் இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றது.

(இல 10)

## அன்பளிப்பு

ஜெயபுரத்தில் இயங்கும் பூநகரி மகாவித்தியாலயத்துக்கு போரூட் நிறுவனத்தினரால் ஒரு தொகுதி தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அண்மையில் மேற்படி வித்தியாலய அதிபர் திருமதி த.மகேந்திரராசா அவர்களிடம் இத் தளபாடங்கள் கையளிக்கப்பட்டது.

(இல 10)

---

முல்லை

என்பனவும், பனை மரம் ஏறுதல், கிடுகு பின்னுதல், விவசாய அறிவுப் போட்டிகள், ஆண், பெண் இருபாலாருக்குமான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி, சங்கங்களுக்கிடையே நாடகப் போட்டிகள் என வெகு சிறப்பாக நடாத்தப்பட்டு இறுதியில் பெரு விழாவாகக் கொண்டாட முல்லை மாவட்டம் தயாராகின்றது.

## கொலராத் தடுப்பு இயக்கம்!

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச கூட்டுறவு அமைப்புக்களால் கொலராத்தடுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கிராமங்கள் தோறும் கொலராத் தடுப்பு முகாம்களை அமைத்து அவற்றின் மூலம் கொலரா பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தி மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. (இல 10)

---

பார ஊர்தி

மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாக பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவை உணவுத் தொடரணியில் ஈடுபடும் 302 வாகனங்களில் 125 வாகனங்களை மட்டுமே சேவையில் ஈடுபட இராணுவம் அனுமதிக்கிறது இதனால் ஏனைய வாகன உரிமையாளர்கள் பாதிப்படைந்துள்ளனர். இவே அனைத்து வாகனங்களும் சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என கோரியே இப் போராட்டம் நடத்தப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் சார்பாக இப் பத்திரிகை துணுக்காய் தாசன் பதிப்பகத்தில் யூலை மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org